விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(ரீ-7847)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 06 ஞாயிற்றுக்கிழமை (19.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 090

## சர்வதேச நீதிபதிகளுக்கு இடம்கொடாவிடின்

# மகிந்தவுக்கு நடந்தது மைத்திரிக்கும் நடக்கும்!

## ஆட்சி மாறும் என சுமந்திரன் எம்.பி எச்சரிக்கை




(யாழ்ப்பாணம்)

தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்கிவிட்டு நிறைவேற்றாமல் விடுவது போன்று சர்வதேசத்திற்கு வாக்குறுதியளித்துவிட்டு அதனை நிறைவேற்றாமல் விடமுடியாது. இனியும் சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றத் தவறுமானால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நடைபெற்றதே தற்போதைய அரசுக்கும் நடக்கும் என தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், சர்வதேச நீதிபதிகள் இலங்கையை விசாரணை செய்வதற்கு இலங்கை அரசியலமைப்பு சட்டத்தில் எந்தத் தடைகளும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். (15-ம் பக்.)

## குடும்பஸ்தரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(குருமன்காடு)

வவுனியா நெடுங்கேணி பழையமாமடு பகுதியிலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குடும்பஸ்தரின் சடலம் நேற்று காலை 10 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கடந்த 16-ம் திகதி வியாழக்கிழமையிலிருந்து ஜெயபாலன் தர்ம

16 ஆம் பக்கம் பார்க்க....

## போதைப் பாவனையால் 35 ஆயிரம் பேர் பலி!

(கொழும்பு)

போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பாவனையினால் ஏற்படும் நோய்களினால் நாட்டில் வருடாந்தம் முப்பத்தையாயிரம் பேர் பலியாவதாக சுகாதார மற்றும் சுதேஷ வைத்தியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ்வமைச்சு மேற்கொண்ட மதிப்பீட்டிலேயே குறித்த தரவு கண்

04 ஆம் பக்கம் பார்க்க....

## வெளிநாடு செல்ல முயற்சித்து முகவரிடம் பணத்தை இழந்ததால் யாழ்.வர்த்தகர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு செல்வதற்காக முகவர் ஒருவரிடம் (ஏஜென்சி) பெருமளவு பணத்தை கொடுத்து ஏமாந்த யாழ். வர்த்தகர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று பிற்பகல் திருநெல்வேலி சந்தை பகுதியில் உள்ள கடை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் நாமகள் வீதி கொக்குவிலை சேர்ந்த சுந்தரலிங்கம் பிரிந்தன் (வயது -34) என்பவரே உயிரிழந்துள்ளார்.


15 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை பின்வாங்குமாயின் ஐ.நா சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார் சம்பந்தன்

(கொழும்பு)

மனித உரிமைகள் பேரவையின் 2015 ஜெனிவா தீர்மானத்தை அமுல்படுத்த இலங்கை அரசாங்கம் பின்வாங்குமாக இருந்தால் ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச நாடுகளும் எடுக்க வேண்டிய சகல

15 ஆம் பக்கம் பார்க்க....



## கொள்ளைச் சம்பவம் பொலிஸாரால் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல்வேறு கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்த நிலையில் நீண்ட நாட்களாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த மூவரை கொள்ளையிடப்பட்ட பொருட்களுடன்

15 ஆம் பக்கம் பார்க்க....

## காணிகளை பகிர்ந்தளிக்க சம்மதம் பன்னங்கண்டி போராட்டம் 15வது நாளுடன் முடிவுற்றது



15 ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் வாள்வெட்டு மற்றும் கொலை பொலிஸாரால் தேடப்பட்டு வந்த மூவர் கொழும்பில் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் பல்வேறு சமூக விரோத செயல்கள், வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் கொலையொன்றுடனும் தொடர்புபட்டிருந்தவர்கள் என்ற சந்தேகத்தில் ஏபொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்களில் மூவரை யாழ். பொலிஸார் கொழும்பில் வைத்து கைது செய்துள்ளனர்.

குறித்த நபர்களை கைது செய்யும் வகையில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வந்த தொடர்ச்சியான விசாரணைகளினூடாக நேற்று முன்தினம் இரவு கொழும்பில்

04 ஆம் பக்கம் பார்க்க....

## இலங். மீனவர்கள் 17 பேர் கைது!

(கொழும்பு)

புத்தளம் சின்னப்பாடு கடற்பரப்பில் நேற்று முன்தினம் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 17 உள்ளூர் மீனவர்களை, இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

மேலும் சின்னப்பாடு பகுதியில் 5 படகுகள் மூலம் மீன் பிடியில் ஈடுபட்டவர்களிடையே, முறையான சட்ட

04 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை குறித்த பிரேரணைக்கு 12 நாடுகள் இதுவரை ஆதரவு!

(ஜெனிவா)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணை வரைபுக்கு இதுவரை 12 நாடுகள் இணை அனுசரணை வழங்கியுள்ளன.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 34ஆவது கூட்டத்தொடரில் இன்னும் சில தினங்களில் குறித்த பிரேரணை நிறைவேற்றப்படவுள்ள நிலையில், இந்த வரைபுக்கு மேலும் சில நாடுகள் இணை அனுசரணை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பிரேரணைக்கு அவுஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, இஸ்

04 ஆம் பக்கம் பார்க்க....



ஜூஸ் பக்கெட் தயாரிக்கும் மெசின்
புதிய ஐடியா !
அதிக இலாபம் !




தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18, Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Kollupitya, Colombo - 03

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கே?

# உணவு தவிர்ப்பு போராட்டம் 23ஆவது நாளாக தொடர்கிறது

(மல்லாவி)

வவுனியாவில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு தீர்வு கிடைக்கும் வரையில் முன்னெடுத்திருக்கும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று சனிக்கிழமை 23ஆவது நாளாகவும் தொடர்ந்திருந்த நிலையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த போராட்டம், "காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக தீர்க்கமான முடிவை தெரிவிக்க வேண்டும்" "அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்" "பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்" ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரால் வழங்கப்பட்ட உறுதி மொழிக்கு அமைவாக கொழும்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாத நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒன்றிணைந்து மீண்டும் தமது போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரில் ஒருவர் நேரில் வந்து சாதகமான பதில் வழங்கும் பட்சத்தில் மட்டுமே தமது போராட்டத்தை நிறுத்துவதாகவும் அதுவரை தமது உறவுகளைத் தேடிய போராட்டம் தொடரும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த கவனயீர்ப்பு கண்டனப் போராட்டத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தமது போராட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தி தபாலட்டைகளை அனுப்பி வைக்கும் முகமாக பொது மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தபாலட்டைகளை தினமும் 1000 என்ற எண்ணிக்கையில் அனுப்பும் போராட்டமும் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு ஆதரவாக வடக்கு கிழக்கு பெண்கள் வலையமைப்பு, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், புதிய மாக்சிச லெனின் கட்சி, யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்கள், புகையிரத கடவை காப்பாளர் சங்கம், இனம், மதம், மொழி வேறுபாடுகள் இன்றி அனைவரும் இணைந்து ஆதரவுகளை வழங்கி இப்போராட்டத்தில் கலந்து கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (செ-15)


**LAND ROVER JEEP**

**விற்பனைக்குண்டு**

மிகவும் நல்ல நிலையில் உள்ளது. (8347)

தொடர்பு : 0779107242


## சங்கிலி அபகரிப்பு

(கரணவாய்)

வீதியால் பயணித்துக் கொண்டிருந்த யுவதி ஒருவரின் தங்கச் சங்கிலி ஒன்றினை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துச் சென்றுள்ளதாக சாவகச்சேரி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த யுவதியின் சங்கிலியை மட்டுவில் துர்க்கை அம்மன் கோவிலடியில் வைத்து பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

ஒரு பவுண் நிறையுடைய சங்கிலியை பறிகொடுத்த அவ் யுவதி சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸில் முறையிட்டுள்ளார். இது தொடர்பான புலன் விசாரணைகளை சாவகச் சேரி பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (60)

# மரண அறிவித்தல்

இறைபணியாளர்

## குமாரசாமி நந்தகோபால் (ஜோசப்)

(சீயோன் மலை ஜெபவீடு)



பிறப்பு: 1974.12.12 இறப்பு: 2017.03.17

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் பரிசங்குளம் கூளாமுறிப்பு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட நந்தன் என்று அழைக்கப்படும் குமாரசாமி நந்தகோபால் அவர்கள் 17.03.2017 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நிர்மல குமாரியின் அன்புக் கணவரும் பிரியதர்சனின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை குமாரசாமி - வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் ஆவார்,

இன்று (19.03.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் இரங்கல் ஜெபம் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் கூளாமுறிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-7846)

தகவல்:
போதகர் ஐக்கிய சங்கம்
முல்லைத்தீவு.

# கண்ணீர் அஞ்சலி



(C-7849)

## அப்புத்துரை பாலசுப்பிரமணியம்

எமது நிறுவனத்தின் சக ஊழியரான பா.சுரேந்திரன் அவர்களின் அன்புத் தந்தை அப்புத்துரை பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதோடு, அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எஸ்.பி.என். மோட்டோர்ஸ்
உரிமையாளரும், ஊழியர்களும்
145, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# ஜனாதிபதி வழங்கினால் நான் எதையும் ஏற்பேன்

## மகிந்த அமரவீர கூறுகிறார்



ஜனாதிபதியினால் வழங்கப்படுகின்ற எந்தவொரு அமைச்சையும் பொறுப்பேற்க தான் தயார் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை அமைச்சுக்கள் குறித்து அவதானம் செலுத்தியிருந்த ஜனாதிபதி, அமைச்சர் மகிந்த அமரவீரவிற்கு நாட்டிற்கு சேவையாற்றக்கூடிய வேறொரு அமைச்சுப் பொறுப்பு வழங்குவது குறித்து, கூறியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் மகிந்த அமரவீரவிடம், ஜனாதிபதியின் குறித்த உரை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்ததுடன், ஜனாதிபதியினால் வழங்கப்படும் எந்தவொரு அமைச்சையும் பொறுப்பேற்கத் தயார் என்று அமைச்சர் மகிந்த அமர வீர பதிலளித்திருந்தார். (இ-7)

# மகிந்தானந்த எம்.பிக்கு எதிராகக் குற்றப்பத்திரம்

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக சட்டமா அதிபர் ஊடாக, குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பணச்சலவை மற்றும் நம்பிக்கையை உடைத்தமை ஆகிய குற்றங்களின் கீழ், இந்தக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# கவனயீர்ப்புப் போராட்டம் தொடர்கிறது



யாழ்.வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்படும் காலவரையறையற்ற கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்து இடம் பெற்றது. (இ-64)

# காத்தான்குடியில் 9 வயதுச் சிறுமி டெங்குக்குப் பலி!



மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள காத்தான் குடி நகரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9 வயதுச் சிறுமியொருவர் டெங்குக் காய்ச்சலினால் பலியாகியுள்ளதாக காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

புதிய காத்தான்குடி நூரானியா மையவாடி வீதியைச் சேர்ந்த எம்.ஜெ. பாத்திமா ஹஸீதா எனும் சிறுமி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணியளவில் உயிரிழந்தார்.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் சமீப காலத்தில் டெங்கினால் ஏற்பட்டுள்ள முதலாவது உயிரிழப்பு இதுவாகும். அதேவேளை காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் 40 இற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகாத வண்ணம் சூழலைப்பேணுமாறு காத் தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல். நஸ்ரூத்தின் பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார். (இ-5)

# வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட கைதி நேற்றுத் திடீரென தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையிலிருந்து வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட கைதி ஒருவர் தப்பியோடியுள்ளார். இச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது. கடந்த ஜனவரி மாதம் 4 ஆம் திகதி பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியில் வைத்து பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜை ஒருவரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இச்சிறைக் கைதி தனக்கு உடல் நலம் சரியில்லை எனக் கூறியதையடுத்து நேற்றுச் சனிக்கிழமை காலை சிறைக்காவலர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்ற போது அவர் தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைதி தப்பியோடிய சம்பவம் தொடர்பில் சகல பொலிஸ் நிலையங்களிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (இ-3-60)

# 34 கோடி ரூபாய் பெறுமதியான 94 ஆயிரம் லீற்றர் ஸ்பிரிட் மீட்பு

(கொழும்பு)

அம்பாறை ஹிங்குரானையில் சட்ட விரோதமாக இயங்கி வந்த மதுபானம் தயாரிப்பதற்கான மூலப் பொருளான ஸ்பிரிட் தயாரிக்கும் நிலையத்தினை முற்றுகையிட்ட மதுவரித் திணைக்களத்தினர் அங்கிருந்து சுமார் 34 கோடி ரூபா பெறுமதியான 94 ஆயிரம் லீற்றர் ஸ்பிரிட்களை மீட்டுள்ளதாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கான மது வரித் திணைக்கள அத்தியட்சகர் என்.சுசாதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு மது வரித் திணைக்களத்தினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் போதே இவற்றினை மீட்டுள்ளதுடன், அங்கு பணி புரிந்த மூன்று இந்தியர் உட்பட 13 பேரையும் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களுக்கான மது வரித் திணைக்கள அத்தியட்சகர் என்.சுசாதரன் தலைமையில் அம்பாறை மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி எஸ்.தங்கராஜா, மட்டக்களப்பு மது வரித் திணைக்கள பொறுப்பதிகாரி எம்.செல்வராஜா ஆகியோர் அடங்கிய குழுவினரே இந்த முற்றுகையினை மேற்கொண்டுள்ளனர்.

பாரிய இயந்திரங்களுடன் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி இந்த உற்பத்திகள், மதுவரித் திணைக்களம் மற்றும் நிதியமைச்சில் பதிவு செய்யப்படாத நிலையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)



## யதுசன் சிறப்பாட்டம்

# ஒரு நாள் போட்டியையும் வென்றது யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி



யதுசனின் துல்லியமான பந்து வீச்சின் மூலம் யாழ்.மத்திய கல்லூரியை வீழ்த்தி சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி - யாழ். மத்திய கல்லூரிக்கிடையிலான 15ஆவது மட்டுப்படுத்தப்பட்ட ஐம்பது பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டி சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 38.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்கள் மட்டும் பெற்றது.


பந்து வீச்சில் யதுசன் 9.4 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டம் அற்ற ஓவர்கள் அடங்கலாக 10 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். கபில்றாஜ் 8 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 14 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். அபினாஸ் 10 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு 102 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 28.3 பந்துப்பரிமாற்றங்களில் 5 விக்கெட்டினை இழந்து வெற்றியிலக்கினை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் துலக்சன் 31 ஓட்டத்தினையும் கிருசாந்திரன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக 5 விக்கெட்டுக்களை கைப்பற்றிய சென்.ஜோன்ஸ் கல்லூரியின் யதுசன் தெரிவானார். (க)

## மரண அறிவித்தல்



### அப்புத்துரை பாலசுப்பிரமணியம்

பிறப்பு 10.09.1940 இறப்பு 18.03.2017

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை பாலசுப்பிரமணியம் 18.03.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - செல்லம்மாவின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான தருமலிங்கம் - தையல்நாயகியின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் (ஓய்வுநிலை தையல் போதனாசிரியர்) பாசமிகு கணவரும் திருமதி கனகசபை நேசம்மா, அமரர் பரமசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திரராசா, சிவராசா, செல்வராசா, யோகராசா, சகுந்தலாதேவி, இந்திராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பாலேந்திரன் (பிரான்ஸ்), சுரேந்திரன் (SPN மோட்டோர்ஸ் - யாழ்ப்பாணம்), உதயேந்திரன், கர்ணேந்திரன் (கனடா), பஞ்சேந்திரன் (CTP கோண்டாவில்), அமரர் தெய்வேந்திரன் மற்றும் கஜேந்திரன் (நகரசபை-வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காஞ்சனா, சுமதி, சுதாகினி, தர்சினி (கனடா), தர்ஷினி, மஞ்சுளாதேவி (பிரதேச வைத்தியசாலை - சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஷ்ணுதரன், விஷ்ணுகா, விஷ்ணுகாரிணி, ஜத்பன், உஷியந்தன், பவினுஷா, சுமுகாயன், காவியன், வருன், பிரவீன், டில்வீன், நிவினுஷா, கஜனுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19.03.2017 (இன்று) ஞாயிற்றுக்கிழமை பி.ப 01 மணிக்கு சிவன்கோவில் வீதி, சித்தன்கேணியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோவில் வீதி,
சித்தன்கேணி

தகவல் :
குடும்பத்தினர்

### பொலிஸாரால் தேடப்பட்டு ...

வைத்து குறித்த மூவரும் கைது செய்யப்பட்டு அதன் பின்னர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்ததாக யாழ்.பிராந்தியத்திற்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியான வாள்வெட்டுச் சம்பவங்களும், சமூக விரோத செயல்களும் இடம்பெற்று வந்திருந்தன.

இவ்வாறான நிலையில் குறித்த சம்பவங்களோடு தொடர்புடையவர்களாக முன்பு இனங்காணப்பட்ட பிறிதொரு மூவருடனும் மேற்குறித்த மூவருமாக சேர்த்து 6 பேர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்திருந்தனர்.

அந்தவகையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட மூவரும் கடந்த காலத்தில் குறிப்பாக கடந்த வருடம் யாழ்.பல்கலைகழக மாணவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு அவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து இரண்டு தினங்களில் சுன்னாகத்தில் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டு தாக்குதல் சம்பவம்,

அதேபோன்று முன்பு உடுவில் பகுதியில் இளம்குடும்பஸ்தர் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தி கொலை செய்த சம்பவம் அத்துடன் கடந்த ஜனவரி மாதம் நல்லூர் அரசடி பகுதியில் இடம்பெற்ற மோசமான வாள்வெட்டுச் சம்பவம் போன்றவற்றில் குறித்த மூவரும் தொடர்புபட்டிருந்ததாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து குறித்த நபர்களை கைது செய்யும் வகையில் விஷேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே நேற்று முன்தினம் இரவு இவர்களை கொழும்பில் வைத்து பொலிஸார் கைது செய்திருந்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட குறித்த மூவரையும் நேற்றைய தினம் காலை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்திருந்த பொலிஸார் அவர்களிடம் தொடர்ச்சியான விசாரணைகளை மேற்கொண்டதையடுத்து அவர்களை யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்திருந்ததாக யாழ்.பிராந்தியத்திற்கு பொறுப்பான பொலிஸ் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். (செ-4)

## 11ஆவது நாளாக முல்லையில்

# உறவுகளைதேடும் போராட்டம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மேற்கொள்ளப்படும் போராட்டம் நேற்று பதினொராவது நாளாகவும் தீர்வின்றி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இறுதிக்கட்ட யுத்தம் நிறைவடைந்த நிலையில் இராணுவத்திடம் சரணடைந்த மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் தொடர்பில் இதுவரை உரிய தீர்வு வழங்கப்படவில்லை என தெரிவித்து தொடர் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-281)

### இலங்.மீனவர்கள் ...

அனுமதிப்பத்திரம் எதுவும் இருக்கவில்லை என இலங்கை கடற்படை தரப்பு தெரிவித்துள்ளது.

மேலும் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து, 9 மீன்பிடி வலைகள் 11 டிஞ்சிஸ்கள் மற்றும் 5 படகுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், கைது செய்யப்பட்டவர்கள் புத்தளம் மீன்வளத்துறை உப பணிப்பாளரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருவதாகவும் கடற்படை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### இலங்கை குறித்த பிரேர ...

ரேல், ஜப்பான், மொன்டனேகுரோ, நோர்வே, மெசடோனியா, பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் வட அயர்லாந்து ஆகிய நாடுகள் இணை அனுசரணை வழங்கியுள்ளன. இந்த பிரேரணையுடன் சம்பந்தப்பட்ட நாடான இலங்கையும் இந்தப் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்க முன்வந்துள்ளது.

அந்தவகையில் இந்தப் பிரேரணை இம்முறையும் வாக்கெடுப்பின்றி ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்படும் சாத்தியம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக, இலங்கையின் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் முன்னெடுப்பதற்கான இந்தப் பிரேரணைக்கு உறுப்புநாடுகள் இணை அனுசரணை வழங்க வேண்டுமென அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவித்தல் என்ற தலைப்பின் கீழான இந்தப் பிரேரணை ஐ.நா தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்துக்கு மேலும் இரண்டு ஆண்டு கால அவகாசத்தை வழங்கியுள்ளது.

அத்துடன், 2015ஆம் ஆண்டு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்தப் பிரேரணை வலியுறுத்தியுள்ளது. (செ-11)

### போதைப் பாவனையால் ...

டறியப்பட்டுள்ளது.

மேலும் உலகளாவிய ரீதியில் புகைத்தலினால் மாத்திரம் ஏற்படும் நோய்களினால் பாதிக்கப்பட்டு வருடாந்தம் மூன்று கோடிப் பேர் வரையில் பலியாகின்றனர். எனவே புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையில் ஏற்படும் நோய்களினால் பாதிக்கப்படுபவர்களின் மருத்துவச் செலவுகளுக்கு அதிகளவான நிதி செலவிடப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

# சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்; முதலீட்டாளர்களை கோரும் ரவி

பொருளாதார சுபீட்சத்தை நோக்கிச் செல்லும் இலங்கையில் உருவாகும் வர்த்தக சந்தர்ப்பங்களை தவற விடாதீர்கள் என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உலகில் உள்ள சகல முதலீட்டாளர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார். -

ஹொங்கொங்கில் நேற்று முன்தினம் ஆரம்பமான இலங்கை முதலீட்டு மாநாட்டில் பிரதான உரையை நிகழ்த்தும் போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் இதுவரை இருந்து வந்த பாரம்பரிய விவசாயத்தை வர்த்தக விவசாயத்துறையாக மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளதன் மூலம் பல்வேறு முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மேலும் கொழும்பு சர்வதேச நிதியியல் நகரத்தை விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்க உள்ளதால், நாட்டின் பூகோள இருப்பிடத்தை பிரயோகத்திற்கு எடுத்துக்கொண்டு அதில் வர்த்தகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தெற்காசிய பிராந்தியத்தில் வாழும் பெரும் எண்ணிக்கையிலான சனத்தொகைக்கு விநியோகத்தை வழங்க முதலீடுகளை செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கடும் பொருளாதார நெருக்கடியில் நாடு

(கொழும்பு)

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நாட்டின் தலைவர்களும் நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவுவதாக ஏற்றுக்கொண்டுள்ளனர் என முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இரண்டு பிரதான கட்சிகளின் ஆட்சியாளர்களை மாற்றாது இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

பொருளாதார பிரச்சினை காரணமாக மக்களும் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


# கண்ணீர் அஞ்சலி



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும்
கொக்குவில் மற்றும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் **செல்லத்துரை விக்கினராஜா**

தாயின் மடியில்:- 13.09.1949

பூமித் தாயின் மடியில்:- 12.03.2017



கலங்காத நெஞ்சுடனே காலமெல்லாம் வாழ்ந்திடுவாய்
பிள்ளைகள், துணைவியோடு அவர்தம் வளம் நிறைத்திடுவாய்
சுற்றம் எல்லாம் குலாவி குளிர்மையாகப் பேசிடுவாய்
வளங்கள் பல கண்டு வாழ்வாய்
என வாயாரப் புகழ்ந்திருந்தோம்
பொறுக்காத காலனவன் உன் நல்லுள்ளம் கண்டு
பொறுக்கி எடுத்தனனோ நாம் துயருற...!
ஆளுக்கொரு தேதி வைத்து
ஆண்டவன் அழைப்பான் - இது நியதி
என்ற மன ஆறுதலுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
கந்தரோடை அருளானந்தப் பிள்ளையாரை
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.





ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருறும்

(8343)

சு.குணசேகரம் (கண்ணன்) குடும்பம்-கந்தரோடை,
பு.ஜீவானந்தன் குடும்பம்- கொக்குவில்.


# இராசி பலன்

19.03.2017
(பங்குனி 06, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
சப்தமி முழுவதும்
கேட்டை முழுவதும்
சுபநேரம் 9.18-10.48மணிவரை
இராகுகாலம் 4.48-6.18மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத,சுக் | செவ் | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கார்த்திகை | | |
| | | | ராகு |
| | சனி<br>சந் | | குரு |

**மீனம்**: விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள் , குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும்.

**மேடம்**: யோசித்து செயற்பட வேண்டிய நாள், குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**இடபம்**: கடன் தொல்லைகள் குறையும், நம்பிவந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

**மிதுனம்**: வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள், பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நன்மைகள் நடை பெறும் நாள்.

**கும்பம்**: வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், நண்பர்கள் பக்க பலமாக இருப்பர், பயணங்கள் எண்ணியபடியே கைகூடும்.

**கடகம்**: நீண்ட நாளைய விருப்பமென்று கைகூடும் வாய்ப்புண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் காண்பீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்**: வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்**: பெண்கள் வழியில் பெருமைப்படும்வகையில் உதவிகள் கிடைக்கலாம், பெற்றோர் வழியில் அனுகூலமுண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

**தனுசு**: உடல் நலனில் சிறு பாதிப்புக்கள் ஏற்பட்டு அகலும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்**: உறவினர் பகை அகலும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**துலாம்**: பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம், புதிய பாதை புலப்படும் நாள் , தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**கன்னி**: எப்படி நடக்கலாமென நினைத்த காரிய மொன்று நல்லவிதமாக நடை பெறலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும் , செல்வ நிலை உயரும் நாள்.

# கூட்டுறவுத்துறை அழிவடையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் முன்னோர்களின் தன்னலமற்ற சேவையால் கட்டியெழுப்பப்பட்டதும் எமது பாரம்பரியங்களோடு ஒன்றிணைந்த கூட்டுறவுத்துறை அழிவடைந்து போகும் ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளது. எனவே அதனை மீண்டும்கட்டியெழுப்ப தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும் என யாழ்.மாவட்ட கூட்டுறவுத் துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.வீரசிங்கம் கட்டடத் தொகுதி 4 ஆம் மாடியில் நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூட்டுறவாளர்களுக்கும் இடையில் கலந்துரையாடல்கள் ஒன்று நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

எமது மாவட்டத்தில் 24 பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் செயற்படுகின்றன. சுமார் 2 இலட்சம் வரையான அங்கத்தவர்களையும் ஆயிரக்கணக்கான பணியாளர்களையும்கொண்ட அமைப்பாகும். இப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த 30 ஆண்டு கால போர் அனர்த்தங்களின் போது மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக அது ஆற்றிய பணிகளை அனைவரும் அறிவார்கள். ஆனால் தற்போதுமறந்துவிட்டார்கள்

பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு பொருள் இழப்பு, வாகனஇழப்பு, கட்டட இழப்பு என எமது மாவட்டத்தில் உள்ள 24 சங்கங்களிற்கும் கிட்டத்தட்ட 400 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த இழப் பீடு இன்று வரை ஈடுசெய்யப்படவில்லை. தொடர்ச்சியான இழப்புக்களால் சங்கங்கள் தொடர்ந்து தொழிற்படுவதற்கான நிதி வலுவை இழந்துநிற்கின்றன.

அரசினால் தற்போது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்கு சங்கங்கள்பொருட்களை விற்பனை செய்ய முடியாத நிலை. இதற்கு குறித்த விலைக்கு பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்ற விலையில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலையே காரணம்.

இக்கட்டுப்பாட்டு விலையால் சங்கங்களும் பொது மக்களும் பாதகமான சூழலையே எதிர் கொள்கின்றனர். மாறாக கறுப்புச் சந்தை வலுப்பெறுகின்றது. இந்த நிலைமையை மாற்ற கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் ஊடாக அல்லது வேறு ஒரு வழிமுறை ஊடாக அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களை கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விநியோகம் செய்வதற்கு வசதி செய்து தருதல் வேண்டும்.

விவசாயிகளிடமிருந்து நியாய விலைக்கு நெல்லை கொள்வனவு செய்து அரிசியை நியாய விலைக்கு மக்களுக்கு விநியோகித்து அரிசியின் சந்தை விலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான வாய்ப்பை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களிற்கு பெற்றுத் தருதல். கடந்த காலங்களில் நெல் கொள்வனவுக்கு கணிசமான முற்பணம் அரச அதிபர் ஊடாக சங்கங்களுக்கு வழங்கப்பட்டது தற்போது இந்த நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 3 பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கனவே அரிசி ஆலையை சிறப்பாக நடத்தி வருகின்றது. அரசாங்கம் இதற்கு ஆதரவு வழங்குமாயின் அரிசி உற்பத்தி, விற்பனையில், "கோப் அரிசி" என்ற ஒரு தனி குறியீட்டை கூட்டுறவுச் சங்கங்கள் தனதாக்கிக்கொள்ள முடியும்.

தற்போது பல நுண் நிதி நிறுவனங்களின் வருகையும், மக்களின் கடன் சுமைகள் பற்றியும் தாங்கள் அறிவீர்கள். காரணம் கவர்ச்சிகரமான பிரசாரம், அதிகவட்டி போன்றன. மக்களுக்கு நியாய வட்டிக்கு அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு கடன்களை நவீன மயப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இவை உடனடியாக மேற்கொள்ள வேண்டியது.

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தற்போதைய வியாபார சந்தையில் சில பொருட்களின் விநியோக முகவர் அந்தஸ்த்தை பெற்றுக்கொள்ள வாய்ப்புக் கிடைக்குமாயின் சிறப்பாக அமையும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கலந்துரையாடலில், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம், யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், யாழ்.மாவட்ட புடவை நெசவாளர் சங்கம், யாழ். மாவட்டஅபிவிருத்தி கூட்டுறவு சங்கம், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்கள், யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம், ஆகியன உட்பட யாழில் இயங்கும் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் தமது கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

பிரதானமாக வடக்கில் பால் உற்பத்தி சிறந்த முறையில் நடைபெறுகின்ற போதிலும் சந்தைப்படுத்துதல் என்பது கடினமாக உள்ளது. இந்தியாவில் வீட்டுக்கு வீடு பால் என்பது போன்று பக்கெற்றுக்களில் பால் அடைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றது. ஆனால் இங்கு பக்கெற்றுக்களில் பால்விநியோகம்செய்ய முடியாதுள்ளது. ஆகவே இதனை நடைமுறைப் படுத்துவதற்கு பால் பதனிடுதல் தொழிற்சாலை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.


இந்த கலந்துரையாடல்களில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு பதில் அளித்த பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மூடியபொருளாதார துறைக்குள் உருவாக்கப்பட்ட கூட்டுறவுத் துறை தற்போது திறந்த பொருளாதாரத்தில் போராட வேண்டிய நிலைஉள்ளது. எனவே நவீன முறைக்கு ஏற்றது போல் எமது செயற்பாடுகளையும் மாற்றியமைக்க வேண்டும் என கருத்து தெரிவித்தார். இந்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் மற்றும் கட்சிப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)


## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின், வேலணை பிரதேச செயலர் பிரிவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தொழில் அதிபர் எஸ்.பி.சாமி தலைமையில் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)

## வீதிகள் சீரின்மையால் மாவை மக்கள் சிரமம்





தெல்லிப்பழை கொல்லன் கலட்டி, மாவை கலட்டி கிராம மக்கள் வீதிகள் சீரின்மையால் சிரமப்பட்டு வருகின்றனர். இக்கிராமத்தின் சிறு வீதிகள் 5 கிலோ மீற்றர் நீளம் கொண்டதும் கிராமத்தின் பிரதான வீதியான மாவை கலட்டியிலிருந்து நகுலேஸ்வரா வீதி வரையான 2 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதியும் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

இதனால் 200இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது அன்றாட கடமைகளை ஆற்றுவதில் சிரமத்தையும் இக்கிராம மாணவர்கள் மழை காலத்தில் தமது வெண்ணிறச் சீருடையில் சிவப்புச் சேற்று மண் ஒட்டிய நிலையில் பாடசாலை செல்ல வேண்டிய நிலையும் காணப்படுவதாககவலைவெளியிட்டுள்ளனர். அத்தோடு தமது கிராமத்திற்கு மிக விரைவில் வீட்டுத்திட்டம் வருவதற்குரிய சாத்தியம் காணப்படுவதால் கட்டுமானப் பொருட்களை கொண்டு வருவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதியைத் திருத்தம் செய்து தருமாறு மக்கள் கேட்டுள்ளனர். (இ-3,23)

## இரு துறைகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை

### கடற்றொழிலாளர்கள் கவலை

வலிகாமம் வடக்கு, தையிட்டி வடக்கு, ஊறணி துறையில் 02 துறைகள் இதுவரை கடற்படையால் விடுவிக்கப்படவில்லை எனவும் ஊறணித் துறையை அண்டிய கடற்கரையோரமாக 80 கடற்றொழிலாளர் குடும்பங்களின் காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை என கடற்றொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தாம் தற்போது தையிட்டி வட்க்கில் உறவினர், நண்பர்களின் காணிகளில் கொட்டகை அமைத்து தற்காலிகமாக வசித்து தொழில் நேரங்களில் மட்டும் கடற்கரைக்கும் சென்று தொழில் செய்யும் நிலைமையும் காணப்படுகிறது எனவும் 04.01.2016 தையிட்டி வடக்கு ஊறணி விடுவிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டபோதிலும்ஊறணி துறைகளை அண்டிய நிலப் பகுதி இதுவரை விடுவிக்கப்படவில்லைஎன்பதே உண்மை எனவும் தெரிவித்தனர். கடற்றொழில் குடும்பங்கள் ஊறணி கடற்கரைக் கிராமம் விடுபடாததால் தொழில் நடவடிக்கைக்கு பெரிதும் அல்லற்படும் நிலை காணப்படுகிறது என கடற்றொழிலாளர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-3-23)

## ஒன்றுகூடல்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதியோர் சங்க மண்டபத்தில் இடம்பெறும். அனைத்து சிரேஷ்டப் பிரஜைகளையும் தவறாது வருகை தருமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (இ-3)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம் கன்னியர் மட வீதி பட்டபிளை (batterfly) விளையாட்டுக்கழக புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில் தலைவராக எம்.சங்கர்,உபதலைவராக எம்.டெல்சன், செயலாளராக ஆர்.ராதா, உப செயலாளராக ரி.கமல்ராஜ், பொருளாளர் ஏ.வலண்டன், ஆலோசகராக எஸ்.ரவீந்திரன், கணக்காய்வாளராக வி.சசிக்குமார், அணித் தலைவராக ரி.ஜெயசுதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3)

## அலங்கார உற்சவத்தை முன்னிட்டு பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் அரசடி ஞானவைரவர் சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும்பரிசளிப்புவிழாவும்கலை நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்கத்தில் இம்பெறும். அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.போதனாவைத்திய சாலை வைத்திய கலாநிதிகள் திரு.திருமதி மயூரன், யாழ். பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி கலையமுதா நரேந்திரன், யாழ்.மாநகர சபை பொதுசனத் தொடர்பு உத்தியோ கத்தர் ச.லோகசிவம் ச.பாலசுப்பிரமணியம், யா/வண். ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய ஆசிரியை திருமதி. லோ.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)



யாழ். பிராந்திய கடல் தீயணைப்பு பயிற்சி நிறுவனத்தால் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி மாணவர்களுக்கு அண்மையில் யாழ். மாநகர தீயணைப்பு படைப்பிரிவில் பயிற்சி வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.





## மண்டைதீவில் சுற்றுலா மையம்

சுற்றுலா அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மண்டைதீவில் 46 கோடி ரூபா செலவில் சுற்றுலா மையமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. வேலணை பிரதேச செயலகத்தின் மேற்பார்வையில் வேலணை பிரதேச சபையினரால் இந்த சுற்றுலா மையம் அமைக்கும் வேலைகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## 'இளங்கதிர்' பாடசாலை கலாசார வேலைத்திட்டம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலை பாலர் பிரிவு,கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்படவுள்ளன. மலரும் ஓசையுடன் கூடிய புதிய ஆக்கபூர்வ பாடல் போட்டி, கலை மற்றும் கலாசார-வீடியோ படைப்புக்கள் நிர்மாணம், எமது உலகம்-சிறுவர் கதை நூல், சிறந்த பாடசாலை சஞ்சிகைத் தெரிவுப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன. விண்ணப்பங்கள், சுற்றுநிருபம் என்பன பாடசாலை அதிபர்களுக்கு எம்மால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. போட்டியில் பங்கு கொள்ளும் மாணவர்கள் தங்களின் ஆக்கத்தை எதிர்வரும் 2017.07.25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் கையளிக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யு.யசோதா அறிவித்துள்ளார். (இ)

# சிறுவர்களுக்கு பணம் வைப்பு



தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். மாவட்ட ஓய்வூதியர் நலன் புரிச் சங்கத்தால் பெற்றோரை இழந்து வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மூன்று சிறுவர்களுக்கான 5000 ரூபா பணம் வைப்பு நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி புதன்கிழமை கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் இடம் பெற்றது. (இ-60)

## தமிழக பட்ஜெட்டில்

# இலங்கைத் தமிழருக்காக ரூ.116 கோடி நிதி ஒதுக்கீடு

தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதோடு, அகதிகளின் நலனுக்காக 116 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாட்டின் 2017-18 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை நேற்று முன்தினம் தமிழக சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு, எடப்பாடி பழனிச்சாமி அரசின் சார்பில், தாக்கல் செய்யப்படும் முதலாவது வரவு-செலவுத் திட்டம் இதுவாகும்.

இந்த வரவு-செலவுத்திட்டத்தில் உரையாற்றிய ஜெயக்குமார், இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டும் என்றும் இலங்கைத் தமிழ் அகதிகளின் நலனுக்காக 116 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் தெரிவித்தார். (இ-12)


தெய்வத்தின் திருப்பாதத்தில்!

அனுமதி இலவசம்!

# ஆசீர்வாத பெருவிழா!

இயேசு ஜீவிக்கிறார் பணியின் 39 ஆவது சுவிசேஷ மாநாடு!

அன்புடையீர்!

அண்டசராசரத்தை ஆளுகை செய்யும் கடவுள் ஒருவர் இருக்கிறார். அவருடைய வல்லமையை அளவிட முடியாது. அவரே தொடக்கமும் முடிவுமானவர். ஜீவியத்தில் நோய், துன்பம், கண்ணீர், சஞ்சலம் தோஷங்களிலிருந்தும் விடமுடியாத பழக்கவழக்கம், பாவ வாழ்க்கை, பொல்லாத ஆவிகளின் கட்டுகள், செய்வினை, மாந்திரீகம், பில்லிசூனியத்திலிருந்தும் விடுதலை பெற இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நோக்கி வருகிறது. இச்சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். இன்றே அற்புதத்தின் நாள், இன்றே இரட்சண்ணியத்தின் நாள், இன்றே அனுக்கிரகத்தின் நாள், உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

2017 மார்ச்
24,25,26
மாலை 5.00 மணி

தெய்வீக சுகத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள வாருங்கள்!

இடம்:- மாநகரசபை மைதானம், வவுனியா

செய்தி:- கலாநிதி M.R. இராஜேந்திரம் மற்றும் C.V. இராஜேந்திரம்

(8339)

39 வது அகில இலங்கை வேதாகம கருத்தரங்கு

மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 முதல் 3.00 மணிவரை.

இடம்:- இல. 18, டேங்க் ஒழுங்கை, இரம்பைக்குளம், வவுனியா.

மேலதிக தொடர்புகளுக்கு:- இயேசு ஜீவிக்கிறார் ஆலயம் 401, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15, தொ.இ. 011 252 2608



## மணமகள் தேவை

குறுகிய காலத்தில் விவாகரத்துப் பெற்றவர்.
யா/இந்து உயர்குல வேளாளர் 1979 கார்த்திகை 4-சூரியன் செவ்வாய் 11 இல் கிரகபாவம் 70. பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருக்கு படித்த, பண்பான மணமகள் தேவை.
தொடர்பு-076 662 4880.
(8144)



## மணமகள் தேவை

கொழும்பு வெள்ளவத்தையில் வசிக்கும் கட்டட பொறியியலாளராக பணியாற்றும் றோமன் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த 38 வயதுடைய மனமகனுக்கு படித்த அழகான மெல்லிய மணமகள் தேவை.
077 444 0277
(8341)



## Study in Latvia ( Europe)
Schengen Visa( Valid for 25 Countries)



Why Study In Latvia?

* Bachelors / Master / Doctoral level
* Government Approved University
* English Medium
* IELTS Not Required
* Easy Visa procedures
* Very low course fee
* Low cost of living
* 20 Hours part time Allowed

Admission open for Sep- 2017
Spot Admission April-2017

***** Italy visit visa Available *****

ics Study Overseas

Admission Help line
076 7013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road, Colombo - 06

(சி-7840)



## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி
Dr.S.S.சர்மா குருஜீ
077 784 1558

(8168)


## இரு மாணவர்கள் நீரில் மூழ்கிப்பலி!

(கொழும்பு)

கம்பஹா, கெடவல அணைக்கட்டில் நேற்று குளிக்கச் சென்ற, யக்கலை ஆயுர்வேத மருத்துவ பீட மாணவர்கள் 8 பேரில், இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீரில் மூழ்கிய இருவரில் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் கண்டெடுத்துள்ளதாகவும், மற்றவரைத் தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மாணவன் 21 வயதையுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 20 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/3461 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 2 சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4870 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 21<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BBA, SLAS/ அரசதொழில்<br>தொ.இ: B/3467 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 33 சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்:வியாபார முகாமைத்துவம்<br>தொ.இ: G/4942 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா:28<br>உயரம்: 5'8'<br>தகைமை/தொழில்:BSc/ அரசதொழில்<br>தொ.இ: B/3475 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/4944 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 39 செவ் 4 இல்<br>உயரம்: 5'6''<br>தகைமை/தொழில்:BSc, MSc/ விரிவுரையாளர்<br>தொ.இ: B/3479 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 46 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/4976 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.


# குப்பை போட வேண்டாம்

அறிவிப்பு பலகை சேதம்



(கரணவாய்)

வதிரி சந்திக்கு அருகாமையாக கரவெட்டி பிரதேச சபையால் நடப்பட்டிருந்த குப்பை போட வேண்டாம் என்ற அறிவுப் பலகை விசமிகளால் பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் வீதிக்கு அருகாமையில் இவ் விடத்தில் குப்பை போட வேண்டாம் என கரவெட்டி பிரதேச சபையால் அறிவிப்புப் பலகை நடப்பட்டிருந்தது. சில தினங்களுக்கு முன் இவ் அறிவிப்புப் பலகையை விசமிகள் பிடுங்கி எறிந்துள்ளனர். (இ-3-60)

# தகவல் அறியும் சட்டமும் கணக்காய்வு சட்டமும் நாட்டின் இரு முக்கிய விடயங்களாகும்-ஜனாதிபதி

(கொழும்பு)

தகவல் அறியும் சட்டமும், கணக்காய்வு சட்டமும் நாட்டின் அரச சேவையிலும், அரச நிதி முகாமைத்துவத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய இரு சந்தர்ப்பங்களாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் நாட்டின் அரசியலிலும், அரச சேவை உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் வெளிப்படைத் தன்மை மற்றும் ஒழுக்கம் என்பவற்றை ஏற்படுத்துவதற்கான விதிமுறைகளும், சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டு வருவதுடன் அவற்றுள் சில எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் 34 ஆவது ஆண்டிற்கான வருடாந்த ஒன்று கூடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் அரச சேவையில் போன்றே ஏனைய துறைகளிலும் ஏற்பட்டுவரும் இந்த மாற்றமானது பொது மக்களின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கும் சமூகத்தின் நிலவுகைக்கு அவசியமான அம்சமாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



அபிவிருத்தி செயற்பாடுகளின் போது அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையில் காணப்பட வேண்டிய தொடர்பினை இதன்போது மீண்டும் வலியுறுத்திய ஜனாதிபதி, அரசியல்வாதிகளுக்கும், அரச அதிகாரிகளுக்கும் இடையில் காணப்படவேண்டிய தொடர்பில் ஏற்படும் குறைவானது நாட்டின் அபிவிருத்திக் குறிக்கோள்களில் பின்னடைவை ஏற்படுத்தும்.

எனவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம், அமைச்சுக்களினதும், திணைக்களங்களினதும் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் என்பவற்றை நடத்துதல் தொடர்பான வருடாந்த கால அட்டவணையை தயாரிக்க ஜனாதிபதியின் செயலாளருக்கு தான் ஆலோசனை வழங்கியுள்ளதுடன், அது தொடர்பாக அமைச்சரவைக்கும் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி இதனூடாக இவ்வாறான கூட்டங்கள் நடத்துதல் தொடர்பாக ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்து உரிய நேரத்தில் ஒன்று கூடி தேவையான தீர்மானங்களை மேற் கொள்வதன் மூலம் நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளை வினைத் திறனாகவும் முறையாகவும் முன்னெடுக்க முடியும் என்றும் தெரிவித்தார. (இ-3).

# புனர்வாழ்வு நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளன-சாகல

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் கலந்து கொண்டுள்ள டில்லியில் நடைபெறும் சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டிலேயே சட்டம் ஒழுங்கு அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியத் தலைநகர் டெல்லியில் கடந்த 14 ஆம் திகதி முதல் நடைபெறும் மூன்றாவது சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கலந்துகொண்டுள்ள சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகலரத்நாயக்க, தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேருக்கு வெற்றிகரமாக புனர் வாழ்வு அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கைக்கு விஜயம் செய்து அறிக்கை யொன்றை தயாரித்திருந்த சிறுபான்மையினத்தவர்களின் உரிமைக்கான ஐ.நாவின் விசேட பிரதிநிதி ரீட்டா ஐசாக் நாடியா, இலங்கையின் புனர் வாழ்வு நடவடிக்கைகள் முன்னாள் போராளிகளை எதேச்சதிகாரமாக் தடுத்து வைக்கும் நடவடிக்கையாகவே அமைந்திருப்பதாகக் குற்றம் சாட்டியிருந்தார் இலங்கையில் 30 வருடகாலமாக நீடித்த உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு எட்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில் ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி ஆகிய இரண்டு முக்கிய விடையங்களை முன்னிலைப் படுத்தியே அரசாங்கம் அனைத்து செயற்திட்டங்களையும் முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் சாகல உறுதியளித்துள்ளார். (இ-7)

# ஐ.தே.கவிற்குள் மீண்டும் சர்ச்சை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு பிரதித் தலைவர் ஒருவரை நியமிப்பது தொடர்பான சர்ச்சை மீண்டும் தலைதூக்கியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பான சர்ச்சை மீண்டும் எழுந்துள்ளது.

இக்கூட்டத்தில் ஐ.தே.கட்சிக்கு மூன்று பிரதித் தலைவர்கள் நியமிக்கப்படுவதற்கு எதிராக கருத்துக்கள் எழுந்துள்ளன. இது தொடர்பில் அடுத்த வாரமும் நீண்ட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக அக் கட்சி வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது, கட்சியின் பிரதித் தலைவர் குறித்து பெரும் சர்ச்சை கட்சிக்குள் எழுந்தது. இருப்பினும், ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமராக நியமிக்கப்பட்டதன்



பின்னர், கட்சியின் பிரதித் தலைவர் தொடர்பான சர்ச்சை எழுந்துள்ள முதற்தடவை இதுவாகும் என கூறப்படுகின்றது. (இ-7)

# வடக்கில் மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6மணிவரை யாழ்.பிரதேசத்தில் இரும்புமதவடி, மனோகரா, சக்களாவத்தை, தேவரையாளி, திக்கம், புறாப் பொறுக்கி, அண்ணாசிலையடி, மண்டான், நவரட்ண ராஜா வீதி, கோவில் வீதி, எம்.எஸ் வீதி, குட்செட் வீதி, குளங்கரை வீதி, கே.கே. எஸ் வீதியில் (நாச்சிமார் கோவிலிலிருந்து கொக்குவில் சந்தி வரை), கோம்பையண்மணல், சிவப்பிரகாசம் வீதி, தலையாளி, சபாபதி வீதி, பூநாரி சந்தி, நந்தாவில், கொக்குவில் சந்தி, ஞானபண்டிதா, பிரம்படி, மாவடி, மருத்துவபீடப் பிரதேசம், பொம்மை வெளி, நாவாந்துறை ஆகிய இடங்க ளிலும் கிளிநொச்சி பிர தேசத்தில் சிலாவத்தை, உடுப்புக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், அந் தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத் தில் முருங்கனிலிருந்து தலை மன்னார் வரை, முருங் கனிலிருந்து சிலாவத்துறை, CECB, முள்ளிக்குளம் கடற் படை முகாம், சிலாவத் துறை கடற்படை முகாம், வங் காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம் பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக் களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப் படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ்தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பம் கவுஸ், மீன்பிடிசமாசம், அந்தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலை மன்னார் கடற்படை முகாம், சீனந் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)




- 1279 - யாமென் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் மங்கோலியாவின் வெற்றியுடன் சீனாவில் சோங் அரச பரம்பரை முடிவுக்கு வந்தது.
- 1861 - நியூசிலாந்தில் முதலாவது தரனாக்கி போர் முடிவுக்கு வந்தது.
- 1915 - புளூாட்டோவின் ஒளிப்படம் முதற்தடவையாக எடுக்கப்பட்டது. ஆனாலும் அது கோளாக கருதப்படவில்லை.
- 1918 - நேர வலயங்களை ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் நிறுவி பகலொளி சேமிப்பு நேரத்தை அங்கீகரித்தது.
- 1932 - சிட்னி துறைமுகப் பாலம் திறந்து வைக்கப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: நாசி படைகள் ஹங்கேரியைக் கைப்பற்றினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானில் யூஎஸ்எஸ் பிராங்கிளின் என்ற அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதில் 800 பேர் கொல்லப்பட்டனர்.
- 1972 - இந்தியாவும் வங்காள தேசமும் நட்புறவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- 1982 - போக்லாந்து போர்: ஆர்ஜெண்டீனியர்கள் தெற்கு ஜோர்ஜியா தீவில் தரையிறங்கினர்.
- 1988 - இந்திய அரசிடம் நீதி கோரி உண்ணா நோன்புப் போராட்டத்தை அன்னை பூபதி தொடங்கினார். நீதி வழங்காத நிலையில் ஏப்ரல் 19 இல் சாவைத் தழுவினார்.
- 2002 - ஐக்கிய அமெரிக்காவின் ஆப்கானிஸ்தான் மீதான படையெடுப்பு முடிவுக்கு வந்தது.
- 2004 - தாய்வான் பிரதமர் சென் ஷுயி-பியான் சூட்டுக் காயப்படுத்தப்பட்டார்.

பிறப்புகள்

- 1871 - இசுக்கோஃபீல்ட் ஹை, ஆங்கிலேயத் துடுப்பாட்ட வீரர் (இ. 1921)
- 1906 - அடோல்வ் ஏச்மென், செருமானிய சுத்ஸ்டாப்பெல் அதிகாரி (இ. 1962)
- 1922 - ஹிரூ ஓனோடா, சப்பானிய இராணுவ வீரர் (இ. 2014)
- 1928 - விக்கிரமன், பத்திரிகையாளர், எழுத்தாளர் (இ. 2015)
- 1943 - மார்யோ மோன்டி, இத்தாலிய அரசியல்வாதி, இத்தாலியப் பிரதமர்
- 1948 - வின்சென்ட் வேன் டெர் பைல், தென்னாப்பிரிக்கத் துடுப்பாட்ட வீரர்
- 1979 - ஹேதோ துர்க்கொக்லு, துருக்கிய கூடைப்பந்து வீரர்
- 1984 - தனுஸ்ரீ தத்தா, இந்திய நடிகை

இறப்புக்கள்


- 1406 - இப்னு கல்தூன், துனீசிய வரலாற்றாளர் (பி. 1332)
- 1950 - எட்கர் ரைசு பர்ரோசு, அமெரிக்க எழுத்தாளர் (பி. 1875)
- 1982 - ஆச்சார்ய கிருபளானி, இந்திய வழக்கறிஞர், அரசியல்வாதி (பி. 1888)
- 1998 - எலம்குளம் மனக்கல் சங்கரன் நம்பூதிரிப்பாட், இந்திய அரசியல்வாதி, 1வது கேரள முதல்வர் (பி. 1909)
- 2008 - ஆர்தர் சி. கிளார்க், அறிவியல் புதின எழுத்தாளர் (பி. 1917)
- 2008 - ரகுவரன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர் (பி. 1948)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 100 | 30 | 60 | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 80 | 100 | 100 | 120 |
| தக்காளி | 50 | 100 | 40 | 50 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 50 | 70 | 80 | 80 |
| கோவா | 30 | 60 | 20 | 30 | 40 | 40 |
| கரட் | 80 | 60 | 50 | 40 | 60 | 100 |
| பூசணி | 50 | 60 | 30 | 60 | 50 | 60 |
| புடோல் | 100 | 60 | 50 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 140 | 80 | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 75 | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 150 | 200 | 150 | 160-200 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 140 | 80 | 100 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | - | 60 | 60 | 120 |
| பயற்றங்காய் | 100 | 200 | 90 | 140 | 120 | 160 |
| லீக்ஸ | 50 | 100 | 60 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 50 | 100 | 40 | 50 | 50 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 80 | 140-200 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 400 | 450 | 400 | 800 |
| போஞ்சி | 50 | 200 | 50 | 100 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 10 | 40 | - | 30 |
| கீரை-1பிடி | 40 | 20 | 20 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 60 | 50 | 100 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 20-70 | 70 | 70 | 50-60 |
| இராசவள்ளி | 200 | 300 | 180 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 100 | 50 | 40 | 80 | 60 | 160 |
| முள்ளங்கி | 50 | 50 | 25 | 50 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 15 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | - | 60 | 50 | 60 | 80 | 60 |

# மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன எழுதிய ‘நந்திக்கடலுக்கான பாதை’ நூல் போர்க்குற்றங்களை நிரூபிக்கிறது

## அமைச்சர் மங்கள சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன எழுதியுள்ள ‘நந்திக்கடலுக்கான பாதை’ நூல், இலங்கை ஆயுதப் படைகளுக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகளை படையினர் எவ்வாறு கட்டவிழ்த்து விட்டிருந்தனர் என்பது குறித்து ‘நந்திக்கடலுக்கான பாதை’ நூலில் கூறப்பட்டுள்ள விடயங்களை அவர் மேற்கோள்காட்டி குறிப்பிட்டார்.

படையினர் தமது சகாக்களின் இழப்புக்குப் பழி வாங்கும் விதத்தில், பொதுச் சொத்துக்களை அழித்ததாகவும், அதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதது அவமானமாக இருப்பதாகவும் கமால் குணரத்ன குறிப்பிட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு போர்க்குற்றங்களுக்கு உத்தரவிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தான் உள்நாட்டு, வெளிநாட்டு மனித உரிமை அமைப்புகள் கோருகின்றன. குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பது தவறல்ல." என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கடும் நிபந்தனைகளுடன் ஜாலியவுக்குப் பிணை



அமெரிக்காவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரம சூரிய, கடும் நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜாலியவுக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவரை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஜாலிய விக்கிரம சூரியவிற்கு சுகயீனம் காரணமாக அவர் சிகிச்சையை பெற்றுக் கொள்ள வேண்டும் என நீதிமன்றில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட நீதவான், கடும் நிபந்தனைகளின் கீழ், ஜாலியவை பிணையில் விடுவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவரை 50 ஆயிரம் பெறுமதியான ரொக்க பிணையிலும், தலா ஒரு மில்லியன் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் பிணையில் செல்ல உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், ஜாலியவுக்கு வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜாலிய அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவராக கடமையாற்றிய காலத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி நிதி மோசடி விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டார். (இ-7)

# இராணுவ இரகசியங்களை வெளியிட்ட கமால் குணரத்ன கைதாவாரா?



(கொழும்பு)

மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன்வை கைது செய்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர் எழுதிய “நந்திக் கடலுக்கான பாதை” என்ற புத்தகத்தினை அடிப்படையாக வைத்து கைது செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

அவர் எழுதிய அந்தப் புத்தகத்தின் ஊடாக பல இராணுவ இரகசியங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தி அவரை கைது செய்யவுள்ளதாக குறித்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நந்திக்கடலுக்கான பாதை என்ற புத்தகம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியிருந்தார்.

அந்தப் புத்தகத்தின் ஊடாக இராணுவத்தினர் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக மங்கள குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஆதாரங்களின் அடிப்படையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கேள்வி எழுப்பப்பட்டதாகவும், அதற்கு பதில் வழங்க முடியாமல் தவித்ததாகவும் மங்கள ஆதங்கம் வெளியிட்டிருந்தார்.

கமால் குணரட்ன இராணுவத்தினரை நேரடியாக காட்டிக் கொடுத்துள்ளார் என மங்கள பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்க குடியுரிமையை கைவிடும் நெருக்கடி நிலையில் ராஜபக்ஷர்கள்





(கொழும்பு)

ராஜபக்ஷ சகோதரர்களான கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் அமெரிக்க குடியுரிமையை கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையில் நடைபெறும் தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டுள்ள இருவரும், அமெரிக்க குடியுரிமையை கைவிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

19 ஆவது திருத்தச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரான் அரசியலமைப்பிற்கமைய, இரட்டைக் குடியுரிமை பெற்ற ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் செயற்படும் தகுதியை இழந்து விடுவார்.

அரசியலமைப்பிற்கமைய இரட்டைக் குடியுரிமை பெற்ற ஒருவர் நாடாளுமன்றத்தில் பிரதிநிதியாக நியமிக்கப்படுவதற்கு இடமில்லை என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவின் பதவி நிலையில் உறுதியாகியுள்ளது.

கீதா குமாரசிங்கவின் பதவி நிலையில் நடைபெறும் வழக்கு விசாரணையின் போது சட்டமா அதிபர், புதிய சட்டம் குறித்து தெளிவு படுத்தியுள்ளார்.

இந்நிலையில் வழக்கிற்கான தீர்ப்பு வெளியிடப்படவுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பசில் ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக செயற்பட்டுள்ளதுடன், கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராக இரட்டைக்குடியுரிமையுடன் செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கட்டாரில் மூன்று இலங்கையர்களுக்கு சிறை

கட்டாரில் மூன்று இலங்கையர்களுக்கு.சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாக கல்ப் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

போதைப் பொருள் வைத்திருந்தமை மற்றும் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டு தொடர்பிலேயே இலங்கையர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் போதைப் பொருள் பாவனை போன்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபருக்கு மூன்று வருட சிறைத் தண்டனை விதித்து டோகா குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேலும்,பிரதான சந்தேக நபருக்கு 2 இலட்சம் ரியால் (8.3மில்லியன் ரூபா) அபராதப் பணம் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கஞ்சா பாவனைக் குற்றச்சாட்டு தொடர்பில், ஏனைய இருவருக்கும் தலா ஒரு வருட சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரியால் அபராத பணமாக செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களிடம் குருதிப் பரிசோதனை மேற்கொண்ட போது அவர்கள் போதைப் பொருள் பயன்படுத்தியுள்ளார்கள் என தெரியவந்துள்ளது.

எனவே, சந்தேகநபர்களுக்கு சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### தினம் ஒரு தகவல்

## முதல் விமானம்

ஆர்வில் ரைட் என்பவரே முதலில் வானத்தில் பறப்பதற்கு வழி கண்டு பிடித்தவர்.

இவரது சின்னஞ்சிறு பருவத்திய வாழ்வு வறுமை நிறைந்தது. இவர் சிறுவனாக இருந்த போது தெருவில் கிடக்கும் துருப்பிடித்த இரும்புகளையும் எலும்புத் துண்டுகளையும் பொறுக்கி விற்று வாழ்வை நடத்தி வந்தார்.

அதன் பின்னர் எத்தனையோ தொழில்கள் தொடங்கினார். அத்தனையிலும் தோல்வியே தான்.

ஒரு நாள் இவர் நூல் நிலையம் ஒன்றுக்குச் சென்றிருந்தார். அங்கே இவர் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் ஒரு சுவையான கதை இருந்தது.

அதில் ஒரு மனிதன் தனக்கு இறக்கைகள் எதுவுமின்றிக் காற்றாடி போன்ற ஒன்றின் துணையால் வானத்தில் பறந்து சென்றதாக வர்ணிக்கப்பட்டிருந்தது.

இதைப் படித்ததும் ஆர்வில் ரைட்டின் உள்ளத்திலும் மனிதன் ஏன் வானத்தில் பறக்கக் கூடாது? என்ற கேள்விக்குறி எழுந்தது. இதைக் குறித்துத் தம் சகோதரருடன் ஆலோசனையில் ஈடுபட்டார்.

ஆலோசனை ஆராய்ச்சியானது. பலசோதனைகளைச் சகோதரர் இருவரும் செய்து பார்த்தனர். முடிவில் பறப்பதற்கு ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

இந்த இயந்திரத்தின் உதவியில் ரைட் 1903 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி வானத்தில் பறக்கலானார்.

இதுவே முதலில் பறந்த விமானமாகும்.

கவிஞர் தே.ப.பெருமாள்

# நெருக்கடியில் சிக்கும் சீனாவின் பட்டுப்பாதை

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொருளாதாரத் திட்டங்கள் தொடர்பாக சீனா எதிர்பாராத அளவு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை மேலும் அபிவிருத்தி செய்வதுடன் அதற்கருகில் பாரிய தொரு பொருளாதார வலயத்தை உருவாக்கும் நோக்குடன் கடந்த டிசெம்பர் மாதம் இருதரப்பு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடப்பட்ட போது, பல நூற்றுக் கணக்கான மக்கள் இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

இலங்கையில் சீனா முதலீடு மேற்கொள்வதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது இதுவே முதற்தடவையாகும்.

சீனமுதலீட்டிற்கு எதிரான ஆர்ப்பாட்டமானது வன்முறையாக மாறியதுடன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகள் மற்றும் தண்ணீர்ப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இலங்கையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டமானது சீனாவின் 'புதிய பட்டுப் பாதைத் திட்டம்' எவ்வாறு மேற் காள்ளப்படவுள்ளது என்பதற்கான எடுத்துக்காட்டாக உள்ளது.

சீனா தனது பட்டுப்பாதைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இலங்கையில் மட்டுமல்லாது சீனப் பெருநிலப் பரப்புத் தொடக்கம் ஆபிரிக்க முனை வரை இராணுவ மற்றும் வர்த்தக சார் வலைப் பின்னல்களை உருவாக்கி வருகிறது.

அதிகாரத்துவ நாடுகளின் விளையாட்டு மைதானம் என நன்கறியப்படும் டிஜிபோட்டி (Djibouti) என்கின்ற நாடும் சீனாவின் முத்துமாலைத் திட்டத்திற்குள் அடங்குகிறது.

டிஜிபோட்டியில் ஏற்கனவே அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான் போன்ற நாடுகள் தமது தளங்களைப் பலப்படுத்தி வரும் நிலையில் தற்போது சீனாவும் தனது இராணுவத் தளத்தை இங்கு நிறுவி வருகிறது.

சீனாவானது மற்றைய நாடுகளுடன் விரிசலை ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதில் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

குறிப்பாக இலங்கையில் அண்மையில் சீனாவிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது போன்று வேறு நாடுகளிலும் தனக்கான எதிர்ப்பைச் சம்பாதிக்காது சீனா விழிப்புடன் செயற்பட வேண்டும்.

தேர்தல் பரப்புரையின் போது சீனாவுடன் உடன்பாடுகளை மேற்கொள்ளமாட்டேன் என உறுதியளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 80 சதவீதத்தை 1.1 பில்லியன் டொலர் பெறுமதிக்கு 99 ஆண்டுகால குத்தகைக்கு சீன அரச நிறுவனமான Merchants Port Holdings இற்கு வழங்குவதாக ஒப்புக்கொண்டார்.

இலங்கை மீதான அதிக கடன் சுமை காரணமாகவே இவ்வாறானதொரு முடிவுக்கு வரவேண்டியேற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், சீனாவுடனான இப் புதிய ஒப்பந்தமானது இலங்கையின் இறையாண்மையைப் பாதிப்பதாகக் கூறி எதிர்ப்புப் போராட்டங்களை மேற் கொண்டனர்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான முயற்சிகளை இந்தியா கைவிட்டதன் பின்னர், 2005 இல் இலங்கைக்கு சீனா தனது உதவித் திட்டத்தை வழங்க ஆரம்பித்தது.

இலங்கையின் இராணுவத் தேவைகளுக்காக சீனாவால் ஒரு பில்லியன் டொலர் நிதி நன்கொடையாக வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது இலங்கை சீனாவிற்கு எட்டு பில்லியன் டொலரைக் கடனாக வழங்க வேண்டிய நிலையில் உள்ளது.

அதாவது சீனாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையின் 12 சதவீதத்தை கடனாக வழங்க வேண்டும்.

இலங்கையர்கள் சீனாவின் முதலீட்டை நவ-கொலனித்துவம் என்கின்ற கண்ணாடியின் ஊடாக நோக்க ஆரம்பித்துள்ளனர்.

ஆகவே சீனாவின் அம்பாந்தோட்டைத் திட்டமே இலங்கை மீதான சீனாவின் கடைசித் திட்டமாக இருக்கலாம்.

இலங்கையானது தனது கடன்சுமையைக் குறைக்க வேண்டிய மற்றும் முதலீட்டை மேற்கொள்ள வேண்டிய தேவையில் உள்ள அதே வேளையில், சீனாவின் முதலீட்டை இலங்கையர்கள் மறுப்பதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

இதற்கும் மேலாக சீனாவானது கொழும்பின் நலன்களைக் கருத்திற்கொண்டு இந்த நிதியை முதலீடு செய்யவில்லை.

ஆசியாவின் கேந்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடங்களில் இலங்கை இருந்திருக்காவிட்டால் அல்லது இங்கு ஆழமான துறைமுகங்கள் இருந்திருக்காவிட்டால் இலங்கையில் சீனா முதலீடு செய்திருக்கும் என்பது சந்தேகமே.

அத்துடன் இலங்கையானது முத்துமாலை என்கின்ற மூலோபாயத்தில் உள்ளடங்கியிருப்பதும் சீனாவிற்குச் சாதகமானதாக உள்ளது.

இதற்குச் சாதகமாகவே அண்மைய உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை கண்டுகொண்ட பின்னர் இலங்கையர்கள் நியாயமான வகையில் தமது எதிர்ப்புக்களைக் காண்பிக்க ஆரம்பித்தனர்.

சீனா தனது புதிய பட்டுப் பாதைத் திட்டத்தின் ஒரு கட்டமாக தனது முதலாவது வெளிநாட்டு இராணுவத் தளத்தை டிஜிபோட்டியில் நிர்மாணிக்கின்றமை மிகவும் ஆபத்து மிக்க நடவடிக்கையாகும்.

இலங்கையைப் போன்றே, ஆபிரிக்க முனையில் உள்ள டிஜிபோட்டி, சீனாவிடமிருந்து 14 பில்லியன் டொலருக்கு மேல் நிதியைப் பெற்றுள்ளது.

அதாவது இந்த நிதியின் கீழ் டிஜிபோட்டியில் இரண்டு விமான நிலையங்கள், மூன்று துறைமுகங்கள், எதியோப்பியாவிற்கான ஒரு தொடருந்துப் பாதை, நீரைக் கொண்டு செல்வதற்கான நீர்க் குழாய் விநியோகம் போன்ற பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டிஜிபோட்டி தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 60 சதவீதத்தை சீனாவிடமிருந்து கடனாகப் பெற்றுள்ளது.

டிஜிபோட்டியில் சீனா புதிய இராணுவத் தளம் அமைப்பதானது அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகத்தை கோபத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

புதிய பட்டுப் பாதைத் திட்டத்தின் ஒரு பகுதியாக அமைக்கப்படும் இப்புதிய இராணுவத் தளமானது அமெரிக்க - ஆபிரிக்க கட்டளைப் பீடத்தின் நடவடிக்கைகள் இடம்பெறும் தளம் அமைந்துள்ள லெமோனியர் முகாமிலிருந்து ஒரு சில கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

இந்த இராணுவத் தளங்கள் அமைந்துள்ள இடமானது இருதரப்பினருக்கும் அசௌகரியத்தையே வழங்கும். அத்துடன் இது டிஜிபோட்டிக்கும் பிரச்சினையை ஏற்படுத்தும். அதாவது உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் இங்கு முகாமிட்டுள்ளதால் இங்கு மோதல் ஏற்படுவதற்கான சூழல் உருவாகலாம்.

டிஜிபோட்டி மீதான சீனாவின் செல்வாக்கை கட்டுப்படுத்துவதற்கு ட்ரம்ப் நிர்வாகம் அதிகளவிலான நிதியை டிஜிபோட்டியில் முதலீடு செய்யும் என எதிர்பார்க்க முடியாது.

இந்த மாதத்தின் இறுதியில் ட்ரம்ப் நிர்வாகமானது அமெரிக்காவின் வெளிநாட்டு உதவித் தொகையைக் அதிகளவில் குறைப்பதற்கான பரிந்துரையை மேற்கொள்ளும் என வெள்ளை மாளிகையின் வரவு - செலவுத் திட்ட இயக்குநர் தற்போது உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் டிஜிபோட்டிக்கு ட்ரம்ப் நிர்வாகம் விலக்களிக்கும் எனக் கருதமுடியாது.

டிஜிபோட்டி மீதான தனது முதலீட்டை அமெரிக்கா குறைத்தாலும் சரி அல்லது குறைக்காவிட்டாலும் சரி, சீனா இங்கு தனது இராணுவத் தளத்தை விரிவுபடுத்துவதால் இது தொடர்பில் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையில் மோதல் ஒன்று ஏற்படுத்துவதற்கான சூழல் உருவாகும்.

ஆகவே இவ்வாறான காரணிகளை வைத்து நோக்கும் போது சீனாவின் புதிய பட்டுப்பாதைத் திட்டமானது பல்வேறு ஆபத்திற்கு உள்ளாவதை உறுதிப்படுத்தலாம்.


ஆகவே சீனா இவ்வாறான ஆபத்திலிருந்து தன்னைப் பாதுகாப்பதற்காக கடந்த சில மாதங்களாக இலங்கை போன்ற நாடுகளில் பொருளாதாரத் திட்டங்களை மேற்கொள்வதில் முன்னுரிமை காண்பிப்பதுடன், டிஜிபோட்டி போன்ற ஸ்திரமற்ற சர்வாதிகாரிகளைக் கொண்ட நாடுகளில் தனது இராணுவப் பலத்தை நிலைப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பில் சீனா விழிப்புடன் செயற்படாவிட்டால், டிஜிபோட்டியில் சீனா சந்தித்துள்ள மனக்கசப்புக்கள் இலங்கையில் கைகலப்புக்கள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும்.



ஆங்கிலத்தில் - Eliza King
வழிமூலம் - INTERNATIONAL POLICY DIGEST
மொழியாக்கம் - நித்தியபாரதி

## வட்டவளை பகுதியில் பாரவூர்தி விபத்து





(கொழும்பு)

கொழும்பு ஹற்றன் பிரதான வீதியில் வட்டவளை பகுதியில் பாரதிவூர்தி ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அக்கரப்பத்தனை பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி மென்பானங்களை ஏற்றிப் பயணித்த பாரவூர்தியானது வட்டவளை ரொசல்லை பகுதியில் நேற்றுக் காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

வாகனத்தில் ஏற்பட்ட திடீர்க்கோளாறு காரணமாக இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் காயமடைந்த சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)


# சங்கிலியை அறுத்த கொள்ளையன் பொதுமக்களால் மடக்கிப்பிடிப்பு

## கொழும்பு செட்டியார் தெருவில் பரபரப்பு

தங்கச்சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிய கொள்ளையன் ஒருவன் பொது மக்களிடம் வசமாக மாட்டிக் கொண்டான்.

இச் சம்பவம் நேற்று நண்பகல் கொழும்பு புறக்கோட்டை செட்டியார் தெருப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு புறக்கோட்டை செட்டியார் தெருப்பகுதியில் நகைக்கடைகள் அமைந்துள்ள வீதியில் சனநெருக்கடியான வேளையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



இந்நிலையில் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்ட கொள்ளையனிடமிருந்து கொள்ளையிடப்பட்ட நகை கைப்பற்றப்பட்டதுடன் அருகிலிருந்த பொலிஸாரிடம் பொது மக்கள் கொள்ளையனை ஒப்படைத்தனர்.

கொள்ளையரை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். (இ-7)

## மாணிக்கக் கல் அகழ்ந்த மூவர் கைது

(கொழும்பு)

இரத்தினபுரி, ஹங்கமுவ கங்கை கரங்கொட பிரதேசத்தில் ஆற்றங்கரைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று பேர் நேற்றுக்கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் இரத்தினபுரி முகாமின் அதிகாரிகள் சிலரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்போது, அவர்களிடமிருந்து மாணிக்கக் கல் அகழ்விற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பன பொலிஸ் விசேட அதிரடிப்படையினால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் இரத்தினபுரி மாணிக்கக் கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையினரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் தலா 2,500 ரூபா பெறுமதியான அபராதம் விதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## உக்ரைன் நாட்டவரின் வழக்கு அடுத்த மாதம் விசாரணைக்கு

(கொழும்பு)

இலங்கைக் கடல் எல்லைக்கு வெளியே பயணித்துக் கொண்டிருக்கும் போது, இலங்கை கடற்படை தன்னை கைது செய்ததன் மூலம், தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பு வழங்குமாறு தெரிவித்து அவன்கார்ட் மெரிடைம் தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் உக்ரேன் நாட்டைச் சேர்ந்த கப்டன் ஒருவர் முன்வைத்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு எதிர்வரும் 4 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த முறைப்பாட்டின் பிரதிவாதிகளாக பாதுகாப்பு செயலாளர், கடற்படைத் தளபதி, சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இலங்கை கடல் எல்லைக்கு வெளியில் இருக்கும் போது, கைது செய்வதற்கு கடற்படைக்கு அதிகாரம் இல்லையென மனுதாரர் தெரிவித்துள்ளார். (இ-7)

## உர மானியம் வழங்க 1500 மில்லியன் ரூபா

(கொழும்பு)

தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை போன்ற பெருந்தோட்ட செய்கைக்கான உர மானியமாக 1500 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பெருந்தோட்ட அமைச்சர் நவீன் திஸாநாயக்கவின் வேண்டுகோள்படி 2017 ஆம் ஆண்டுக்காக இந்த உர மானியம் வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி உர மானியம் வழங்குவதற்காக சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கு 900 மில்லியன், தென்னை செய்கைக்காக 500 மில்லியன் மற்றும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு 100 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (இ-7)




# சிகிச்சைக்காக பேருந்தில் ஏற்றப்பட்ட எனது மகன் வீடு வந்து சேரவில்லை

## தாயொருவர் கவலை

வன்னியில் நடைபெற்று முடிந்த இறுதிக்கட்ட போரின் போது எனது மகன் எறிகணையின் சிதறல்களால் தலையில் காயம் அடைந்திருந்தார்.

அவருக்கு சிகிச்சையளிப்பதற்காக பேருந்தில் வைத்தியசாலைக்கு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட எனது மகன் இதுவரை வீடு வந்து சேர வில்லையென தாயொருவர் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரை ஏ-9 வீதியில் உள்ள கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக முன்னெடுத்து வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று சனிக்கிழமை 27 ஆவது நாளாகவும் தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில், போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்த கவனயீர்ப்பு கண்டனப் போராட்டத்தில் பங்கெடுத்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாயார் ஒருவர் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இறுதிக்கட்ட போரின் போது எனதுமகன்எறிகணையின் சிதறல்களால் தலையில் காயமடைந்திருந்தார்.

அந்தக் காயத்துடன் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்த போது எனது மகனை மறித்த இராணுவத்தினர் அவரை வைத்தியசாலையில் அனுமதிப்பதாக கூறினார்கள்.

நானும் எனது மகனுடன் வைத்தியசாலைக்கு வருவதாகக் கூறி அங்கே நின்ற போது எனது மகனை தனியாக ஒரு பேருந்தில் ஏற்றினார்கள். என்னை மற்றுமொரு பேருந்தில் ஏற்றி முகாமிற்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

எனது மகன் ஏற்றப்பட்ட பேருந்தில் மேலும் பலர் இருந்தனர். முகாமிற்குள் இருந்து நாங்கள் வெளியில் வர கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

இந் நிலையில், நலன்புரி முகாமைவிட்டு வெளியில் வந்த பின்னர் வவுனியா வைத்தியசாலையில் சென்று மகனை விசாரித்தோம்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும், அதன் பின்னர் அவரைச் சிகிச்சையில் இருந்து விலக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டு விட்டார் என்றும் பதிவுகளின் ஊடாக தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் அவரை நாங்கள் தேடாத இடம் இல்லை. கொழும்பு 4 ஆம் மாடி வரை சென்று தேடினோம். அவர் அங்கும் இல்லை.

இதன் பின்னர், பல இடங்களில் முறைப்பாடுகளை பதிவு செய்திருந்தோம். எந்த பயனும் இல்லை. முறைப்பாடுகள் செய்த பின்னர் புலனாய்வு பிரிவினர் எமது வீட்டிற்கு தேடி வந்து விசாரித்தார்கள்.


இவ்வாறு எத்தனையோ விசாரணைகளுக்கு முகம் கொடுத்துவிட்டோம். ஆயினும் எந்த தகவலும் இல்லை.

இந்த அரசாங்கம் எமது உறவுகள் எங்கு உள்ளார்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்த மறுக்கின்றது.

இவ்வாறாக ஆட்சியில் உள்ள நல்லாட்சி அரசாங்கம் தொடர்ந்தும் மௌனம் காப்பது நல்லதாக அமையாது என்று தெரிவித்துள்ளார். (2-15)

# கழிவுநீர் வாய்க்காலை மூடியமையை அடுத்து மன்னார் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

## டெங்கு ஒழிப்பு வாரமும் அனுஷ்டிப்பு



(மல்லாவி)

மன்னார் நகரப் பகுதி ஊடாக கடலுக்குச் செல்லும் கழிவு நீர் வாய்க்காலை மூடி, கழிவு நீர் செல்லாத வகையில் செயற்பட்டு வந்த நகரப் பகுதி வர்த்தகர்களுக்கு எதிராக மன்னார் நகர சபையும், மன்னார் பொலிஸாரும் இணைந்து சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் நகர சபையினால் கடந்த 15 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை வரை டெங்கு ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதனால் பல்வேறு இடங்களில் சிரமதானம் உள்ளிட்ட வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையிலே மன்னார் பொலிஸார் நகரப் பகுதிகளில் இருந்து கடலுக்கு கழிவு நீரைக் கடத்தும் வாய்க்காலுக்குள் கழிவுப் பொருட்களை போட்டு தடை ஏற்படுத்தியுள்ள வர்த்தகர்கள் மீது கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாக மன்னார் நகரசபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கடலேரி வீதி, பெரியகடை, பனங்கட்டுகொட்டு கிழக்கு போன்ற பகுதிகளில் மன்னார் நகரசபை பணியாளர்களினால் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (2-15)




# முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 12 பேருக்கு சக்கர நாற்காலிகள்



மோட்டிவேசன் ஸ்ரீலங்கா அமைப்பும் மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சும் இணைந்து வவுனியா மாவட்டத்தில் உள்ள பம்பைமடு வைகறை வைத்தியசாலையில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட மருத்துவ புனர்வாழ்வு பெற்ற 12 பேருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் சக்கர நாற்காலிகளை பயனாளிகளுக்கு வழங்கிய வைத்துள்ளார்.

இந் நிகழ்வின் போது வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கு.அகிலேந்திரன், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் மேற்தர தாதிய உத்தியோகத்தர் வைகறை உட்பட நிர்வாக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, மோட்டிவேசன் ஸ்ரீலங்கா அமைப்பும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சும் இணைந்து நடப்பாண்டில் வடக்கு மாகாணத்தில் மருத்துவப் புனர்வாழ்வு பெற்ற முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட பயனாளிகள் 110 பேருக்கு சக்கர நாற்காலிகளை வழங்கி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

# இளைஞர்கள், அமைப்புக்கள் அணிதிரண்டு வந்து போராட்டங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்

### கேப்பாப்பிலவு போராட்டத்திற்கு நேற்று யாழ்.திக்கம் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் ஆதரவு





(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு மக்கள் தமது பூர்வீக நிலத்தை மீட்பதற்காக கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 18 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாக நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் மக்கள் போராட்டத்தை நடத்தி வருகின்ற இடத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கேப்பாப்பிலவு மக்களின் தொடர் போராட்டம் தீர்வின்றிய நிலையில் 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி இந்த தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தை தொடர்ந்து மக்கள் இடம் பெயர்ந்து சென்ற நிலையில் இராணுவத்தினர் மக்களின் சொந்த நிலங்களில் நிலை கொண்டுள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் திக்கம் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் வருகை தந்து மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாக கவனயீர்ப்பு போராட்டமொன்றை மேற்கொண்டதோடு வடக்கு, கிழக்கில் இராணுவம் சுவீகரித்துள்ள காணிகளை மக்களிடம் ஒப்படைக்க இந்த நல்லாட்சி என்று கூறப்படும் அரசாங்கம் முன்வர வேண்டும். இதே வேளை தங்களை போன்று இளைஞர்கள், மக்கள் அனைவரும் முன் வந்து மக்களின் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டுமெனவும் கூறியுள்ளனர். (2-281)

# கையளிக்கப்பட்ட உறவுகளை விடுவிக்கவேண்டும் 27ஆவது நாளாகவும் கிளிநொச்சியில் போராட்டம்



(பரந்தன்)

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று சனிக்கிழமை 27ஆவது நாளாகவும் தீர்வின்றி தொடர்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த மாதம் 20 ஆம் திகதி காலை ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு இரவு- பகலாக தொடர்கின்றது.

விசாரணை என்ற பெயரில் இராணுவத்திடம் நாம் ஒப்படைத்த பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று இந்த அரசு கட்டாயம் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

அவர்களை நாம் பத்திரமாக இராணுவத்திடம் ஒப்படைத்தோம். ஆனால் இன்றோ அவர்களை தொலைத்தவர்களாய் தேடி அலைகின்றோம் என கண்ணீருடன் உறவுகள் தெரிவிக்கின்றனர். (2-15-312)





முல்லைத்தீவு மாவட்டம் கரைதுரைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பூதன் வயல் கிராமத்தில் "நாளை முல்லைத் தீவு" அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற முதியோர் கௌரவிப்பு நிகழ்வு, முதியோர் விளையாட்டு போட்டி ஆகிய வற்றை படங்களில் காணலாம்.

(படங்கள்: வற்றாப்பளை செய்தியாளர்)

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்.
– இராமலிங்க சுவாமிகள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கால அவகாசம் கிடைப்பதை அடுத்து அரசு கதைப்பதை பார்த்தீர்களா?

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நாட்டில் இன, மத, மொழி பேதங்களைக் களைகின்ற நோக்கம் எதுவும் அவசியமில்லை.

நல்லாட்சி என்று கூறிக்கொண்டாலும் நல்லாட்சியும் முன்னைய ஆட்சியாளர்களைப் போலவே நடந்து கொள்கின்றதே தவிர,

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்; சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற உரிமைகளை தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் துளியளவும் இல்லை என்பதே உண்மை.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தால் பேரினவாதிகள் ஆத்திரமடைவர். காணாமல்போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டால் படையினர் பலர் கம்பி எண்ண வேண்டி வரும்.

தமிழ் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்தினால் இராணுவ ஆக்கிரமிப்பை வாபஸ் பெற வேண்டும்.

ஆகையால் இவை எதனையும் செய்யாமல் காலம் கடத்துவதே ஒரே வழி என்று நல்லாட்சி கருதுகிறது.

இதற்குக் காரணம் என்ன? தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் பேரினவாதிகள் தமக்கு எதிராகக் கிளர்ந்தெழுவர்.

எனவே கிடைத்த ஆட்சிப் பதவியை உரிய காலம் வரைக் கொண்டு செல்வதே ஒரே வழி என்று நல்லாட்சி கருதுகிறது.

தன்னில் எந்தக் குறை குற்றமும் இல்லாமல் இருப்பதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொடுத்து அவர்களின் எதிர்ப்பையும் சமாளித்து நல்லாட்சி நரியாட்சியாக நகர்ந்து போகிறது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு கால அவகாசம் கேட்கின்ற இலங்கை அரசு, கால அவகாசம் கிடைக்கும் என்பதை உறுதி செய்து கொண்டு, தடிப்புக் கதை கதைக்க ஆயத்தமாகி விட்டது.

சர்வதேச நீதிபதிகளுக்கு அறவே இடமில்லை, கலப்பு நீதிமன்ற பொறிமுறைக்கு நாம் சம்மதிக்கவில்லை, ஐ.நா சபைக்கு எந்த வாக்குறுதிகளையும் நாம் வழங்கவில்லை என்பது போன்ற தடிப்புக் கதைகளை இலங்கை அமைச்சர்கள் கூறத் தலைப்பட்டுள்ளனர்.

உண்மையில் இலங்கையில் தமிழ் சிங்கள விரோதம் நீண்டு செல்வதற்கு அடிப்படைக் காரணம் சிங்கள ஆட்சியாளர்களினதும் பேரினவாதிகளினதும் வாய்ப் பேச்சுக்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழினத்துக்கு எதிராக சிங்கள அமைச்சர்களும் பேரினவாதிகளும் கண்டபாட்டில் கதைத்தனர். இவற்றால் இனப் பகைமை இந்த நாட்டில் வேகமாகப் பரவியது.

இதன் விளைவுதான் தமிழ் – சிங்கள மக்களின் உறவு என்பது இன்றுவரை கட்டியெழுப்ப முடியாத விடயமாக இருக்கிறது.

இப்போதுகூட கால அவகாசத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் பெற்றுக் கொண்ட நல்லாட்சி,

தற்போது கதைப்பதைப் பார்த்தால், அவர்களின் உள்நோக்கம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஐ.நா தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு கால அவகாசம் தேவையாக உள்ளது. இக்கால அவகாசத்தை வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சம்மதித்துள்ளது. இது உண்மையில் பாராட்டப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் பெருந்தன்மையை இது காட்டுகிறது. எனவே நாங்கள் இதய சுத்தியோடு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று கூற வேண்டிய நல்லாட்சி,

அதையெல்லாம் விடுத்து தமிழர்களுக்கு – எதிராக ஆத்திரமூட்டக்கூடிய கதைகளைக் கதைக்கிறது எனில் இதை நல்லாட்சி என்று எப்படிக்கூற முடியும்?

# மகிந்தவின் பொய்களை மெய்யாக்குகிறார் ரணில்

### அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

தமிழ் மக்களின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 13ஆவது திருத்தத்திற்கும் அப்பால் செல்வதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கிய பொய் வாக்குறுதியை இன்று மெய்ப்படுத்தும் நடவடிக்கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. இதேவேளை பொது மக் கள் கருத்துக் கணிப்பிற்குச் செல்லாத எந்தவொரு அரசி யலமைப்பிலும் பயனில்லை என்று சபை முதல்வரும், பெருந்தெருக்கல் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டி-கம்பொல வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல "நமது நாட்டில் இரண்டு அரசியல் யாப்புக்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் அவற்றில் ஒன்றிலும் தமிழ் மக்களின் பங்கினை உள்ளீர்க்க மறுக்கப்பட்டது.

எனவே எவ்வாறு இனங்களுக்கு இடையிலான ஐக்கியம் உருவாகும்? சமகி பெரமுன தலைமையிலான பண்டாரநாயக்க அம்மையார் அரசியல் யாப்பை உரு வாக்கியபோது அதனை தமிழ் மக்கள் பகிஷ்கரித்தார்கள்.

ஜே.ஆர்.ஜெயவர்தன யாப்பொன்றை உருவாக்கிய போதும் தமிழ்க் கட்சிகள் அதனையும் புறக்கணித்தன. அரசியலமைப்பிற்குள் வலுக்கட்டாயமாக உள்ளீர்க்க முடியாது.

ஆனால்வரலாற்றில்முதன் முறையாக பிரதமர், ஜனாதிபதி தலைமையில் புதிய அரசியலமைப்பு நாடா ளுமன்றத்தில் உருவாக்கப் பட்டு வருகிறது. தமிழ்க் கட்சிகள் முதற்தடவையாக பேச்சுக்களில் கலந்து கொள் கின்றன.


இது மிகவும் பொற்கால சந்தர்ப்பமாகும். புறம்பான ஆட்சி கோரிக்கையை அவர்கள் கைவிட்டுள்ளனர். 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு கோரிக்கை ஒன்றையே முன்வைக்கின்றனர்.

இந்த 13ஆவது திருத்தம் போதுமானதல்ல என்று யார் முதலில் கூறியது? யுத்தம் இடம்பெற்ற காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமருக்கும், ஐக்கிய நாடுகளுக்கும் இந்த வாக்குறுதியை அளித்திருந்தார்.

இன்று யுத்தம் முடிந்து விட்டது. 13 பிளஸ் எங்கே எனக் கேட்டபோது, அதனை தன்னால் செய்ய முடியாது என்றும் நாடாளுமன்றமே அதற்குப் பொறுப்பு எனவும் மகிந்த ராஜபக்ஷ கூறி கைவிரித்துவிட்டார்.

மகிந்த ராஜபக்ஷ அன்று கூறியதையே நாடாளுமன்றத்தின் ஊடாக பிரதமர் இன்று செய்கின்றார். அதற்கு மகிந்த ராஜபக்ஷ ஒருபோதும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. எனவே புதிய அரசியல மைப்பு உருவாக்கி சர்வஜன வாக்கெடுப்பை நடத்து வோம். அதனை செய்யாமல் சிறந்த அரசியலமைப் பொன்றை உருவாக்கியும் பயனில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# யேசுவின்பால் தாகத்தை ஏற்படுத்துவோமா?



இன்று தவக்காலத்துக்குள்வரும்மூன்றாவது ஞாயிறு. 'இயேசுவிற்கும் சமாரியப் பெண்ணுக்கும் இடையில் நடந்த ஓர் உரையாடல் இன்று எமது பைபிள் பகுதியில் விபரிக்கப் படுகிறது: இயேசு அவரிடம்,' குடிக்களனக்குத் தண்ணீர் கொடும்" என்றுகேட்டார். அச் சமாரியப் பெண் அவரி டம், 'நீர் யூதர் நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம்குடிக்கத் தண்ணீர் கேட்பதுஎப்படி?" என்று கேட்டார். ஏனெனில் யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை.

எனவேநாம் முதலில் சமாரியர்களுக்கும், யூதர்களுக்கும் உள்ள பகைமை உணர்வு பற்றி அறிவோம்: கி.மு722ல்அசீரியர்கள்வடக்கு அரசைக் கைப்பற்றி, வழக்கமாக வெற்றி பெற்ற அரசர்கள் அந்தக்காலத்தில் செய்யும் செயலைச் செய்தனர். இதனை பைபிளில் 2அரசர்கள்17: 6 பகுதியில் வாசிக்கிறோம்: ஓசேயா ஆட்சியேற்ற ஒன்ப தாம் ஆண்டில், அசீரி

## பரமபிதா காட்டிய பாதை

யாமன் னன் சமாரியா வைக் கைப் பற்றி, இஸ்ரயேலரை அசீ ரியாவுக்கு நாடுகடத்தினான். அவர்களை அலகிலும், கோசானின் ஆபோர் நதிக்கரையிலும், மேதியர் நகர்களிலும் குடி யேற்றினான். அதே போல 2அரசர்கள்17:24 பகுதியில் வாசிக்கிறோம்: பாபிலோன், கூத்தா, அவ்வா, ஆமாத்து, செபர்வயிம் ஆகியவற் றினின்று அசீரியமன்னன் ஆள்க ளைக் கொண்டுவந்து, இஸ்ரயேல் மக்களுக்குப் பதிலாகச் சமாரியாநகர்களில் குடியேற்றினான். அவர்கள் சமாரியாவைஉரிமையாகக்கொண்டு அதன் நகர்களில் வாழ்ந்து வந்தனர். இப்படிப் பட்டச் சூழ்நிலையில் அவர்கள் வேற்றினத்தவரோடு திருமணம் செய்து கொள்ள ஆரம்பித்தனர். பொதுவாக யூதர்களுக்கு இனத்தூய்மை உயிரைப் போன்றது. வேறு எந்தநாட்டினருடனும் பெண் கொடுப்பதோ, எடுப்பதோ இல்லை.

சமாரியாவில் வாழ்ந்த யூதர்கள் இதற்கு முரணாக திருமணம் செய்து கொண்டதால், அவர்களைத் தூய்மையற்றவர்கள் என பாரம்பரியயூதர்கள் கருத ஆரம்பித்தனர். அவர்களை வெறுத்து ஒதுக்கஆரம்பித்தனர்.

இயேசுமனித உறவிற்கு தடையாக இருக்கக்கூடிய பலதடைக் கற்களைதகத்தெறிந்தார்• யூதர்களுக்கும், சமாரியர்களுக்கும் இடையே இருந்தமனக்கசப்பை உடைக்கிறார். இயேசு ஒரு யூதர், ஆனாலும் சமாரியப் பெண்ணோடுபேசுவதற்கு இயேசு தயங்கவில்லை. இயேசுவே முதலில் உரையாடலை ஆரம்பிக்கிறார். அடுத்து, அவள் ஒருபெண். யூதப் போதகர்கள்பொதுவில்ஒருபெண்ணோடு பேசுவதைவிரும்புவதுஇல்லை. சில பேர் தங்கள் மனைவியோடோ, மகளோடு கூட வீட்டிற்கு வெளியேபேசுவதைத் தவிர்ப் பார்கள். சிலபரிசேயர்கள் பெண்களைக் கண்டாலே, கண்ணை மூடிக்கொண்டு செல்கின்ற அளவுக்கு பெண் களைத் தவிர்ப்பதிலே அதிக கவனம் செலுத்தினார்கள். இயேசு அத்தகைய மன நிலையையும் உடைக்கிரார் அவளுடைய வாழ்க்கை நட த்தை முறையும் போற்றுதற் குரியதாக இல்லை. சாதாரண ஆண்களே அப்படிப் பட்ட பெண்ணோடு பேசுவதற்கு தயங்குவார்கள். ஆனால் இயேசுபோதகரகாக இருந்தாலும், துணிந்து பேசுகிறார். சமாரியப் பெண்ணுக்கு இயேசுவைக் கண்டதும் வியப்பும் பயமும் ஏற்பட்டன. இயேசுவின் உரையாடலில் உண்மை வெளிப்பட்டது. சமாரியப் பெண் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார்.

உண்மை புலப்பட வேண்டிய நேரம் வந்தது. நீர போய், உம் கணவரை இங்கே கூட்டிக் கொண்டு வாரும். உண்மைக்காக பொய்ம்மை நிவர்த்தி செய் யப்பட அழைப்பு விடுக்கப் பட்டது. எனக்குக ணவர் இல்லையே என்று கூறிய சமாரியப் பெண்ணிற்கு இயேசுஉண்மையை வெளிப் படுத்தினார். அப் பெண் ணிடம் இருந்த பொய்மையைக் களைந்தார். மேற்கண்ட அனைத்துமே நமக்கு சொல்வது இதுதான். இயேசு எப்போதுமே மற்ற வர்களை திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக வாழ்ந்ததி ல்லை. உண்மைக்காக வாழ்ந்தார். நீதி யின்படி வாழ்ந்தார். மனச் சாட்சிக்கு மதிப்பு கொடுத்து வாழ்ந்தார். பல வேளைகளில் நம்முடையவாழ்வில் யாரையும் தேவையில்லாமல் பகைத்துக் கொள் ளக் கூடாது என்பதற்காக ,மதிப்பீடுகளோடு சமரசம் செய்து கொள்கிறோம். மற்ற வர்களைத் திருப்திப் படுத்து வதற்காக நம்முடைய கொள்கைகளை, மதிப்பீடு களை காற்றிலே பறக்கவிடு கிறோம். வாழ்வுக்கு மதிப்பு கொடுத்து உண்மையாக , நேர்மையாக, நீதியோடு வாழ்வோம்.

'என் உயிரின் மையம் எரிந்துகொண்டிருக்கிறது. எப்போதும் இந்தபயங்கர வேதனைதொடர்கிறது. கட்டுக் கடங்காத ,புதிரான ஒரு வேதனை இது. இந்த உலகத்தைத்தாண்டிய எதோ ஒன்றை என் உயிரின் மையம் தேடுவதால் வரும் வேதனை இது. இந்தத் தேடலின் முடிவு எல்லையற்ற இறைவன்என்று பலர் சொல் கின்றனர். நான் அந்தக் இறைவனை இன்னும் கண்டுபிடிக்கவில்லை இனியும் அவரைக் கண்டு பிடிப் பேன் என்று எனக்குத் தோன்றவில்லை. இந்தத் தேடல், இந்தத் தாகம் சில சமயங்களில் என்னைக் கோபத்திலும் ,சிலசமயங் களில் என்னை விரக்தியிலும் மூழ்கச்செய்கிறது." 20ம் நூற்றாண்டில் புகழ்பெற்றசிந்தனையாள ராக,எழுத்தாளராக விளங்கிய Bertrand Russell (பேணற் இறசல்) என்பவர் தன் சுயசரிதையில் இவ்விதம் எழுதியுள்ளார். தான் கடவுள் நம்பிக்கையற்றவர் என்பதைஉலகறியச் சொல்லி வந்த பேணற் இறசல் என்ற தனிமனிதரின் மையம் கடவுளைத் தேடியதையும், அவரைக் கண்டுபிடிக்க முடியாமல் அவர் பட்டவேதனைகளையும் இந்தவரிகள் தெளிவாக்குகின்றன. மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்வின் எதோஒருகட்டத்தில் கடவுளைத் தேடியிருக்கின்றனர். தாகம் தணிக்கப்பெறும் படிசமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்கிறார் இயேசு. தாகமேஎடுக்காத தண்ணீரைத் தனக்குத் தரும்படி இயேசுவிடம் அவள் கேட் கிறாள். தாகம் என்றுவந்தவரிடம் தண்ணீர் கேட்கிறாள் அந்த மாது. அவளுடைய அந்தரங்கவாழ்வை இயேசு வெளிப்படுத்தியதும் மெசியா பற்றியதாகம் அவளிடத்திலே வெளிப்படுகிறது. தானே அவர் என்றுசொன்னதுதான் தாமதம்தன் ஊரார்க்கெல்லாம் மெசியாவின் பால் தாகத்தை ஏற்படுத்துகிறாள் அவள். நாமும் அவளின் இப்பணியை தொடர்வோமா?

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# சென். அன்ரனிஸை வீழ்த்தி பாடும்மீன் அபார வெற்றி



யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித்துறை, வடமராட்சி, தீவகம் லீக்குகளின் அனுமதியுடன் நடைபெறும் புதிய விடியல் உதைபந்தாட்டத் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற போட்டியில் பெரியவிளான் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது. இப் போட்டியில் பெரியவிளான் சென். அன்ரனிஸ் அணியை குருநகர் பாடும்மீன் அணி 6-0 வெற்றி பெற்றது. (க)

# வல்வை வி. கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்

## காலிறுதியில் கருணாகரன்




வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் காலிறுதித் தெரிவுப் போட்டி கடந்த வியாழக் கிழமை அன்று றெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. நடைபெற்ற முதல் காலிறுதி தெரிவுப் போட்டியில் சுடர்ஒளி விளையாட்டுக் கழகத்தை எதிரத்து கருணாகரன் அணி மோதியது.

இப் போட்டியில் கருணாகரன் அணி தனது சிறப்பான விளையாட்டின் மூலம் 4 கோல்களை பதிவுசெய்தது.

பதிலுக்கு சுடர்ஒளி ஒரு கோலினை பதிவு செய்ய 4:1 என்ற கோல் கணக்கில் கருணாகரன் அணி வெற்றி பெற்று காலிறுதிக்கு நுழைந்தது. (க)

# புதுக்குடியிருப்பு பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டம்

## இரணைப்பாலை RCMV முதலிடம்



புதுக்குடியிருப்பு கோட்ட பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இரணைப்பாலை RCMV பாடசாலையின் 16வயதுப் பிரிவு அணியினர் 1 ஆம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

வெற்றி பெற்ற அவ் அணியினரை படத்தில் காணலாம். (க)

# பருத்தித்துறை பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான கபடிப் போட்டி

## சென். தோமஸ் சம்பியன்

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குள் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான விளையாட்டு நிகழ்வின் கபடிப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை மாலை 4:40 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் பருத்தித்துறைமுனை சென்.தோமஸ் அணியும் பருத்தித்துறை கொட்டடி துள்ளுமீன் அணியும் பலப் பரீட்சை நடத்தியது

விறுவிறுப்பாக ஆரம்பித்த போட்டியில் சென்.தோமஸ் அணி ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து ஆக்கிரமிப்பு தாக்குதல் என்னும் வியூகத்தை முடக்கிவிட்டது.

இதனால் முதற்பாதி ஆட்டத்தில் சென்.தோமஸ் 22:12 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலை பெற்றது.



இரண்டாம் பாதி ஆட்டத்தில் சென்.தோமஸ் அணி ஆக்கிரமிப்பு, எதிர் ஆக்கிரமிப்பு,தற்காப்பு தகர்த்தெறி என்னும் நான்கு முனைத் தாக்குதல்களையும் ஒரேநேரத்தில் பிரயோகித்தது.

இறுதியாக போட்டி முடிவுக்கு வரும் போது சென்.தோமஸ் அணி 61:28 என்ற புள்ளிகள் பெற்று சம்பியனாகியது. (க)

# கபடிப் போட்டிக்கு விண்ணப்பிக்குக

பிரித்தானியா, சுவிட்சர்லாந்து ஒன்றியங்களின் ஏற்பாட்டில் அல்வாய் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கபடிப் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை அல்வாய் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இரவு 7 மணியளவில்மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இம்முறை வடமராட்சி கபடிச் சங்கத்தின் ஆதரவுடன் வட மராட்சி கழகங்கள் பங்குப்பற்றும் கபடித் தொடரும் மின்னொளியில் இடம்பெறவுள்ளது. இத் தொடரில் பங்குபற்றும் கழகங்கள் வடமராட்சி கபடி சங்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுக்ளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பா. முகுந்தன்,
தலைவர்- 077 664 8996,
பி. சுரேஷ்-செயலாளர்077 379 2196. (க)

# காலிறுதிக்கு தகுதி பெற்றது வதிரி பொம்மர்ஸ் அணி



வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் காலிறுதித் தெரிவுப் போட்டி கடந்த வியாழக்கிழமை றெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. நடைபெற்ற இரண்டாவது காலிறுதித் தெரிவு போட்டியில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் அணி மோதியது. வதிரி பொம்மர்ஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 5:1 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்று காலிறுதிக்கு நுழைந்தது. (க)

## பன்னங்கண்டி...

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டி மக்களின் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று சனிக்கிழமை பதினைந்தாவது நாள் போராட்டத்துடன் முடிவுக்கு வந்துள்ளது.

நேற்று பிற்பகல் பன்னங்கண்டியில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மக்களை மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், காணி உரிமையாளர்களின் ஒருவரின் மகளான மருத்துவர் திருமதி மாலதிவரன் மற்றும் காவேரி கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை கலாநிதி யோசுவா ஆகியோர் போராட்டத்தில் ஈடுபடும் மக்களை சந்தித்து காணிகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக உறுதியளித்துள்ளனர். இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதனையடுத்து பதினைந்து நாட்களாக தொடர் கவனயீர்ப்பு போராட்டதில் ஈடுபட்டு வந்த மக்கள் தங்களின் போராட்டத்தை நேற்று மதியத்துடன் கைவிட்டுள்ளனர்.

காணி அனுமதி பத்திரம், வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை கோரி பன்னங்கண்டி மக்கள் கடந்த 4ஆம் திகதி தொடக்கம் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இந்த மக்கள் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த காணியில் குடியிருந்து வருகின்றனர். இவர்கள் குடியிருக்கும் காணி தனியாருக்கு சொந்தமானது. இதனால் அரசின் வீட்டுத்திட்டம், மலசல கூடம் உள்ளிட்ட எவ்வித உதவித்திட்டமும் இன்றி வறுமைக்கு உட்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளனர். இந்த நிலையிலேயே அவர்கள் தங்களின் பிரச்சினைக்கு தீர்வு கோரி கவனயீர்ப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் காவேரி கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை கலாநிதி யோசுவா எடுத்த முயற்சி காரணமாக காணி உரிமையாளர்களின் ஒருவரின் மகளான மருத்துவர் திருமதி மாலதிவரனை பன்னங்கண்டிக்கு அழைத்துச் சென்று மக்களுடன் உரையாடியமைக்கு அமைவாக குறித்த பிணக்கு தீர்க்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் திருமதி மாலதிவரன் கருத்து தெரிவிக்கும் போது குறித்த காணி தனது அப்பா, சித்தப்பா உள்ளிட்ட ஏழு பேருக்கு சொந்தமானது. நான் கிளிநொச்சி காவேரி கலாமன்றத்திற்கு வேறு விடயம் காரணமாக வந்தபோது ஊடகவியலாளர் ஒருவரின் தகவலுக்கு அமைவாக அருட்தந்தை யோசுவா எனது கவனத்திற்கு இவ் விடயத்தை கொண்டு வந்தார். அதன் அடிப்படையில் நாங்கள் அங்கு சென்று மக்களின் நிலைமைகளை பார்வையிட்டதன் பின்னர் எனது உறவினர்களுடன் தொடர்ச்சியாக பேசி இணக்கத்திற்குகொண்டு வந்து பன்ன ங்கண்டி மக்களுக்கு காணிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்க அதிபர் ஊடாக மேற்கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து பன்னங்கண்டி மக்களின் பிரச்சினை காணி உரிமையாளர்களின் சம்மதத்துடன் தீர்வுக்கு வந்துள்ளது. அதன்படி உடனடியாக காணி நில அளவை செய்யப்பட்டு அங்கு1990 களிலிருந்து வாழ்கின்ற சுமார் 65 குடும்பங்களுக்கு பகிர்ந்து வழங்கப்படவுள்ளது. அத்தோடு அவர்களுக்கான வீட்டுத்திட்டமும் வழங்கப்படும் என மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தங்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க காரணமாக இருந்த மருத்துவர் மாலதிவரன், அருட்தந்தை யோசுவா மற்றும் அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதாக பன்னங்கண்டி மக்கள் தெரிவித்துள்ளனர். (செ-312,15)

## இலங்கை பின்...

நடவடிக்கைகளையும் மேற் கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் செயற்பாடுகளுக்காக இலங்கைக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கும் பிரேரணை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே சம்பந்தன் இதனைத் தெரிவித்தார். (செ-11)

## முகவரிடம் பண...

மேற்படி பலரசரக்கு கடையை குறித்த இளைஞரும், அவரது தந்தையாரும் சேர்ந்து நடத்தி வந்த நிலையில், தகப்பனார் உயிரிழந்ததை தொடர்ந்து குறித்த இளைஞரே கடையை தனியாக பொறுப்பெடுத்து நடத்தி வந்துள்ளார். இந்த நிலையில் நேற்றைய தினம் வழமை போன்று கடையை காலை திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

காலை 9.45 மணியளவில் அருகில் உள்ள புடைவை கடையொன்றில் ஆயிரம் ரூபாய் கொடுத்து போர்வை ஒன்றை வாங்கியுள்ளார். பின்னர் பன்னிரண்டு மணியளவில் குறித்த இளைஞருடைய சகோதரி கடைக்கு வந்து சாப்பாடு கொடுத்து விட்டு சென்றுள்ளார். இதன்பிறகே பிற்பகல் இரண்டு மணியளவில் கடைக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இளைஞனின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்ட நிலையில், மரணம் தொடர்பில் யாழ்.நல்லூர் திடீர் மரண விசாரணை அதிகாரி முத்துக்குமார் உதயசிறி விசாரணைகளை மேற்கொண்டார். எனினும் மரணத்துக்கான காரணம் குறித்து குடும்பத்தினரிடம் இருந்து தெளிவான பதில் கிடைக்கவில்லை என்ற போதிலும் திடீர் மரண விசாரணை அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணையை அடுத்து, குறித்த நபர் வெளிநாடு செல்வதற்காக ஏஜென்சியிடம் பெருமளவு பணத்தை வழங்கியுள்ளார் என்றும். அதனால் இருவருக்கும் இடையில் தகராறும் இறுதியாக கைகலப்பும் நடைபெற்றது எனவும் தெரியவந்துள்ளது. இதனால் ஏற்பட்ட மன உள்ளச்சலால் பிரஸ்தாப வர்த்தகர் உயிரிழந்திருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சம்பவம் தொடர்பான விசாரணையை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4,30,78)

## பொலிஸாரால்...



யாழ்.பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளதாக இப்பிரிவுக்கு பொறுப்பான உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.சிறிகஜன் தெரிவித்துள்ளார்.

இதன்படி யாழ்ப்பாணம் ஐந்து சந்தி மற்றும் குருநகர் ஆகிய பகுதிகளை சேர்ந்த மூன்று இளைஞர்களையே குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரும் கடந்த காலங்களில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதுடன் இதுவரை சுமார் 80 இலட்சத்திற்கும் மேலதிகமான நகை மற்றும் பணங்களை கொள்ளையிட்டுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இவர்கள் வழிப்பறிக்கொள்ளைகளிலும் மோசடிக் கொள்ளை நடவடிக்கையிலும் ஈடுபட்டு வந்ததாகவும், சிறுவர்களை வீடுகளுக்குள் இறக்கி அவர்களை பயன்படுத்தி பணம் நகை பொருட்களை கொள்ளையிடும் செயல்களிலும் ஈடுபடுவதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் கைது செய்யப்பட்ட மூவரிடமும் தொடர்ச்சியான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும்,

அவ் விசாரணைகளை தொடர்ந்து கைது செய்யப்பட்ட மூவரையும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களையும் யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (செ-4)

## மகிந்தவுக்கு நடந்தது...

யாழ்.வீரசிங்கம் கட்டடத்தின் நான்காம் மாடியில் நேற்றுக் காலை கூட்டுறவாளர்களுடனான சந்திப்பினையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையிலே 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை அரசும் இணை அனுசரணை கொடுத்திருந்தது. தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைவற்றையும் நாங்கள் நிறைவேற்றுவோம் என வழங்கும் வாக்குறுதி தான் இணை அனுசரணை எனப்படும். இப்பொழுது மீண்டும் 23 ஆம் திகதி நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தின் வரைபு இப்போது பூரணப்படுத்தப்பட்டுள்ளது. அந்த பூரணப்படுத்தப்பட்ட தீர்மானத்தில் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இருக்கும் அத்தனை விடயங்களும் மீளவும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. அதனை நிறைவேற்றுவதாக தான் இலங்கை அரசு கூறி தீர்மானத்திற்கு மீளவும் இணை அனுசரணை கொடுத்துள்ளது.

ஆகையினால் உத்தியோக பூர்வமாக ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமை பேரவை முன்பாக இலங்கையின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு, தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ள அத்தனை கடப்பாடுகளையும் நிறைவேற்றுவோம் என்பது தான். அது குறித்து ஜனாதிபதியோ, பிரதமரோ எந்த இடத்தில் எதனை சொன்னாலும் அந்த 47 நாடுகள் அடங்கிய சர்வதேச அமைப்பு முன்பாக உத்தியோக பூர்வ வாக்குறுதியே பிரதானமானது. வாக்குறுதிய்யை வழங்கும் அதேவேளை இது தொடர்பில் எதிர்க்கருத்துக்களை அவர்கள் கூறுவது தொடர்பில் தான் எமது மக்கள் நியாயமான சலனம் அடைந்துள்ளார்கள். அவர்களின் வாக்குறுதி தொடர்பில் கேள்விக்குறி எழுப்புகின்றனர். தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை கொடுத்துவிட்டு நிறைவேற்றாமல் விடுவது போல, சர்வதேசத்திற்கு வாக்குறுதி வழங்கிவிட்டு நிறைவேற்றாமல் விட முடியாது.

இது மகிந்த ராஜபக்ஷ கற்றுக்கொண்ட கசப்பான பாடம். 2015 ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தம் செய்து விட்டு, ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவைக்கும் அதே வாக்குறுதிகளை கொடுத்துவிட்டு அதனை நிறைவேற்றாத காரணத்தினால் தான் சர்வதேச விசாரணையும் வந்தது. ஆட்சி மாற்றமும் ஏற்பட்டது. ஆகவே மகிந்த ராஜபக்ஷவிற்கு நேர்ந்த கதியை இந்த அரசாங்கமும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைய அரசாங்கம் சரியான முறையில் செயற்பட வேண்டும். தங்களுடைய நன்மைக்காக அல்லது நாட்டின் நன்மைக்கு என்றாலும் அவர்கள் இவ்வாறு செயற்பட்டு தான் ஆகவேண்டும். இப்பொழுது தங்களுடைய வாக்காளர்களுக்கு இனிமையாக இருக்க வேண்டும் என சில வார்த்தைகள் சொன்னாலும் நடைமுறையில் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விட்டால் பாரிய பின்விளைவுகளை சந்தித்தேயாக வேண்டும்.

நீதிமன்ற பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெறுவதற்கு இலங்கையின் அரசியலமைப்பில் இடமில்லை என இப்பொழுது பலர் கருத்துக்கள் சொல்ல ஆரம்பித்துள்ளார்கள். 2015ஆம் ஆண்டு இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது வெளிவிவகார அமைச்சர் இது தொடர்பில் பேசியிருக்கவில்லை. எனினும் அரசியலமைப்பு சட்டத்தில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெறுவதற்கு எந்த தடையும் இல்லை என்பதனை என்னால் சுட்டிக் காட்டப்பட்டதனை தொடர்ந்து ஐ.நா மனிதவுரிமை பேரவையினர் ஏற்றுக்கொண்டனர். அதனால் தான் அந்த விடயம் தீர்மானத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

2015ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேறறப்பட்ட போது மௌனமாக இருந்த பிரதம மந்திரி, வெளிவிவகார அமைச்சர் ஆகியோர், இப்போது சர்வதேச நீதிபதிகளுக்கு அரசியலமைப்பு சட்டத்தில் இடமில்லை என கூறுகின்றார்கள். இது தவறான ஒரு கருத்தாகும். சில வருடங்களுக்கு முன்னதாக இலங்கை பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க மீது பாராளுமன்ற பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்பட்ட போதும், அவர் பதவி விலக்கப்பட்ட போதும், அதற்கு எதிராக குரல் கொடுத்த ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்திலேயே ஒரு தனி நபர் சட்ட மூலத்தை வைத்திருந்தார்.

அந்த தனிநபர் சட்ட மூலத்தில் நீதியரசர்களை பதவி விலக்கும் விசாரணைகளை பொது நலவாய நாட்டு நீதிபதிகள் வந்து விசாரிக்க வேண்டும் என்று முன்மொழிந்திருந்தார். ஆகவே அரசியலமைப்பு சட்டத்தில் இடமில்லை என்று நினைத்திருந்தால், அவர் அந்த முன்மொழிவை செய்திருக்க முடியாது. இலங்கை அரசியலமைப்பு சட்டத்தில் எப்படியான ஒருவர் நீதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்ற எந்த கட்டுப்பாடும் கிடையாது. அவர் ஒரு சட்டத்தரணியாக கூட இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் அப்படித்தான் தடைகள் இருந்தாலும் அந்த தடையையும் நீக்கி சர்வதேசத்திற்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தான் இலங்கை அரசுக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பு. சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட பின்னர் நாட்டின் சட்டங்கள் எங்களை தடுக்கின்றன என்று சாட்டு போக்கு கூற முடியாது. இது அடிப்படையான சட்ட கோட்பாடு. ஆகையால் இந்த விடயத்தில் எந்தவிதமான விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை.

ஆனால் இந்த நீதிமன்ற பொறிமுறை செய்யப்படுவதற்கு முன்னதாக பல விடயங்கள் செய்யப்பட வேண்டும். முதலிலேயே சர்வதேச குற்றங்கள் என இனங்காணப்பட்டமை இன்னமும் இந்த நாட்டில் குற்றங்களாக அறிவிக்கப்படவில்லை. அவை முதலிலே குற்றங்கள் ஆக்கப்பட வேண்டும். இப்போது தான் முதலாவது விடயத்தை குற்றமாக அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுகொண்டு இருக்கின்றன. வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் குற்றம் என்ற சட்டம் வரவிருக்கின்றது. அப்படியாக பல விடயங்கள் இந்த நாட்டு சட்டத்தில் குற்றங்களாக அறிவிக்கப்பட வேண்டும். அதற்கு பிறகுதான் இந்த நீதிமன்ற பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும். ஆகையினாலே இது குறித்து அதிகமாக பேசவேண்டிய தேவை இல்லை. எங்களுடைய நிலைப்பாடு உறுதியானது.

மேலும் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர்மாதம் தீர்மானம் நிறைவேற்றப்படும் போது மனிதவுரிமை ஆணையாளர் நான்கு தூண்களின் அடிப்படையில் பேசியிருந்தார். அதில் முதலாவது தூண் உண்மை கண்டறியப்பட வேண்டும். இரண்டாவது நஷ்ட ஈடுகள் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். மூன்றாவது நீதி கிடைக்க வேண்டும் என்பது, மூன்றாவது நான்காவது மீள நிகழாமைக்கான உத்தரவாதம். ஆகவே இந்த நான்கும் நடைபெற வேண்டும். இந்த நான்கில் ஒன்று இன்னொன்றுக்கு மாற்றீடாக அமைய முடியாது. ஆகவே உண்மை கண்டறியப்பட வேண்டும் என்பது அத்தியாவசியமான விடயம். உண்மை கண்டறியப்பட வேண்டும் என்றால் நீதி கிடைக்க கூடாது என்று யாரும் சொல்ல முடியாது. ஆகவே இந்த நான்கு விடயங்களும் ஒன்றாக நடைபெறவேண்டும் என்றார் சுமந்திரன். (செ-4)


**JCB பைக்கோ வாடகைக்கு**

JCB பைக்கோ வேலைகளுக்கு வாடகைக்கு உண்டு. (8348)

**தொடர்பு : 077 860 0093**

**Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்**

சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புக்கள் (Notes) விற்பனைக்கு உண்டு. (8345)

**கரவீணா இசை மன்றம்**
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே : 077 703 1293


## குடும்பஸ்தரின் சடலம்...

சீலன் (34வயது) பிரஸ்தாப குடும்பஸ்தரை காணவில்லை என்று தேடிய உறவினர்கள், அவர் வேலைகளுக்குச் சென்றிருப்பதாகவும் விரைவில திரும்பி வருவார் என எண்ணியும் காத்திருந்துள்ளனர்.

எனினும் குறித்த நபர் நீண்ட நாளாக வீடு திரும்பாததையடுத்து மேலும் தேடுதலை மேற்கொண்டபோது நேற்று முன்தினம் மாலை கிணற்றிற்குள் குறித்த நபரின் சடலம் இருப்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் நேற்றுக் காலை சம்பவ இடத்திற்குச் சென்ற பதில் நீதவான் சடலத்தை பார்வையிட்டதுடன், வவுனியா பொது வைத்திய சாலையில் சடலத்தினை ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த நபர் திருமணமாகி, மனைவி மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியில் ஒரு பிள்ளையுடன் வசித்து வந்ததாகவும், இருவருக்கி டையே கருத்து முரண்பாடு காரணமாக சில காலமாக பிரிந்து வாழ் ந்து வருவதாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்காக குடும்பஸ்தரின் சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேல்திக விசாரணை களை நெடுங்கேணிப் பொலிஸார் மேற்கொ ண்டு வருகின்றனர். (செ-250)


**வேலை வாய்ப்பு – கிளிநொச்சி**

**Austriya Photo**
Digital Colourlab

**Manager**
**Cashier cum Counter Clerk**

ஒஸ்ரியா போட்டோ நிறுவனத்தில் மேற்படி வேலை களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளோர் மற்றும் முன் அனுபவம் உள்ளவர்கள் தங்கள் சுய விபரங்களு டன் விண்ணப்பிக்கவும்.

#50,1st Cross Street, Vavuniya
TP :-0773501036/0773501045
E Mail :austriyap@gmail.com
www.austriya.lk
https://www.facebook.com/Austriya
(C-7848)

**A/L பொருளியல்**
முழுப்பாடத்திட்டமும் அடங்கிய
**வினா – விடை மற்றும் MCQ புதிய நூல்கள்**
2015 A/L மற்றும் 2016 A/L
பரீட்சையில் 99 புள்ளிகள் பெறவைத்தவை
**ஆசிரியர் வே.கருணாகரன்**
பூபாலசிங்கம் புத்தகசாலை, அன்னை புத்தகசாலை
(8346)

**CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress
(சி-7839)

**தையிட்டியில் காணி விற்பனைக்கு உண்டு** (8307)
**தொடர்பு : 071 861 8213, 077 618 4649**

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**
- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
**V2 TRAVELS-0768226240**
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(சி-7838)

**V2 TRAVELS**
தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி

அதிஸ்ட எண் -N/13JAN17/1371/152
**சி.தேவராசா**
கரணவாய், கரவெட்டி
இவர் 13-01-2017 அன்று எமக்கூடாக 1கிலோ பொதி ஜேர்மனிக்கு அனுப்பினார்
சிங்கப்பூர் 1 பவுண்
நீங்களும் தங்கம் மற்றும் மோட்டர் சைக்கிள் வெல்ல
வாய்ப்புக்களுக்கு: 0768226240
(சி-7796)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
**070 330 5500**
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா
(சி-7837)

**வேலையாட்கள் தேவை**
புடவை வியாபார ஸ்தாபனத்திற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை.
நியாயமான ஊதியம் வழங்கப்படும்
K.S.T.Tex
127/18, யூப்பில் பஜார் மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(8306) 0212229470

**AHUJA**®
ஒலிபெருக்கிச் சாதனங்கள்

60வது ஆண்டுகளுக்கு மேலான நம்பிக்கையின் சின்னம்
உத்தரவாதத்துடன்
குறைந்த விலை
பலவித ரகங்கள்
தரத்தில் உயர்ந்தது
நீடித்த உழைப்பது

அம்பிளிபயர்கள்
மைக்ரோபோன்கள்
கொன்பரன்ஸ் சிஸ்டம்கள்
ரிப்லெக்ஸ் ஹோன்கள்
மெகாபோன்கள்
ஆடியோ மிக்ஸர்
பூஸ்டர் அம்பிளிபயர்கள்
கொலம் ஸ்பிக்கர்ஸ்

*** தரம் இல்லாத போலியான AHUJA பொருள்கள் விற்பனையில் இருப்பதால் தரம் உள்ள AHUJA பொருள்களை எங்கள் முகவரிடம் கேட்டு வாங்கவும்***
அனைத்து மத வழிப்பாட்டு ஸ்தலங்களுக்கு, பாடசாலைகளுக்கு விசேட விலைகழிவு வழங்கப்படும்

**றொபர்ட் ஏஜன்சீஸ் (பிறை) லிமிட்டட்**
இல: 88, றெக்லமேசன் வீதி, கொழும்பு - 11. தொ.பே.:242 1009(Hunting) பெக்ஸ்:244 9590.
ஈ-மெயில்: sales@robertagencies.com கிளை : 108, கெய்சர் வீதி, கொழும்பு - 11.
(068) www.robertagencies.com

**AC / BIG SALES**
AIRCONDITIONER, TV'S SPECIAL OFFERS
விசேட விலைக்கழிவில்
**Split Wall Mounted AC With Instalation**

| Btu | Media | Panasonic |
|---|---|---|
| 9000 BTU | 58,500/= | 79,500/= |
| 12000 BTU | 62,500/= | 86,500/= |
| 18000 BTU | 78,500/= | 115,000/= |




**PORTABLE AC**
RS: 59,500/=

12000 BTU
நீங்கள் விரும்பிய இடங்களிற்கு கொண்டு சென்று பாவிக்க கூடியது.
விசேட விலைக்கழிவுடன் Kings Electronics (Pvt) Ltd நிறுவனத்திடம் இருந்து இன்றே வாங்கிச் செல்லுங்கள்

3 YEARS WARRANTY
**LED TV'S**
Samsung 32" -29900
Hisence 32" -24500
Sony 40" -67900
Hisence 24" -17900
Tcl 32" -21900
Panasonic 32" -28500


SONY DVD PLAYER
ONE YEAR WARRANTY
RS 5250/=

STAND FAN 3190/=

**Best Deal** AIRCONDITIONER

**KINGS ELECTRONICS(PVT) LTD**
12A, Point Petro Road, Jaffna
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
021-4546699 mykings.lk kingsjaffna
(சி-7843)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 109

வள்ளுவர் ஆண்டு 2048 | 19.03.2017 | தொலைபேசி : 021 222 3378

# அரசுக்கு வெற்றி!





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. விதானையார் விசுவலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன வாத்தியார் எங்கட விதானையாரை இன்னும் காணவில்லை. ஏதும் சுகவீனமோ. கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

கச்சதீவுக்குப் போய்வந்த களைப்பு அதுதான்... சாத்திரியார் சதாசிவத்தின் ஊகம் சரியாகத்தான் இருக்கும். கச்சதீவால வந்த பிறகு காலை நீட்டவும் முடக்கவும் முடியாமல் இருக்குது. மூப்பரின் இந்தக் கவலை அவருக்கு மட்டுமல்ல ஆலடியில் இருக்கின்ற அனைவருக்கும் பொருத்தமாகவே இருந்தது.

என்ன இருந்தாலும் ஒரு வயதுக்குப் பிறகு பயணம் செய்யிறது என்பது கடினமான காரியம் தான். இந்தாப் பாருங்க எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா கனடாவுக்குப் போயிற்று வந்தபிறகு அவற்ற உடல் நிலை சரியில்லாமல் தானே இருக்குது.

பண்டிதர் பரமலிங்கம் கூற, அதனை ஆலடி மாநாடு அப்படியே ஏற்றுக் கொண்டது.

ஏதோ அவர் ஒருத்தர் தான் எங்கட பிரச்சினையை மிகத் தெளிவாகக் கூறிவந்தார். அவர் ஆற்றுகின்ற உரைகளில் நியாயம் இருக்கும். நீதி இருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக உண்மை இருக்கும்.

இலங்கை அரசாங்கம் செவிமடுக்குதோ இல்லையோ விக்கி ஐயாவின்ர உரை எங்கட தமிழ் மக்களை ஆற்றுப்படுத்தினது எண்டால் அதை யாரும் மறுக்க ஏலாது.

பண்டிதரின் வார்த்தைகளோடு விதானையார் விசுவலிங்கம் வேகமாக ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

விதானையாரும் வந்திட்டார். கச்சதீவுப் பயணத்தால ஏதேனும் பாதிப்போ எண்டு பயந்து போனேன். மூப்பர் சொல்லி முடிக்க விதானையாரும் ஆலடியில் வந்து அமர சரியாக இருந்தது.

**பண்டிதர்:** என்ன விதானையார் ஏன் சுணக்கம்.

**விதானையார்:** பண்டிதர் ஐயா, இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்குவது உறுதியாயிற்று. இனி நாங்கள் என்ன செய்ய முடியும்.

**கங்காணி:** தங்கட வீடு காணிகளை விடச்சொல்லி எங்கட சனங்கள் பகலிரவாகப் போராட்டம் நடத்துகினம். எங்கட கூட்டமைப்பின்ர தலைமை அதைத் திரும்பிப் ப்பார்ப்பதாகவும் இல்லை.

**மூப்பர்:** ஒருக்கால் சுத்திப் பாருங்க. எங்கும் போராட்டம். மக்கள் நிம்மதியாக வாழமுடியாமல் இருக்குது.

**விதானையார்:** இந்த நாட்டில தமிழினம் நிம்மதியாக வாழ்வதாக இருந்தால் அது இந்த ஜென்மத்தில நடக்கிற காரியமல்ல. எங்கடயளே அவங்களோட சேர்ந்து நிற்கிறபோது எப்படி எங்கட பிரச்சினை தீரும்.

**வாத்தியார்:** விதானையார் சொல்லுறது முழுக்க முழுக்கச் சரி. கால அவகாசம் கொடுக்கவேணும் என்பதில எங்கட கூட்டமைப்பின்ர தலைமை கொடுக்குக் கட்டிக் கொண்டல்லோ நிற்குது.

**பண்டிதர்:** நக்குண்டார் நாவிழந்தார் என்றொரு பழமொழி எங்கட தமிழ் மொழியில இருக்கல்லோ. விலை போயிற்றா இதைத் தானே செய்யவேணும்.

**சாத்திரியார்:** இலங்கை அரசாங்கத்திற்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்பதில மிகவும் உறுதியாக இருக்கிற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்ர தலைமை தமிழருக்காகக் கதைக்கிற மாதிரியான நடிப்புகளும் நடத்துகினம்.

**விதானையார்:** இந்தா.. சாத்திரியார் கண்டுபிடிச்சிட்டார். இராணுவத்தினர் மீது போர்க்குற்ற விசாரணை இடம்பெறமாட்டாது எண்டு ஜனாதிபதி மைத்திரி சொன்னவரல்லோ. அவ்வாறு சொன்னதால மைத்திரிக்கு முதுகெலும்பு இல்லை எண்டு மந்திரர் சொல்லுறார்.

ஏனாம் இவையளுக்கு முதுகெலும்பு இருக்காமோ. முதுகெலும்பு இல்லாத ஜனாதிபதிக்கு இரண்டு வருட கால அவகாசம் கொடுத்தால் முதுகெலும்பு வளர்ந்து படையினர் மீது போர்க்குற்ற விசாரணை நடத்துவாரோ. அங்கொரு கதை இங்கொரு கதை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அப்ப தொடக்கம் இப்ப வரைக்கும் ஒரு விடயத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வாறார்.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா என்ன சொல்லுறியள். மைத்திரியார் என்ன சொல்லுறார்.

**பண்டிதர்:** சர்வதேச நீதிபதிகள் என்ற பேச்சுக்கே இடமில்லை. படையினர் மீதும் போர்க்குற்ற விசாரணை நடக்காது. இதில முதுகெலும்பு இல்லாத கதை என்ன எண்டு தெரியாமல் இருக்குது.

உண்மையில எங்கட அரசியல்தலைமையிட்டத் தான் முதுகெலும்பு இல்லை. மக்கள் முன்னிலையில தேர்தல் பிரசாரம் செய்யிற போது ஒருகதை, தேர்தலில வெண்ட பிறகு இன்னொரு கதை. உண்மையில இவையளுக்குத்தான் முதுகெலும்பு இல்லை எண்டுதான் நான் சொல்லுவன்.

**சாத்திரியார்:** பண்டிதர் ஐயா இரண்டு வருடகால அவகாசத்தில் ஐ.நாவின்ர தீர்மானங்களை நிறைவேற்றுவினமோ.

**பண்டிதர்:** உம்... நடக்கும்... நடக்கும். இரண்டு வருடத்தில இயற்கை தன்ர பணிய ஒழுங்காச் செய்தால் சம்பந்தர் ஐயா எங்களுக்காக வானுலகத்தில இருந்து வாதிடுவார் அவ்வளவு தான்.

**மூப்பர்:** சரியாச் சொன்னியள். இரண்டு வருட முடிவில எதுவும் நடக்காவிட்டால், எங்கட் ஆக்கள் மைத்திரியிட்ட அல்லது ரணிலிட்ட போய்க் கேட்பினமோ ஏன்? செய்யவில்லை எண்டு. எல்லாம் காலம் கடத்தும் நாடகம் அல்லாமல் வேறு ஒண்டும் கிடையாது.

**வாத்தியார்:** சரி... சரி... சதா அரசியலைக் கதைத்துக் காலம் போக்கிறதை விட்டிட்டு எங்கட சமூகப் பிரச்சினைகளையும் கதைப்பம்.

**சாத்திரியார்:** சமூகப் பிரச்சினையோ. மட்டக்களப்பில ஒரு வளர்ப்புத் தாய் அடித்ததில ஐந்து வயதுப் பாலகன் துடிதுடித்துப் பலியாகிப் போனான். இப்படியான ஈனச் செயல்கள் நாட்டில நடக்கத் தொடங்கிற்றுது.

**கங்காணி:** யாழ்ப்பாணத்தில உள்ள ஒரு பிரபலமான பாடசாலையில ஆசிரியர் ஒருவர் இரண்டு மாணவர்களை ஊறுகாய் தின்ன வைத்துத் தண்டனை கொடுத்திருக்கிறாராம்.

**பண்டிதர்:** இதென்ன நாசமறுப்பு. கங்காணியார் என்ன நடந்தது.

**கங்காணியார்:** ஒரு வகுப்பில இருக்கிற மாணவரை அழைத்துவரும் படி ஒரு ஆசிரியை இரண்டு மாணவர்களை அனுப்பி இருக்கிறார். அந்த இரண்டு மாணவர்களும் அந்த வகுப்பறைக்குப் போன போது ஆசிரியர் ஒருவர் கற் பித்துக்கொண்டிருந்திருக்கிறார். குறித்த மாணவரை குறித்த ஆசிரியை வரச்சொன்னதாக அந்த மாணவர்கள் இருவரும் கூறியிருக்கினம். அது அந்த வாத்தியாருக்குப் பிடிக்கல்லயாம். பரிசோதனைக்காக ஒரு ஜாம் போத்தலில முக்கால் பங்களவு செய்து வைக்கப்பட்டிருந்த ஊறுகாயைச் சாப்பிடுமாறு அந்த ஆசிரியர் பணிக்க எதுவும் செய்ய முடியாமல் அந்த இரண்டு மாணவர்களும் ஊறுகாயைத் திண்டு முடித்திருக்கினம். பார்த்தியளோ இது ஒரு புதுவிதமான தண்டனையல்லோ...

**பண்டிதர்:** காலம் கலியுகம். இதில இருந்து தப்புவதெண்டால் ஒரேவழி கடவுளை வணங்குறது தான்.

இப்படிப் பண்டிதர் கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் அடிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



**வளர்ப்புத்தாய் அடித்துக் கொன்ற பாலகனின் பரிதாபம் காண்மினே**

ஆதித்தன்

# மரணம் தான் நீதியோ!


சர்வதேச விசாரணையா? உள்நாட்டு விசாரணையா? என்ற நிலைமாறி போர்க்குற்றங்களில் ஈடுபட்ட அரச படையினர் மீது விசாரணை நடத்தப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழ் மக்கள் சார்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை சிங்கள ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்ளாது அலட்சியப்படுத்தி வருவதால் இந்நிலை உருவானது.

சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய பன்னாட்டு விசாரணைப் பொறிமுறையை தமிழர் தரப்புக் கோரும் போது உள்ளக விசாரணைதான் நடத்தப்படும்.

சர்வதேச நீதிபதிகளைக் கொண்டு விசாரணை நடத்தி நாட்டுக்கு வெற்றியைத் தேடித்தந்த படையினரைக்





காட்டிக்கொடுக்கமாட்டோம் என்றும் உறுதிபடத் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் இந்த நிலைப்பாடு மகிந்த காலத்திலும் மைத்திரி காலத்திலும் மாற்றம் பெறவில்லை. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நிறுத்தப்படும் போது தனது அரசின் தற்போதைய கொள்கையை அப்போது வெளிப்படுத்தியிருந்தால் மகிந்தவின் ஆட்சி தொடர்ந்திருக்கும். காரணம் தமிழ் மக்களின் வாக்குகளை அவர் பெற்றிருக்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்துவிட்டது என்பதற்காக மட்டும் தமிழ் மக்கள் மகிந்தவுக்கு எதிராக வாக்களிக்கவில்லை.

தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் மீது வைக்கும் நம்பிக்கையை மைத்திரி மீதும் வைத்ததன் விளைவாக அவர் ஜனாதிபதியானார்.

தமிழ் மக்களின் வாக்குப் பலத்துடன் தான் நான் ஜனாதிபதியானேன். தேர்தலில் தோற்றிருந்தால் ஆறடி நிலத்திற்குள் சென்றிருப்பேன் என்று அவரே கூறியிருந்தார்.

ஜனாதிபதியாக வருவதற்கும் தற்போது அவர் உயிர் வாழ்வதற்கும் தமிழ் மக்கள்தான் காரணம். ஆனால், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க அவர் தயாராகயில்லை.

சிங்கள ஆட்சியாளர்கள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைப்பது முட்டாள்தனமானது என்பதை மைத்திரியும் தனது இரண்டு வருடகால ஆட்சியின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணையனுசரணை வழங்கிய இலங்கை இன்னும் அதனை நிறைவேற்றவில்லை .

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐ.நா. மனிதவுரிமைகள் கூட்டத்தொடரின் 34 ஆவது அமர்வில் மீண்டும் இரண்டு வருட கால அவகாசத்தை இலங்கை கோரியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இலங்கைக்கு கால நீடிப்பைப் பெற்றுக்கொடுப்பதற்காக கட்சியைக் கூட அதல பாதாளத்திற்குள் தள்ளும் நிலைக்கு வந்துவிட்டது.

மைத்திரி-ரணில் அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடத்தினர் கொண்டுள்ள நெருக்கம், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையைக்கூட இல்லாமல் செய்துவிட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தனிப்பட்ட முடிவு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முடிவாக மாற்றப்பட்டுள்ளது.

மீண்டும் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதற்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நின்றால் வெற்றிபெற்று விடலாம்.

சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து விடலாம் என்ற பதவிப் பேராசை காரணமாக தமிழரசுக் கட்சியின் தலைமைப் பீடத்தினருக்குக் கட்டுப்பட்டுள்ளனர்.

ஆனால், இனவழிப்புக்குள்ளான தமிழினமோ காணாமற்போன தமது உறவுகள் எங்கே என்றும்- படையினர் ஆக்கிரமித்து முகாம் அமைத்தும் ஆடம்பர விடுதி ,கோல்ப் மைதானம், கொண்டாட்டம் என்று இருக்கும் தமது சொந்த நிலங்களை மீட்க ஒரு மாதங்களுக்கு மேலாகவும் போராட்டம் நடத்த வேண்டிய நிலையிலுள்ளனர்.

வீதிகளில் கைக்குழந்தைகளுடன் தமிழ் மக்கள் நடத்தும் போராட்டங்களை விட தமிழின அழிப்பில் ஈடுபட்ட படையினரைப் பாதுகாக்கும் முயற்சியில் சம்பந்தன், சுமந்திரன் போன்ற தமிழ்த் தலைவர்கள் அதீத ஈடுபாடு காட்டுகின்றனர் என்று அக்கட்சியைச் சார்ந்தவர்களே பகிரங்கமாகக் குற்றம்சாட்டியுள்ளனர்.

சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என்ற தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை வலுப்படுத்தும் வகையில் தமிழர் தாயகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போராட்டங்களைக் கூட பொருட்படுத்தாது மைத்திரி- ரணில் அரசைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் கூட்டமைப்புக்கு ஏற்பட என்ன காரணம் என்றும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மக்களின் வாக்குப் பலத்துடன் உருவான அரசு என்றும் நல்லாட்சி அரசு என்றும் கூறிக்கொள்வதால் நல்லிணக்கமோ, நிரந்தர சமாதானமோ வந்துவிடப்போவதில்லை.

நல்லாட்சி அரசு சிங்கள மக்களுக்கு மட்டுமானதல்ல.அது நாட்டு மக்கள் அனைவருக்குமானது என்பதை அரசு நிரூபிக்க வேண்டும்.

உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தை அடைந்த போது முள்ளிவாய்க்கால் வரை தொடர்ந்த சிங்கள அரச படைகளின் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாக கொன்றொழிக்கப்பட்டதற்கு உரிய நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

போர்க்குற்றங்களில் அரச படையினர் ஈடுபடவில்லை என்றால் சர்வதேச நீதி விசாரணையை நடத்த அனுமதியளித்து குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்க முடியும்.

அதைவிடுத்து நம்நாட்டு நீதிபதிகள் மீது நம்பிக்கையுள்ளது என்றும் சர்வதேச நீதிபதிகளை இலங்கைக்குள் அனுமதித்தால் அபகீர்த்தி என்று கூறி பொறுப்புக்கூறல் பொறிமுறையிலிருந்து விலகிச் செல்வது முறையல்ல.

. சர்வதேச நீதிபதிகளுக்கு ஒருபோதும் அனுமதியளிக்கமாட்டேன் என்று சிங்கள மக்களை திருப்திப்படுத்தும் ஜனாதிபதி மைத்திரி, தமிழ் மக்களுக்கும் தான் தான் ஜனாதிபதி என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களும் இலங்கைப் பிரஜைகள்தான் அவர்களுக்கும் மனித உரிமைகளை நிலைநாட்ட வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இனவிடுதலைப் போராட்டம் உருவாகுவதற்கு காரணமானவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள் தான் என்பதையும் தற்போது வடக்கு-கிழக்கில் இலட்சக்கணக்கான தமிழர்கள் நடைபிணங்களாக வாழ்வதற்கும் சிங்களவர்களின் இன ஒடுக்குமுறையே காரணம் என்பதையும் உணர்தல் அவசியம்.

தமிழர்கள் நிம்மதியாக வாழ்ந்தால் தான் சிங்களவர்கள் நிம்மதியாக வாழ முடியும் என்பதைப் புரிந்து வைத்துள்ள ஆட்சியாளர்கள் நீடித்த சமாதானம் மலர வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

தமிழ் மக்கள் ஒட்டுமொத்த படையினரையும் போர்க்குற்றவாளிகள் என்று கூறவில்லை.

போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டன என்றும் அது தொடர்பாக நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றே கோருகின்றனர்.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டமை குறித்து விசாரணை நடத்த மறுக்கும் அரசின் மீதும் அதன் கீழ் இயங்கும் நீதித்துறையின் மீதும் நம்பிக்கை வைக்குமாறு நிர்ப்பந்திப்பது எந்த வகையில் நியாயமாகும்.

குமாரபுரம் படுகொலை; நடராஜா ரவிராஜ் எம்.பி. படுகொலை வழக்கு என்பன உள்ளிட்ட சிங்கள ஜூரிகள் சபை முன்பாக நடந்த வழக்கு விசாரணைகள் அனைத்தும் தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிகளை மூடிமறைக்கும் வகையிலேயே அமைந்திருந்தன.

இந்த வழக்கு விசாரணை குறித்து நல்லாட்சி அரசிற்கு ஆதரவளித்துள்ள தமிழ்க் கூட்டமைப்பின் சட்டத்தரணியான சுமந்திரன் எம்.பி. கூட பல விமர்சனங்களை முன்வைத்தார்.

இவ்வாறு இலங்கை அரசின் நிர்வாகக் கட்டமைப்பு மீது நம்பிக்கையற்றிருக்கும் தமிழ் மக்களுக்கு உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையில் எவ்வாறு நம்பிக்கை ஏற்படும்.

சர்வதேச விசாரணைதான் வேண்டும் என்று தமிழ் மக்கள் கோரும் போது உள்நாட்டு விசாரணை என்று கூறுவதும் தமிழ் மக்கள் கேட்கும் அனைத்தையும் கொடுத்து விட முடியாது என்று தட்டிக்கழிப்பதும் நல்லாட்சி அரசிற்கு நல்லதல்ல.

. எனவே இலங்கையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வரை தமிழினத்தை மையப்படுத்தி சிங்களப் படைகளால் முன்னெடுக்கப்பட்ட கொடிய யுத்தம், யுத்தக் குற்றங்கள்,மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச நீதி விசாரணை உடனடியாக நடத்தப்பட வேண்டும்.

இதைவிடுத்து கால அவகாசம் கோரி காலத்தை இழுத்தடிக்கும் முயற்சியை முடிவின்றித் தொடர்ந்தால் தமிழ் மக்களின் மனநிலை வேறுதிசைக்குத் திரும்புவதையும் தடுக்க முடியாது.

வாழ்வாதாரத்தை இழந்து வாழ்க்கைத் துணையை இழந்து தவிப்போருக்கு நம்பிக்கையை ஊட்ட வேண்டும்.

மாற்றான் தாய் மனப்பான்மையுடன் தமிழ் மக்களை நோக்காது தமிழர்களும் நம்நாட்டு மக்களே என்பதை செயலில் வெளிப்படுத்த வேண்டும்.

மரணம் மட்டும் தான் எங்களுக்கு நீதியோ! என்னும் மனநிலையிலிருந்து தமிழ் மக்களை விடுவிக்க வேண்டும்.

இறுதிக்கட்டப் போரிலே ஆயுதம் தரித்த சிங்களப் படையினரிடம் அகப்பட்ட எத்தனையோ தமிழ்ப் பெண்கள், இளைஞர்கள்,போராளிகள் பல கொடூர சித்திரவதைகளுக்குட்படுத்தப்பட்ட போது மரணம் ஏற்படாதோ என்று ஏங்கியிருப்பர்.

மரண வேதனையை அனுபவிப்பதை விட மரணத்தை அடைவது எவ்வளவோமேல்.

குருஷேத்திரத்தில் கௌரவர் சேனையிடம் நிராயுதபாணியாக சிக்கிக்கொண்ட அபிமன்யுவிற்கு மரணத்தையளியுங்கள் என்று பாண்டவர்கள் கெஞ்சியதைவிடக் கொடூரக் காட்சிகள் பல முள்ளிவாய்க்கால் கொலைக்களத்தில் அரங்கேறியுள்ளன.

இத்தகைய அநீதியாளர்களுக்கு எதிராக நீதி விசாரணையைக் கோருவது தவறல்ல. அதனை மறுத்து நீதியைக் குழிதோண்டிப் புதைக்க நினைப்பது தான் தவறு-கொடுமை- அநீதி.

காண்டீபன்




# புத்திசாலி வியாபாரி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஆண்டியப்பன் வீட்டு முற்றத்தில் ஒரு குழி தோண்டி பானையை அதற்குள் வைத்து மண் போட்டு மூடினான்.

ஆண்டியப்பனுக்கு கொஞ்சம் ஆறுதல் ஏற்பட்டது.

ராசாத்தியும் மகிழ்ச்சி அடைந்தாள். அனைவரும் படுத்தனர்.

சற்று நேரத்தில் குதிரைகள் பாய்ந்து வரும் ஓசை அவர்களை நடுங்க வைத்தது.

குதிரைகள் வீட்டு முற்றத்திற்குள் புகுந்தன. வியாபாரியும் ஆண்டியப்பனும் மனைவியும் குழந்தைகளும் பயந்து நடுங்கினர்.

குதிரை மீது அமர்ந்து இருந்த கொள்ளையர்கள் பலமாக கதவைத் தட்டினர்.

உள்ளிருந்த யாரும் பேசவில்லை.

ஆத்திரம் கொண்ட கொள்ளையர்கள் கதவை உதைத்து உடைத்தனர்.

"வெளியே வாங்கடா கழுதைகளே" கொள்ளைத் தலைவன் கத்தினான்.

அவர்கள் கைகளில் வாள்கள் மின்னுவதைக் க்ண்டு அனைவரும் நடுங்கினர்.

கொள்ளைத் தலைவன் ஒவ்வொருவராக வெளியே இழுத்துப் போட்டான், "எடுடா பணத்தை" என்று அலறினான்.

"எங்கிட்ட என்று அழுது கொண்டே சொன்னான் ஆண்டியப்பன்,

கொள்ளையன் தன்னிடம் இருந்த சவுக்கால் ஆண்டியப்பனை ஓங்கி அடித்தான்.

"உம்... சொல்லுடா எங்க வைச்சிருக்கே பணத்தை?" அடிபட்ட ஆண்டியப்பன் கொள்ளையனின் கால்களைப் பற்றி அழுதான்.

அதைக் கண்டு ஆத்திரம் அடைந்த அவன் தன் க்கால்களால் ஆண்டியப்பனை உதைத்தான்.

அப்போது வியாபாரி முன் வந்து, "அடிக்காதீங்க, நான் சொல்றேன்" என்றான்.

கொள்ளையன் வியாபாரியை முறைத்துப் பார்த்தான்.

"இந்த முற்றத்தில் குழி தோண்டி புதைத்து இருக்கிறான்" என்றான் வியாபாரி.

ஆண் டியப்பனும் மனைவியும் பரிதாபத்துடன் வியாபாரியைப் பார்த்தனர்.



கொள்ளையர்கள் குழிக்குள் மறைத்து வைத்திருந்த பானையைத் தோண்டி எடுத்தனர்.

பிறகு பணத்துடன் அங்கிருந்து பாய்ந்து சென்றனர்.

இந்த வியாபாரியும் கொள்ளையர்களின் ஆள் என்று முடிவு செய்தான் ஆண்டியப்பன்.

"இவன் பேச்சைக் கேட்டு ஏமாந்து விட்டேனே.

மகள் திருமணத்திற்கு வைத்திருந்த பணத்தை பறிகொடுத்து விட்டேனே" என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதான் ஆண்டியப்பன்.

ஆண்டியப்பன் வியாபாரி முன் நின்று அழுதபடி கத்தினான்.

"அடே பாவி... உன் பேச்சைக் கேட்டு பணத்தை பறி கொடுத்திட்டேனே... நீ நல்லா இருப்பாயா?" என ஆண்டியப்பன் போட்ட கூச்சல் கிராமத்தை உலுக்கியது. மக்கள் அனைவரும் ஆண்டியப்பன் வீட்டுக்கு விரைந்தனர்.

கிராம மக்களைக் கண்ட ஆண்டியப்பன் நடந்ததைச் சொன்னான்.

"ஏம்பா, உனக்கு இரவில் உணவு தந்து, தங்க இடம் தந்த ஒருவரை இப்படியா காட்டிக் கொடுப்பது?" என்று ஒருவர் ஆத்திரத்துடன் கேட்டார்.

மக்கள் அனைவரும் வியாபாரி மீது கடும் கோபத்தில் இருந்தனர்.

கொள்ளையர்கள் மீது இருந்த கோபத்தை வியாபாரி மீது காட்டுவதற்காக மக்கள் துடித்தனர்.

இன்னும் சிறிது நேரத்தில் கிராம மக்கள் தன் மீது பாய்ந்து தாக்கிவிடக் கூடும் என்று உணர்ந்த வியாபாரி, "ஐயா, நான் சொல்றதைக் கேட்டு விட்டு தீர்ப்புக் கூறுங்கள்" என்றான்.

அனைவரும் அவனை உற்றுப் பார்த்தனர்.

அவன் தன்னிடம் இருந்த கோணிப் பையை அவிழ்த்தான்.

அதற்குள் ஏகப்பட்ட பணம்! "இதுக்குள் பத்தாயிரம் பணம் உண்டு. கொள்ளையர்கள் கேவலம் ஆயிரம் ரூபா பணம்தான் எடுத்துச் சென்றனர்.

அந்த ஆயிரத்தைக் காட்டிக் கொடுத்து பத்தாயிரத்தை பாதுகாத்தேன்" என்றான் வியாபாரி.

அதைக் கேட்ட ஆண்டியப்பன், " ஐயா, உங்க பணத்தை காப்பாற்றிட்டீங்க... ஆனா என் மகள் கல்யாணத்துக்கு வைச்சிருந்த பணம் போயிடுச்சே" என்று அழுதான்.


" ஐயா, நான் நன்றி கெட்டவன் அல்ல. என் பத்தாயிரத்தை காப்பாற்றிய உங்களை நான் காப்பாற்ற மாட்டேனா" என்று கூறியபடி ஆயிரத்து ஐந்நூறு ரூபா பணத்தை ஆண்டியப் பனிடம் கொடுத்தான் வியாபாரி.

அங்கு கூடியிருந்த வர்கள் வியாபாரியின் புத்தி சாலித்தனத்தை பாராட்டினர்.


(முற்றும்)

குட்டீஸ்களே... எதிர்பாராமல் நடைபெறும் ஆபத்தை புத்திசாலித்தனமாகச் சமாளிக்கலாம். அப்படியான புத்திசாலித் தனத்தால் எந்த ஆபத்தையும் வெல்ல முடியும் என்பதை பார்த்தீர்களா? எனவே, நீங்களும் புத்திசாலித் தனமாக இருங்கள்.

ஹாய் குட்டீஸ்!
இலக்கங்களை அதன் ஒழுங்கில் இணைப்பதன் மூலம் ஒரு உருவத்தைப் பெறமுடியும். புள்ளிகளை இணைத்து உருவத்தைக் கண்டுபிடியுங்கள்...







வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



## கடாய், கோழியை கோவிலில் வெட்டுவதால் பாவங்கள் தீருமா?

**கபில் — மானிப்பாய்**

**வியாசரே ஒரு தத்துவம் சொல்லுங்களேன்?**

காது குத்தியதற்கான அடையாளம் இருக்கிறது. ஆனால் வலி மறந்து விட்டது. முதுகில் குத்திய அடையாளம் இல்லை. ஆனால் வலி மாறாமலே இருக்கிறது.

**மது — யாழ்ப்பாணம்**

**ஆசைப்பட்டது கிடைக்க என்ன செய்யலாம்?**

ஆசைப்பட்டது நமக்கு கிடைக்கவில்லை என்றால் நாம் சரியாக ஆசைப்படவில்லை என்று தான் அர்த்தம்.

**பிரியதர்சன் — கண்டாவளை**

**தற்கால கல்வி நடவடிக்கைகள் பற்றி?**

குருகுல கல்வி முறைமை உடைக்கப்பட்டு பாடசாலை கல்வி என்றைக்கு உருவானதோ அன்றைக்கே மாணவர் இருக்க, ஆசிரியர் நிற்க ஆரம்பித்தார். கல்வி நிலையங்கள் என்றைக்கு ஆரம்பித்ததோ அன்றைக்கே ஆசிரியர் - மாணவர் என்ற உறவில் ஓட்டை விழ ஆரம்பித்து விட்டது.

**நிதர்சன் — மூளாய்**

**கடாய், கோழியை கோவிலில் வெட்டுவதால் பாவங்கள் தீருமா?**

முதலில் ஆலயம் என்றால் என்ன என்பதை அறிவுபூர்வமாக விளங்கிக் கொள்ளுங்கள். மிருக பலியிடலால் மனிதனுக்கு நன்மை என்று நம்பிக் கொண்டிருக்கும் கூட்டத்துக்குள் நாம் வாழ்கின்றோம் என்பதை நினைக்கும் போது வெட்கித் தலைகுனிகின்றோம்.

மனிதனின் உணவுத் தேவைக்காக மிருகங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பது சரி, அதற்காக பலியிடல் என்கின்ற பெயரில் ஆலயத்தில் வைத்து அந்த பாவச் செயலைச் செய்வது எந்த வகையிலும் ஏற்க முடியாது.

**சியான் — கிளிநொச்சி**

**பட்டதாரிகள் வேலையின்றி திண்டாடுகிறார்களே?**

எல்லாம் போராடித்தான் பெறவேண்டும் என்ற நிலை வந்துவிட்டது. இப்போது வேலைக்காகப் போராடுகிறோம். அது கிடைத்து ஐந்து வருடங்களில் இடமாற்றத்துக்காக போராடுவோம். ஏனென்றால் எல்லாம் போராடித்தான் பெற வேண்டும். வாழ்த்துக்கள்.

**ஆதவன் — தெல்லிப்பழை**

**காதலில் சொதப்புவது எப்படி?**

உன் காதலியிடம் ஆயிரம் ரூபாய் கடன் கேள்.

## வியாசர் ஐக்கிய நாடுகள் சபைக்கு போகல்லையோ?

**குமார் — பருத்தித்துறை**

**எங்கள் உறவுகள் நிலத்திற்காகய் அறவழிப் போர் புரிய உள்ளூராட்சித் தேர்தல் ஏற்பாடு நடக்குதாமே?**

நடக்கட்டும் நடக்கட்டும். உசுப்பேற்றிப் பேசுகிற பேச்செல்லாம் இனி சனங்களிட்ட எடுபடாது. உங்களை நம்பினம், வாக்களித்தம், அதிகாரத்தை கைகளில் தந்தோம், எங்களுக்காக பேசுவீர்கள் என நம்பினோம். ஆனால் நீங்களோ வாகன போமிற்றுக்காக அடிபடுகிறியள். அடுத்த முறைச் சீற்றுக்காக ஒரு சிலருடைய தாளத்திற்கு நல்லா அடுகிறீர்கள். ஆடுங்கள், மேடையில் ஆடிவிட்டு கீழே இறங்கித்தான் ஆக வேண்டும். எப்படியும் எங்கள் வீட்டிற்கு வாக்கு கேட்க வந்துதானே ஆக வேண்டும். வாருங்கள். அப்போது பார்க்கலாம்.

**அன்பு வாசகர்களே!**
அரசியல்,ஆன்மீகம்,அறிவியல், பொழுது போக்கு கேள்விகளை
021 567 1532
எனும் இலக்கத்திற்கு SMS அனுப்பி வையுங்கள்.

**கபில் — கோண்டாவில்**

**எப்படி போகிறது நம் அரசியல் நிலவரம்?**

கேட்பார் இல்லை, சொல்வார் இல்லை, நினைப்பாரில்லை, நிலையை உணர்வாரில்லை அறுவாரின் கையில் மாலையைக் கொடுக்க அதை அறுத்து கசக்கி எம் கண்முன்னே வீனடிக்கிறார்களே.

இரண்டாண்டு கெடு கொடுத்தவர்களே கொத்துக் குண்டில் உம் மனைவி மாண்டிருந்தால், செல்லடியில் உம் பிள்ளைகள் மடிந்திருந்தால், மிதி வெடியில் உம் காலிழந்திருந்தால், சன்னம் வயிற்றில் பட்டு குடல் கொட்டுண்ட இளைஞன் ஒருவன் ஐயோ என்னைக் காப்பாற் றுங்கள் என கத்தியதை பார்த்திருந்தால், இறந்து விட்டாள் என்று தெரியாமல் தாயின் மார்பில் பால் குடித்த பிள்ளையின் காட்சியை கண்ணூடே கண்டிருந்தால் இணங்கியிருப் பீரோ இரண்டாண்டுக்கு.

**கோபு — திடலூர்**

**தங்கள் காரியம் பெறுவதற்கு மட்டும் பழகும் பெண்கள் பற்றி?**

பின் விளைவுகள் அதிகமாக இருக்கும் காரியங்களாக இல்லாமல் இருந்தால் சரி.

**தனு — யாழ்ப்பாணம்**

**நல்லா படிக்கும் ஆண்களை காதல் வலையில் வீழ்த்தி குழப்பும் பெண்கள் பற்றி?**

படிக்கும்பையனைகாதலில்வீழ்த்திபடிப்பைகெடுக்க வேண்டும் என நினைக்கும் பெண்ணிற்கு இருக்கும் புத்தி, படிக்கும் போது காதல் செய்து படிப்பை கெடுக்கக் கூடாது என ஆண் சிந்திக்காதது ஏன்.

## பட்டதாரிகள் வேலையின்றி திண்டாடுகிறார் களே?

**காயத்திரி — வயாவிளான்**

**வியாசர் ஐக்கிய நாடுகள் சபைக்கு போகல்லையோ?**

நீதி கிடைக்கும் என்றால் போகலாம். அதுதான் இரண்டு ஆண்டுகள் என்று முடிவெடுத்த பின் கூட்டம் கூடி நாசமறுத்து விட்டார்களே.

இதன் பின் நாம் அங்கே போய் கத்திக் குளறி என்ன பயன். அதையும் மீறி நாம் உண்மையைச் சொன்னால் நல்லாட்சியைக் குழப்புறமாம்.

அட ராமா! அரசியல் ஒரு சாக்கடை என பலர் சொல்லும் போது அதில் உடன்பாடில்லாமல் இருந்தனான் உடன்படுகிறேன். அது சாக்கடையிலும் மோசமானது.

**கமல் — அச்சுவேலி**

**ஜோக் பிளீஸ் வியாசரே?**

ஒருவர் ரிவியின் சனலை மாற்றாமல் ஒரே நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டு இருக்கிறார் என்றால் ஒன்று ரிமோட் பழுது என்று அர்த்தம். இல்லை அவரின் மனம் பழுது என்று அர்த்தம்.

**இராசதுரை — சுழிபுரம்**

**பெண்ணிடம் இரகசியம் சொல்லக்கூடாது என்பது ஏன்?**

பெண் பூப்போன்றவள் பொத்தி பொத்தி வைத்தாலும் பூவின் வாசனையை மறைத்துவிட முடியாது. எவ்வளவுதான் பொத்தி பொத்தி வைத்தாலும் அவளால் இரகசியத்தை அவளால் யாரிடமும் சொல்லாமல் இருக்க முடியாது.

**கீர்த்தனன் — நெல்லியடி**

**உங்களுக்கு இதுதான் நிரந்தர வேலையா?**

இல்லை இல்லை. 25 வருடங்களாக எனது மனைவிக்கு கணவனாக வேலை பார்க்கிறேன். இது பாட்ரைம்.

**பிரசன்னா — கொக்குவில்**

**வாழ்வில் மனிதனுக்கு உயர்வைத் தருவது?**

சிலர் பணம்தான் உயர்வென்பர். சிலர் பதவிதான் உயர்வென்பர். சிலரோ பரம்பரை பரம்பரையாக பேசப்படக் கூடிய சொத்துதான் உயர்வென்பர்.

இன்னும் சிலரோ தங்கள் அந்தரங்க விடயங்களை நாலுபேரின் முன் பேசுவது அதனால் தமக்கு உயர்வு என்ற எண்ணத்துடனும் வாழ்கின்றனர்.

இவர்கள் கிட்டத்தட்ட வடிவேலுவைப் போன்றவர் கள். இப்படி மனித மனங்கள் எப்போதும் மனிதம் என்கின்ற உயர்வை எட்டாது தாறுமாறாக சிந் தித்துக் கொண்டே இருக்கும்.

# கவிதைக் கலசம்



## நிலமிழந்தவரின் கதைகளரல்

காலம் உருட்டி
விளையாடும்
சொற்களின்
தெரிவில்
மீண்டும் மீண்டும்
அர்த்தங்களைத்
தொலைத்தபடி
எம்வாழ்வு....
நம்பிக்கைச்
சொற்கள் கொண்டு
கட்டப்படும்
நம்வாழ்வில்
இன்னமும்
மாறா நடுத்தெருக்
காட்சிகள்
நிலமிழந்தவரின்
கதைகளால்
நிறைகின்ற
புலவு வெளிகளில்
அந்தரத்து
உலாவும்
வாழ்வின் ஆசைகள்

**புலோலியூர்
வேல்நந்தன்**

## கேப்பாப்பிலவு

பூர்வீக மண்ணில்
வாழும் உரிமைகள்
மறுக்கப்பட்டதால்
தொடரும்
போராட்டங்களும்
தொடர்கதையாகிப்போனது
மறுக்கப்பட்ட
உரிமைகள்
மனிதாபிமான
போர்வைக்குள்
குளிர்காய்கின்றன
வாக்குறுதிகளும்
எதிர்பார்ப்புகளும்
திக்கற்றுப் போனதால்
வாழ்வும்
திசைமாறிப் போனது
வரலாற்று மண்
சுமந்த வலிகளும்
கிலிகளும்
கேப்பாப்பிலவின்
கோஷங்களை
அடையாளப்படுத்தி
ஆசுவாசப்படுத்திக்கொண்டது
இன்னொரு...
முன்னகர்வு...
போராட்ட வடிவத்தின்
திசைகளை மாற்றியபடி

**க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்**

## நாய் வடிவில் எமனும்!

எமனும் சில நேரம்
நாய் வடிவில் வருகிறார்
தெருவில் வரும் நாயோ
ஊசி போடா வீட்டு நாயோ
வளர்ப்பதற்காய்
அழைத்துவந்த குட்டிநாயோ
தலைதடவும் போதிலோ
தூக்கிட கைநீட்டும் போதிலோ
தானாக வலிந்து வந்தோ
மெல்லமாய்க் கடிக்கிறார்
நகங்களால் கீறுகின்றார்
காயத்தை நக்குகிறார்
செல்லமான செயல் என்றும்
வழமையே அதுவென்றும் நாமிருக்க
நாயின் உமிழ்நீராம் கிருமியின் வாழிடம்
காயத்தின் வழி சென்று
தன்செயல் புரிந்திடுவார்
உயிரெடுக்கும் எமனுக்கு
பேருதவி புரிந்திடுவார்
நாம் சாகும் நாளினை
விசர் நாயா முடிவெடுக்க
சும்மா சாவதற்கா?
இறைவன் எமைப் படைத்தான்
நாய், பூனை செயலாலே
சிறுகாயம் என்றாலும்
அரச வைத்தியசாலையிலே
சிகிச்சைக்கு செல்வோம்
தாமதமின்றி செல்லுவோம்
பல்லாயிரம் விலை மருந்து
அரசே கொடுக்கிறது
வைத்தியர் சொல் கேட்போம்
எம்முயிர் நாம் காக்க
எம் கடமை நாம் செய்வோம்

**ஜெயச்சந்திரன்**

## அரசும் பனையும்

வடலிகள் முளைத்தன
பனைகள் ஆயின
இடையில் வந்த காகம்
எச்சமிட்டுச் சென்றது

முளைத்தது
பனையிடுக்கில் அரசமரம்

காலம் செல்லச் செல்ல
பனை காணமல் போனது
அரசின் ஆதிக்கம் அதிகரித்தது

பார்ப்பதற்கு அரசமரம்
நிமிர்ந்து நிற்பது போல்
நடுவில் பனை நசிந்தபடி

மூச்செடுக்கும்
ஒவ்வொரு நொடிகளிலும்
இதயங்கள்
எதையோ கடன் கேட்கும்

நாட்டப்பட்ட மரங்களுக்கு
நன்கு வேர்விட்டு
நீர் எடுக்க உரிமையுண்டு

ஒட்டியபடி வாழ்ந்த அரசு
ஒருவாறு நிலத்தில் வேர் விட்டது
பூட்டப்பட்டன விலங்குகள்
பனையின் வேர்களிலே

மழை மறைத்த குடையாய்
பசி போக்க உணவாய்
உடல் உரத்திற்கு ஒடியலாய்

எம் வாழ்வோடு
இணைந்திருந்த பனை
ஒடியலாய் ஒடிந்தது

குருத்துக்கள் விடமுயன்று
புறையேறி முடங்கியது
எதிர்காலத்தை
அண்ணாந்து பார்த்தபடி

**மாவை. நா.கஜேந்திரன்**



## வணங்கும் வழி

வணங்கும் வழியில்
பலவுண்டு
வாழ்த்தும் தொனியில்
சிலவுண்டு
ஆலயத்தில் கூடி
ஆண்டவனை வணங்கி
ஊரை ஏய்க்கும்
போலிகளும் உண்டு
அரசியலை நாடி
பதவி வேண்டி
அவனியை வணங்கி
அண்டியோரை ஏய்க்கும்
அடிவருடிகளுமுண்டு
பதவிக்குப் பணியும்
பண்பு கெட்டவன்
ஊரைக்கெடுக்கும்
பெருச்சாளி
அன்புக்குப் பணியும்
அறிவாளி
அகிலத்தை வெல்லும்
திறனாளி
நல்லதை ஏற்று
தீயதை அகற்றி
வளர நினைப்பவன்
வணங்க ஆரம்பிப்பான்

**சி.திவ்வியா
யா.ப.மெ.ம.வி**

# மௌனத்தின் தேடல்- 345

## கும்பிடு பூச்சி

மருண்டவன் கண்ணுக்கு
இருண்டதெல்லாம் பேய்
ஆட்டிவைத்த அந்தம்மா
ஊட்டிவளர்த்த நாய்
குனிந்து குனிந்து கும்பிடுபோட்டு
கூனிப்போன முதுகு
நிமிரவிடாமல் ஏறிமிதித்த
சின்னம்மாவுக்குச் சிறை
நாலு வருசம் தனக்கு நிம்மதி
நல்ல தீர்ப்புச் சொன்ன நீதிபதி
நன்றி சொல்லி வழமைபோல
போடுகிறார் பெரிய கும்பிடு

**மு.கீதனன்
யா/ஹாட்லிக் கல்லூரி**

## காலம் பதில் சொல்லும்

கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி
தூய உணர்வோடு
வணங்குவது தெய்வத்தைத்தான்
கண்டவர்கள் காலில்
மண்டியிட்டு வணங்குவது
சுயநலத்துக்காகவா
மக்களை ஏமாற்றும்
அரசியல்வாதிக்காகவா
ஞாலத்தில் உண்மை நேர்மை
கெட்டுப்போய் விட்டதே
காலம்தான் பதில் சொல்லும்

**துரை, தென்மட்டுவில்**

## தற்கொலை

மனம் சோர்வு கொண்ட பின்னே
மரணம் உன் முடிவல்ல
ஜனனம் ஒருமுறைதான்
சாதிக்க துணிந்து விடு
துணிந்தவன் அழுவதில்லை
துயரங்கள் பெரிதுமில்லை
வளர்பிறையும் தேய்பிறையும்
வருவது இயல்பு இங்கே
பிறப்பொன்று இருப்பதனால்
இறப்பொன்று வந்திடுமே
இதை நீ அறியாமல்
தவறொன்றைச் செய்யாதே

**இளவரசு, ஒட்டுசுட்டான்**

## தலைகுனிவு

ஆலயம் தொழுவது
சாலவும் நன்று
அன்னையும் பிதாவும்
முன்னெறி தெய்வமாகும்
எழுத்தறிவித்தவரும்
இறைவனாகும் என்றும்
இந்த நால்வரையும்
எந்த நாளும் தொழுதால்
வந்த துன்பங்களும் விலகும்
சொந்தம் கொண்டாடாது
இதைக்கைவிட்டு
எதையோ இலகுவாய்ப்பெற
அடிபணிந்து வணங்குவது
பிற்காலத்தில் நிச்சயம்
தலைகுனிவை ஏற்படுத்தும்
அற்ப சலுகைக்காக
அற்புதமான வாழ்வை
பணயம் வைக்காதீர்

**க.நாகராசா, நுணாவில்**

## கைகூப்பிகளின் தந்திரம்

கைகூப்பி கைகுலுக்கி வணக்கம்
சொன்னவர்களே!
எங்கள் குறை தீர்ப்பதில்
சுணக்கம் என்ன?
வாக்குக்காய் பல வாக்குறுதி
தந்த தலைவர்களே!
வெற்றி பெற்றதும் உங்கள்
வாக்கெல்லாம் பொய்யாச்சோ?
முகத்தின் முன்னால் ஒரு கதை
முதுகுக்குப் பின்னால் ஒரு கதை கூறி
எம்மை முட்டாளாக்கி ஆள்கிறீரோ?
அற்ப ஆசைகளுக்காய் அடுத்தவனிடம்
எம் உரிமைகளை அடகு வைக்காதீர்
அடுத்த தேர்தலுக்கும் எம்மிடம் தானே
வரவேண்டும் வாக்குப் பிச்சை கேட்பதற்கு

**எளிமைக்கவி றொபின்
புன்னாலைக்கட்டுவன்**

# மௌனத்தின் தேடல் -346



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 22.03.2017ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பூச்சிகளே உணவு!

2050 ஆம் ஆண்டில் உலகின் முக்கிய உணவுப்பொருளாக இருக்கப்போவது பூச்சிகள் தான்' என்று அதிர்ச்சியைக் கிளப்பியிருக்கிறது ஐ.நா சபை.

உலகின் மொத்தப் பரப்பளவில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு நாடுகள், ஏற்கனவே பூச்சிகளை உணவாக உட்கொள்ள ஆரம்பித்துவிட்டன. இன்னும் சில ஆண்டுகளில், இந்தியாவிலும் இலங்கை போன்ற நாடுகளில் இந்தக் காட்சிகளைப் பார்க்கலாம் என பயமுறுத்துகிறது ஐ.நா.


இனிவரும் காலங்களில், மனித உடலுக்குத் தேவையான சத்துகள் கிடைக்கும் உணவுகளை மட்டுமே உற்பத்தி செய்தால் போதும். நெல், கோதுமை உள்ளிட்ட தானியங்களைப் பயிர் செய்ய, பல இலட்சம் ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மக்கள்தொகைப் பெருக்கம், வறட்சி போன்றவற்றின் காரணமாகச் விளைச்சல் நிலங்கள் குறைந்துவரும் சூழலில், அது சாத்தியமில்லாத ஒன்று.

அதே நேரம், ஒரு ஏக்கர் நிலத்தில் விளைச்சல் செய்து கிடைக்கும் தானியங்கள் எத்தனை நபர்களின் பசியைப் போக்குமோ அத்தனை நபர்களின் பசியை, பத்துக்குப் பத்து அறையில் பூச்சிகளை வளர்ப்பதன் மூலம் போக்க முடியும். பூச்சிகளில் அதிக அளவு புரதம் உள்ளது.

எனவே, பூச்சிகளை உணவாக உட்கொள்வதன் மூலம் உணவுத் தட்டுப்பாட்டைச் சமாளிக்கலாம்' என்கிறது ஐ.நாவின் சமீபத்திய அறிக்கை.

இந்தியாவின் பூச்சியியல் வல்லுநர் ஒருவர் இது குறித்து கூறும்போது,

"இன்னும் 30 ஆண்டுகளில், பூச்சிகளை உணவாக உட்கொள்ளும் நாடுகளின் பட்டியலில் இந்தியா நிச்சயம் இடம் பிடிக்கும். நீங்கள் உண்ணாவிட்டாலும், உங்கள் பிள்ளைகளும் பேரன் பேத்திகளும் நிச்சயம் பூச்சி உணவை ருசி பார்ப்பார்கள். இந்தியாவில் ஈசலைப் பிடித்து வறுத்து உண்ணும் பழக்கம் தொன்றுதொட்டு



### சவாலைச் சமாளிக்கும் பூச்சி உணவு

பூச்சிகளை உணவாக உட்கொள்வது தொடர்பான அறிக்கையில், '2050ஆம் ஆண்டு உலக மக்கள்தொகை ஒன்பது பில்லியனாக இருக்கும். அதனால் உணவு மற்றும் இருப்பிடத்துக்கான தேவை, தற்போதைய தேவையைவிட இரண்டு மடங்கு அதிகமாகும். ஏற்கனவே இருப்பிடங்களுக்காக விளைநிலங்கள் அழிக்கப்படுகின்றன. அத்துடன் பருவநிலை மாற்றம், தண்ணீர்த் தட்டுப்பாடு ஆகியவை விவசாயத்துக்கு மாபெரும் சவால்களாக உள்ளன. தற்போதைய சூழலில் உலக அளவில் சுமார் ஒரு பில்லியன் மக்கள் பட்டினியுடன் இருக்கிறார்கள். எதிர்காலத்தில் விவசாயத்துக்கான சவால்களைச் சமாளித்து, அனைவருக்கும் உணவு அளிப்பது மிகப்பெரிய சவலாக இருக்கும். அதற்காக தற்போதைய விவசாய முறைகளுடன் இணைந்து, மாற்றுவழி தொடர்பான ஆராய்ச்சியில் இறங்கினோம்.

பல மாற்றுவழிகள் ஆராயப்பட்ட நிலையில், பூச்சிகளை உணவாக உட்கொள்வது சிறந்த முடிவாக இருந்தது. உலக அளவில் இரண்டு பில்லியன் மக்கள் தற்போது பூச்சிகளை உணவாக உட்கொள்கிறார்கள். மனிதர்களுக்குத் தேவையான அத்தனை சத்துகளும் அடங்கிய பூச்சிகளை, குறுகிய இடத்தில் அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்ய முடியும் என்பதால், பூச்சி உணவு எதிர்வரும் காலங்களில் முன்னெடுத்துச் செல்லப்படும். பாரம்பரிய அறிவையும் நவீன அறிவியலையும் இணைத்து, இந்தச் செயற்றிட்டத்தை முன்வைத்துள்ளோம். இனி எதிர்காலத்தில் பூச்சி உணவுகள்தான் உணவு பற்றாக்குறையை ஓரளவுக்குச் சரிசெய்யும்' எனக் குறிப்பிட்டுள்ளார் ஐ.நா. உணவு மற்றும் விவசாய அமைப்புப் பிரிவின் உதவி இயக்குநர் எட்வர்டோ ரோஜாஸ் பிரியலீஸ்.

இருந்துவருகிறது.

2050ஆம் ஆண்டில் உலகின் மக்கள்தொகை, ஒன்பது பில்லியன் கோடியாக மாறும் என எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சூழலில், உணவுப் பாதுகாப்பு என்பது முக்கியமான துறையாக விளங்கப்போகிறது. உலகில் வாழும் அனைத்து மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய, வேளாண் துறையால் மட்டும் முடியாது.

அதனால், மாற்று உணவைத் தேடவேண்டிய கட்டாயத்தில் உலகம் இருக்கிறது. அப்படி மாற்று உணவாக, பூச்சி உணவுகளை முன்னெடுத்துள்ளது ஐ.நா. காரணம், தற்போது உள்ள 720 கோடி மக்களில் கிட்டத்தட்ட 200 கோடிப் பேர் பூச்சிகளைத்தான் உணவாக உட்கொள்கிறார்கள் என்ற நடைமுறைதான். புரதம் நிறைந்த உணவுகளை உற்பத்திசெய்ய வேண்டும். அதற்கு, பூச்சிகள் உற்பத்திதான் சரி யான தீர்வு என்ற முடிவை எடுத்துள்ளது ஐ.நா. என்றார் அவர்.

மனிதர்கள் ஏன் பூச்சிகளை உணவாக உட்கொள்ள வேண்டும்?' என்ற கேள்விக்கு, வலுவான மூன்று காரணங்களை முன்வைக்கிறார்கள்.

1. உருவத்தில் மனிதனைவிடச் சிறியதாக இருந்தாலும், உண்மையில் பூச்சிதான் மனிதனைவிட பெரியது. இன்றைய நிலையில், உலகில் உள்ள ஒட்டுமொத்த மக்களின் எடையைவிட, உலகில் உள்ள ஒட்டுமொத்தப் பூச்சிகளின் எடை ஆறு மடங்கு அதிகம்.

2. மனிதன், பத்து மாதங்கள் கழித்து ஒரு குழந்தை அல்லது இரண்டு குழந்தைகளைப் பெறலாம். ஆனால் ஒரு தாய்ப் பூச்சி, ஒரு நாளைக்கு 40 முட்டைகள் முதல் 400 முட்டைகள் வரை இடும். வெறும் பத்து நாட்கள் உயிரோடு இருக்கும் சில பூச்சி இனங்கள்கூட, சர்வசாதாரணமாக 4,000 முட்டைகளை இடும். இவ்வளவு வேகமான இனப்பெருக்கம், மற்ற உயிரினங்களில் இல்லை. ஆகவே, குறைந்த நாட்களில் அதிக அளவிலான பூச்சியை உற்பத்தி செய்ய முடியும்.

3. மனிதனின் சராசரியான ஆயுட்காலம் 60 ஆண்டுகள். பூச்சிகளின் சராசரி ஆயுட்காலம், முட்டை, புழு, கூட்டுப்புழு, தாய்ப் பூச்சி ஆகிய நான்கு பருவங்களிலும் சேர்த்து மொத்தமே 25 முதல் 40 நாட்கள்தான். அதிகபட்சமாக 60 நாட்கள்.

எனவே ஆடு, மாடு, கோழிகளைப்போல மாதக்கணக்கில், வருடக்கணக்கில் வளர்க்கத் தேவையில்லை. சிறிய அறையில்கூட ஆயிரக்கணக்கான பூச்சிகளை வளர்க்க முடியும் .

கிழக்காசிய நாடுகளான தாய்லாந்து, தாய்வான், கம்போடியா, வியட்நாம், லாவோஸ் ஆகிய நாடுகளில் பூச்சிகளை உணவாக உட்கொள்ளும் வழக்கம் ஏற்கனவே இருக்கிறது. அதை, அவர்கள் பாரம்பரிய உணவாகக் கொண்டாடுகிறார்கள்.

ஆபிரிக்காவில் உள்ள கேமரூன் நாட்டில் தென்னை மற்றும் பனை மரங்களின் தண்டுகளில் காதை வைத்துக் கேட்பார்கள். உள்ளே குடையும் சத்தத்தை வைத்து எந்தவிதமான பூச்சி, எந்தப் பருவத்தில் (குட்டி, புழு, வளர்ந்த பூச்சி) இருக்கிறது என்பதைக் கணிப்பார்கள்.

குட்டிப் புழுவைவிட வளர்ந்த புழுவில் புரதச் சத்துகள் அதிகம். எடையும் அதிகம் இருக்கும் என்பதால், சத்தத்தை வைத்து வளர்ந்த புழுக்கள் உள்ள மரத்தைத் தேர்வு செய்து, மரத்தில் துளையிட்டு, புழுவை வெளியே எடுத்து, வறுத்து உண்பார்கள்.

அதேபோல, கொங்கோ நாட்டிலும், புழுக்கூளை வறுத்து உண்ணும் பழக்கம் உண்டு.

மெக்ஸிகோ நாட்டில் மக்காச்சோளம், பீன்ஸ் மற்றும் பயிர் வகைகளின் விளைச்சல் குறைந்த காலங்களில் முக்கிய உணவாக விளங்குவது பூச்சிகள்தான்.

எந்தெந்த மாதத்தில் எந்தெந்தப் பூச்சிகள் கிடைக்கும் என்பதற்காக, பிரத்தியேக கலண்டர் வைத்திருக்கிறார்கள்.

நமது கலண்டர்களில், இன்றைக்கு எந்தத் திசையில் சூலம், நல்ல நேரம் எனக் குறிப்பிட்டிருப்பதுபோல, அந்த நாட்டு கலண்டர்களில் பூச்சிகள் கிடைக்கும் காலங்களைக் குறிப்பிட்டிருப்பார்கள்.

அவுஸ்திரேலியாவிலும் பூச்சிகள் சாப்பிடும் வழக்கம் உண்டு. உகண்டாவில் மின்வெட்டு அதிகம்.

மின்விளக்கு வெளிச்சத்தில் பூச்சிகளைப் பிடித்து வறுத்து உண்பது உகண்டா மக்களின் வழக்கம்.

அங்கு, சமீப நாட்களாகத் தொடர்ந்து மின்வெட்டு ஏற்படுவதால், 'பூச்சிகளைப் பிடிக்க முடியவில்லை.

எனவே, மின் வெட்டைச் சீர்செய்யுங்கள்' என மக்கள் போராட்டம் நடத்தும் அளவுக்குப் பூச்சி உணவு, அந்த மக்களின் பெரும் விருப்பமாக இருக்கிறது.

சீனா, வியட்நாம், தாய்லாந்து உள்ளிட்ட பல நாடுகளில் நம் ஊரில் கோழிக்கொத்து விற்பதுபோல, தெருவோரக் கடைகளில் பூச்சி வறுவல் கிடைக்கிறது.

உலகின் பெரும்பாலான மக்கள், பூச்சிகளை உணவாக உண்கின்றனர்.

இப்படி, பூச்சி உணவை உட்கொள்ளும் நாடுகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. விரைவிலேயே இந்தப் பூச்சிகள் நம் தட்டுகளுக்கும் வரலாம். கெட் ரெடி!



சிறுகதை

# நீறு பூத்த நெருப்பாய்...

அந்தப் பிரதேச செயலகத்தின் வரவேற்புப் பகுதியில் இருந்த தொலைபேசி மெல்லிதாகச் சிணுங்கிக் கொண்டது. அங்கு வரவேற்பாளினியாக இருந்த பெண் ஒருத்தி அழகான புன்முறுவலுடன் பதிலளித்தாள். பின் அதனை நிறுத தாது ஓடி வந்தாள். நிதிப்பிரிவின் உள்ளே வந்து "மதுரா" என்று மெல்ல அழைத்தாள். கணனியில் ஏதோ தரவுகளைப் பதிவேற்றிக் கொண்டிருந்த மதுரா திடுக்கிட்டுத் திரும்பினாள். கைகளால் தொலைபேசி அழைப்பை பாவனை செய்து காட்டினாள் இவள். உடனே எழும்பிய மதுரா தடுமாறி இடறி விழப் போனாள். எனினும் சுதாரித்துக் கொண்டாள்.

"பார்த்துப்போம்மா" என சிரேஷ்ட பெண் ஊழியர் அக்கறைப்பட்டார். மெல்லிய சிரிப்புடன் வரவேற்புப் பகுதிக்கு வந்த மதுரா தனக்காகக் காத்திருந்த தொலைபேசியை எடுத்து காதில் வைத்துக் கொண்டாள். சிறிது நேர உரையாடலின் பின் தொலைபேசியை வைத்துவிட்டு நிமிர்ந்த வளை " என்ன விஷேசமோ?" என்று கேட்டாள் வரவேற்பாளினி.

"ஓமக்கா இது மூன்றாவது இடம் அம்மாதான் பாவம்" என்றாள் மதுரா.

" ஏன் இப்படி சலிப்பாய் கதைக்கிறாய்?" என்று கடிந்தாள் வரவேற்பாளினி.

ஓர் விரக்தியான சிரிப்புடன் நிர்வாக உத்தியோகத்தர் அறைக்குச் சென்றாள் மதுரா. அரைநாள் விடுப்பு பெற்று தன் மேசைக்கு வந்தவள் தன் கைப்பையில் இருந்த கைபேசியை எடுத்துப் பார்த்தாள். அது செயலற்றுக் கிடந்தது. அங்கு நின்ற நண்பி ஒருத்தியிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

மதுரா! பெயர் மட்டுமல்ல அவளும் ஓர் அழகிதான். கலைப்பட்டதாரியான அவள் அப் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமை புரிகின்றாள். அவள் கடந்து வந்த பாதைகள் மிக மோசமான அனுபவங்களை அவளுக்குக் கற்றுக் கொடுத்திருந்தது.

விசுவமடுப் பகுதியில் வசித்துவந்த அவர்கள் குடும்பம் முள்ளிவாய்க்கால் வரை இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திற்கு வரும்போது அவள் ஆசை அப்பாவையும் அன்பு அண்ணனையும் இழந்திருந்தாள்.

மதுரா தன் பிளசர் ரக மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தாள். வானத்தை அண்ணார்ந்து பார்த்தாள். கருமேகக் கூட்டங்கள் வானத்தை மறைத்திருந்தன. அவையுடன் போராடித் தோற்ற சூரிய பகவான் எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டான். துக்கம் முழுவதுமாக நெஞ்சை அடைக்க அழத் துடிக்கும் பெண்ணைப் போல வானமும் அழுது தீர்க்கத் தயாராகிக் கொண்டிருந்தது.

மதுரா வேகமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தினாள். பதினைந்து நிமிடங்கள் அவள் வீட்டை அண்மித்து விட்டாள். அவர்களது ஒழுங்கையில் பல்சர் மோட்டார் சைக்கிளில் இருவர் நின்றிருந்தனர். அவளை வழி மறித்தனர். அவளுக்கு சந்தேகம் அவர்கள் மீது ஏற்பட்டது. எச்சரிக்கை அடைந்தாள்.

"அக்கா இந்த முகவரியைச் சொல்ல முடியுமா?" எனப் பின்னால் இருந்தவன் இறங்கி வந்தான். மோட்டார் சைக்கிளால் இறங்கியவள் ஓரடி பின்னகர்ந்து முகவரியை வாங்கிப் பார்த்தாள். அக்கணப்பொழுதில் கழுத்தில் இருந்த அவள் சங்கிலியை அறுக்க அவன் முற்பட்டான். அவனது கைகளைத் தட்டியவள் அதே வேகத்தில் தனது தலைக் கவசத்தை அவன் முகத்தின்மீது வீசினாள். அத்தாக்குதலை எதிர்பாராதவன் பொத்தென்று கீழே விழுந்தான். அத்தருணத்தில் மதுரா "கள்ளன் கள்ளன்" என்று கத்தினாள். அவ்வளவுதான் அவர்கள் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடி மறைந்தார்கள். சில நிமிடங்களில் ஊரே கூடிவிட்டது. எல்லோரும் அவள் வீரத்தைப் பாராட்டினார்கள். அவள் வீடு வந்து சேர்ந்ததும் தாய் ஓடிவந்து கட்டியணைத்து அழுதாள்.

"ஏனம்மா நீ அடித்தாய்? பயமில்லையா? அவங்கள் திரும்பி வருவாங்களோ தெரியாது" தாய் பயந்து நடுங்கினாள்.

"ஏனம்மா நீ பயப்படுகிறாய். அவங்களுக்கு நான் சங்கிலியைக் கழற்றி கொடுக்கணுமோ? சினத்தால் அவள் முகம் சிவந்தது.

"சோம்பேறி நாய்கள். பிறர் உழைப்பில் உடம்பு வளர்க்கும் தடிமாடுகள் அவள் வார்த்தைகள் தெறித்தன.

கை கால்களை அலம்பிவிட்டு வா பிள்ளை சாப்பிடுவம் என தாய் மகளை ஆசுவாசப்படுத்த முற்பட்டாள்.

இவர்கள் இருக்கும்வீடு தாத்தா எழுதி வைத்த இவளுக்கான ஒரே சொத்து நாற் சதுர வீடு அது. அம்மாவுக்காக மகளும் மகளுக்கு என அம்மாவும் இவர்களுக்காக அந்த வீடும் இதுதான் அவர்கள் வாழ்க்கை.

அம்மாவோ மகளுக்கு தேடாத வரன் இல்லை. அம்மாவை விட்டுப் பிரிய மனமில்லாத மகள். தனக்கு ஏற்ற வரனை தான் தெரிவு செய்யவேண்டும் என்று கதைத்து அதனால் குழம்பிப் போகும் சம்பந்தங்கள்.

"வாயாடிப் பெண்"என்ற முத்திரை வேறு. இன்று கோயிலில் பார்க்க இருந்த வரனை நாளை வரச்சொல்லி புரோக்கர் மூலம் தாய் சொல்லி விட்டாள். இன்று மகளுக்கு நடந்த அசும்பாவிதங்கள் அவளை அவ்வாறு சொல்ல வைத்து விட்டது.

மதிய உணவை முடித்துக்கொண்ட பின் வழமைபோல் மகள் அந்தப் பெரிய மாமரங்களின் கீழ் சாய்மனைக் கதிரை போட்டு அமர்ந்தாள். அவள் மடியில் மக்ஸீம் கார்க்கி என்ற சோவியத் எழுத்தாளர் எழுதிய "தாய்" என்ற புத்தகத்தை வைத்திருந்தாள். மூன்றாவது முறையாக அதனை இப்போ அவள் வாசித்துக் கொண்டிருக்கிறாள்.

கண்ணும் உடலும் சோர குட்டித் தூக்கத்திற்குப் போனவள் திடுக்கிட்டு கண் விழித்தாள். வடகிழக்கு மூலையாக நாரைக்கூட்டம் ஒன்று கிழக்கில் இருந்து வடக்கு நோக்கி பறந்து சென்றன. அழகாக அணிவகுத்து அவை சென்றன. யார் இதை அவைகளுக்குக் கற்றுக்கொடுத்தது. "சுதந்திரப் பறவைகள்" என்று முணுமுணுத்தாள் மதுரா.

அப்போது அவளும் வன்னியில் சுதந்திரப் பறவைதான். எவ்வளவு வீரம். எவ்வளவு நெஞ்சுறுதி. எவ்வளவு கனவுகள். எவ்வளவு தன்னம்பிக்கை. ஆனால் இப்போ?

அங்கே வருடம் ஒருமுறையாவது இவள் அண்ணன், வீட்டிற்கு வந்து போகும்போது விடிய விடிய எவ்வளவு விடயங்களை இருவரும் கதைத்திருப்பார்கள். எதிர்காலம் தொடர்பில் எவ்வளவு இலட்சியங்களை அவள் அண்ணன் கொண்டிருந்தான். யுத்தம் முடியும் தறுவாயில் ஒருமுறை இவர்களது கூடாரத்திற்கு வந்து "நீங்கள் புறப்படுங்கள் என்னைப் பற்றிக் கவலை வேண்டாம்" என்று சொல்லிப்போனவன்தான் இதுவரை எந்தத் தகவலும் இல்லை. அவனை அம்மாவும் மகளும் தேடாத இடமும் இல்லை. போகாத கோயிலும் இல்லை.

அண்ணா நீ எங்கே இருக்கின்றாய்? இங்கு நடக்கும் கொடுமைகளைப் பார்த்தாயா? எந்த இனத்திற்காகப் போராடினீர்களோ அந்த இனம் தன்னால் தானே சீரழிகிறது. நீங்கள் நிச்சயம் இதைப்பார்த்து வெட்கப்படுவீர்கள். வேதனை அடைவீர்கள். போதைவஸ்து, பாலியல் பலாத்காரம், வாள்சண்டை, கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் என எம் எனமே எம்மீது கட்டவிழ்த்துவிட்ட அநீதிகளுக்காக போராட வேண்டும் அண்ணா. அந்நியனைக் குறை கூறிப் பயனில்லை. கைப்பொம்மைகளாக இருக்கும் எம்மவருக்கு மதி எங்கே? இதுதான் இவள் வாதம். எத்தனை இரவுகள் கண்ணீரில் கரைந்திருக்கும்.

மறுநாள் காலை ஒன்பது மணியளவில் புரோக்கர் சொன்னது போல் கண்ணகை அம்மன் கோயிலுக்கு தாயும் மகளும் சென்றனர். அங்கு ஓர் வானில் மாப்பிள்ளை வீட்டார் வந்திருந்தனர். பெண்ணைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தனர். கேள்வி மேல் கேள்வி கேட்டுக் குடைந்தனர். அவளுக்கு அது சுத்தமாகப் பிடிக்கவில்லை.

புரோக்கர்வந்து இவள்காதில் சொன்னார்.

"பிள்ள, மாப்பிள்ளை தான் வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்துப் பெண்ணைத்தான் திருமணம் செய்வதாகக் கூறியிருந்தார். அவர் விவாகரத்துப் பெற்றவர்தான். ஆனா எஞ்சினியர்" என்று சொல்லிக் கொண்டே போனார்.

தாயும் மகளும் செய்வதறியாது திகைத்து நின்றனர். அவர்களின் நிலை இந்தளவுக்கு கொண்டு போய் விட்டது. "பொம்பிளையைப் பிடிச்சிருக்காம். மீண்டும் புரோக்கர் ஓதத் தொடங்கினார்.

இப்போ மதுரா மாப்பிள்ளையைப் பார்த்தாள். வெயில்படாத தேகம். பணத்தின் இருப்பைக் காட்டும் கனத்த சங்கிலி. தடித்த கண்ணாடி. நாற்பதைத் தாண்டிய வயது. உப்பிய வயிறு.

"தொப்பை அப்பனைத் தொழ வினை அறுமே என்று சிறுவயதில் பாடிய தேவாரம் ஞாபகம் வர "கிளுக்" என்று சிரித்தாள் மதுரா. மாப்பிள்ளை அவளின் விருப்பத்தை அறிய கோயில் குளக்கரைக்கு கூட்டிச் சென்றார். ஆனால் சிறிது நேரத்திலேயே திரும்பி வந்து பதிலைத் தொலைபேசியில் தெரிவிப்பதாகக் கூறி வானில் ஏறிச் சென்று விட்டார். புரோக்கரும் அம்மாவும் மதுராவைப் பார்த்தார்கள். அவள் முகத்தில் ஓர் தெளிவு இருந்தது.

"என்னடி சொன்னாய்? மாப்பிள்ளை இந்த வேகத்தில் போறார்" என்று கேட்டார் அம்மா. மதுரா சிரித்தாள். ஒரேயொரு கேள்விதான் கேட்டன். ஓடியே போய்விட்டார்" என்றாள்.

"அப்படி என்னதான் கேட்டாய்" ஆதங்கப்பட்டார் அம்மா.

"நிலத்தில் விழுந்த ஒரு ரூபா நாணயத்தை உங்களால் குனிந்து எடுக்க முடியுமா?" என்று கேட்டேன்.

"அவ்வளவுதான் என்னை முறைத்துப் பார்த்துவிட்டுப் பறந்து போய் விட்டார்" என்று சொல்லிக் கலகலவென்று சிரித்தாள் மதுரா.

அவள் சிரித்த வண்ணம் இருந்தாலும் நெஞ்சமோ நீறு பூத்த நெருப்பாய் வெந்து கொண்டிருந்தது.

சிவகுருநாதன் சிறீறங்கன்
உரும்பிராய்

# வீட்டுக் கனவுடன் வாழும் மக்களுக்கு விடிவு கிடைப்பது எப்போது?



நாவற்குழி மேற்குபகுதியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான காணியில் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்துதமிழ், சிங்கள சில குடும்பங்கள் அத்து மீறி குடியேறியிருந்தன.

அதனை தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு பகுதிகளில் அத்து மீறி குடியேறிருந்த சில குடும்பங்கள் கடந்தகால அரசாங்கத்தால் அப்பகுதியில் குடியமர்த்தப்பட்டார்கள்.



அதனை தொடர்ந்து குறித்த பிரதேசத்தில் உள்ள மேலதிக காணிகளில் மேலும் சில காணிகள் அற்ற குடும்பங்கள் குடியேற்றப்பட்டு தற்போது அப்பகுதியில் 200 தமிழ் குடும்பங்களும், 53 சிங்கள குடும்பங்களும் வசித்து வருகின்றன.

இந்தநிலையில்தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் இந்த வருடம் அப்பகுதியில் உள்ள 200 தமிழ் குடும்பங்களுக்கும் 50 சிங்களக் குடும்பங்களுக்கும் அண்ணளவாக ஒன்றரைப்பரப்பு காணிகள் விகிதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியிலான வீட்டுத் திட்டம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் குறித்த பகுதியில் சிங்கள குடியேற்றம் அமைக்கப்படுவதாக தெரிவித்து தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எதிர்ப்பு வெளியிட்டிருந்த நிலையில் அப்பகுதியில் உள்ள சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்திற்கு எதிர்ப்புகள் ஏற்படுமிடத்து குறித்த வீட்டுத்திட்டம் முற்றுமுழுதாக நிறுத்தப்படும் எனவும் தகவல்கள் உயர் மட்டங்களில் இருந்து வெளியாகியிருந்தன.

எனவே இது பொதுமக்களின் இருப்பிடங்களுடன் தொடர்புடைய மிக முக்கியமான விடயம் என்பதால் தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்புக்களும் தணிந்துபோயிருந்தன.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி குறித்த வீட்டுத் திட்டத்துக்கான நாள், அடிக்கல் நாட்டும் நிகழ்வு யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது. ஒருமாதகாலத்துக்குள் வீடுகட்டும் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் குறித்த வீட்டுத்திட்ட பணிகள் திடீரென நிறுத்தப்பட்ட காரணத்தால், தமக்குரிய பணத்தினை வழங்கக்கோரி அப்பகுதி மக்கள் கடந்த மாதம் யாழ். மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். ஒருவார காலத்தினுள் குறித்த வீட்டுத்திட்டத்துக்கான பணத்தினை பெற்றுத் தருவதாக சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கூறி அந்த மக்களை சமாதானமாக அனுப்பிவைத்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் நேரடியான நிலைமைகளை ஆராய்வதற்கு நாவற்குழி ஐயனார் வீதியிலமைந்துள்ள வீட்டுத்திட்டத்துக்கு நாம் சென்றிருந்தோம். அப்போதுதான் அங்குள்ள மக்களின் பரிதாபமான வாழ்க்கை நிலையை உணரக் கூடியதாக இருந்தது.

ஒவ்வொரு குடும்பங்களும் தமது காணிக்குள் ஒரு மூலையில் தறப்பாளால் குடில்கள் அமைத்து வாழ்ந்து வருவதனை அவதானிக்க முடிந்தது. பெரும்பான்மையான இடங்களில் அத்திபாரங்கள் வெட்டப்பட்டு இருந்தன. சிலர் அத்திபாரம் அமைத்திருந்தமையையும் காணக் கூடியதாக இருந்தது.

மேலும் சிலர் தறப்பாள் குடிலுக்குள் வீட்டு பொருட்களை வைத்துவிட்டு மரங்களுக்கு கீழ் வசித்து வருகின்றனர். இவ்வாறு உள்ள பலரிடமும் குறித்த வீட்டுத்திட்டத்தை பற்றியும் பாதிப்புக்களை பற்றியும் கேட்டறியக் கூடியதாக இருந்தது.

வீட்டுத்திட்டத்தை எதிர்பார்த்து பாதிக்கப்பட்ட பயனாளி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

நாம் 7 வருடங்களுக்கு முன்னர் வீதிகளில் வாழ்ந்துவந்தோம். எம்மை யாரும் கண்டுகொள்ளவில்லை. அதன் பின்னர் இப்பகுதியில் வந்து குடியமர்ந்தோம். யாரும் எந்தவிதமான உதவிகளும் எமக்கு செய்யவில்லை. வீட்டுத்திட்டம் தருவதாக கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் தெரிவித்தார்கள். "உடனேயே வீடுகளைப்பிரி, உடனேயே இடி, உடனடியாக அத்திபாரங்களை வெட்டுங்கள் என தெரிவித்தார்கள். அதனால் தான் நாம் உடனடியாக எமது இருப்பிடங்களை அகற்றி தற்காலிக



குடிசைகளை அமைத்திருந்தோம்.

மிகவும் நம்பிக்கையுடன் இதை எதிர்பார்த்து எமது இருப்பிடங்களை குலைத்தோம். ஆனால் ஏமாற்றிவிட்டார்கள். மழை, வெயில் இந்த இரண்டும் மாறிமாறி எம்மை படாதபாடுபடுத்துகிறது.

தாங்க முடியாத வேதனையை அனுபவிக்கிறோம். நின்மதியாக உண்ணவும் முடியவில்லை, உறங்கவும் முடியவில்லை.

### மனிதாபிமான அடிப்படையில் எம்மை மனிதராக மதித்து உதவி செய்யுங்கள்.

அடிக்கல்நாட்டி 2 மாதங்கள் ஆகின்றன. இவர்கள் வீட்டுத்திட்டத்தை தருவதென்றால் தரவேண்டும். இல்லை என்றால் எமக்குரிய நட்டஈட்டை வழங்கவேண்டும். இவர்களை நம்பி இருந்த வீட்டையும் உடைத்துள்ளோம். இப்போது நடுத்தெருவில் நிற்கிறோம்.

மேலும் ஒரு பயனாளி கருத்து தெரிவிக்கையில்,

எனக்கு 4 பிள்ளைகள். கணவர் மனநோயாளி. என்னால் முடிந்தளவு உழைத்து கடன்பட்டுத்தான் முன்னர் இருந்த வீட்டை கட்டினேன். வீட்டுத் திட்டம் தருவதாக சிலர் வந்தார்கள். உடனடியாக அதற்குரிய அத்திபாரங்களை வெட்டி ஆயத்தப்படுத்துங்கள் என தெரிவித்தார்கள்.

அப்போது நாங்கள் தெரிவித்தோம், எமக்கு இருப்பதற்கு வேறு வீடு இல்லை. எனவே ஆறுதலாக எமக்குரிய இருப்பிடங்களை ஒழுங்கமைத்த பின்னர் எமது வீடுகளை அப்புறப்படுத்துகிறோம் என கேட்டுக்கொண்டோம். அதற்கு அவர்கள் சம்மதிக்கவில்லை. வீட்டுத்திட்டத்துக்குரிய ஆயத்தங்கள் நிறைவடைந்து விட்டன. எனவே விரைவில் குறித்த திட்டத்தை நடைமுறைப் படுத்தவேண்டும். எனவே உடனடியாக ஆயத்தமாகுங்கள் என தெரிவித்தனர்.

அவர்களுடைய கருத்தை நம்பி இங்குள்ள 90 வீதமானவர்கள் தமது இருப்பிடங்களை அகற்றி அத்திபாரங்களை வெட்டியுள்ளனர்.. இப்போது எமக்கு தங்குவதற்கு இடம் இல்லை. பிள்ளைகளை இரவில் தூங்குவதற்காக ஒவ்வொரு வீட்டுக்கு அனுப்பிவிட்டு நாம் வீட்டு பொருட்களுக்கு காவல் இருக்கிறோம்.

எமக்கும் பிள்ளைகளுக்கும் தகுந்த பாதுகாப்பு இல்லை. மழை வந்தால் இரவில் தூக்கமில்லாமல் எழுந்துதான் நிற்கிறோம். ஒரு மனிதருக்கு தேவையான நின்மதி நித்திரைமட்டும் தான். அதுவும் இல்லாத நிலையில் பரிதவிக்கிறோம். அதிகாரிகளிடம் கதைத்தும் எந்த பயனும் இல்லை." ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள்" என சொன்னார்கள். அங்கும் எமது பிரச்சினையை கூறி மகஜரை கையளித்தோம். ஆனால் இதுவரை பதில் இல்லை என தெரிவித்தார்.

மேலும் ஒரு பயனாளி கருத்து தெரிவிக்கையில்,

முன்னர் சாதாரண வீட்டில் இருந்த போதும் எமக்கு தகுந்த நிலையில் குடிசையில் வாழ்ந்து வந்தோம். இந்த வீட்டுத்திட்டத்தை நம்பி 90 வீதமானவாகள் இருந்த இருப்பிடத்தையும் இழந்த நிலையில் உள்ளார்கள். வெளியில் சொல்ல முடியாத நிலையில் பலர் உள்ளனர்.

வீட்டுத்திட்டம் தாமதிப்பதற்கு என்ன காரணம் என்று எமக்கு தெரியாது. அதிகாரிகள் மேல் நாம் குற்றம் சொல்லவில்லை. அவர்களின் வார்த்தையை நம்பித்தான் நாங்கள் வீடுகளை அகற்றினோம். அது கால தாமதம் ஆகுவதால் சீர்குலைந்து இருக்கிறோம். அதிகாரிகள் எம்மை குறை நினைக்காமல் இந்த உத்வியை விரைவில் செய்து உதவுங்கள். காணமல் போனவர்களை தேடுபவர்கள் கண் முன்னே அவதிப்படுகிறவர்களை கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன்? என தெரிவித்தார்.

மேலும் ஒரு பயனாளி கருத்து தெரிவிக்கையில்,

எங்களால் இயன்றளவு சிறிய குடிசைகளை அமைத்து வாழ்ந்து வந்தோம். பாதிக்கப்பட்ட ஏழைகளாக தான் நாம் உள்ளோம். எங்களை மக்கள் பிரதிநிதிகள், அதிரகாரிகள் வந்துபார்த்து எம்மை இனங்கண்டு உதவிகளை செய்துதர வேண்டும்.

ஒரு மனிதனுக்கு மிக முக்கியமானது இருப்பிடம். அதுகூட எமக்கு இல்லை. பூச்சி, பாம்புடன் தான் வாழ்கிறோம். மக்கள் பிரதிநிதிகள் யாராக இருந்தாலும் சரி நாங்கள் உங்களை மக்கள் பிரதிநிதிகள் என நம்பித்தான் வாக்களித்தோம்.



நீங்கள் வந்து ஒருமுறை எமது இடங்களை பார்வையிட வேண்டும் சாகிறதா? வாழுறதா? என்ற நிலையில் உள்ளோம். இராணுவத்தால் பாதிக்கப்பட்டு சாவுக்கு உள்ளே போய் வெளியில் வந்து வேதனையை அனுபவித்து வருகிறோம்.

எமக்கு முன்வந்து உதவி செய்யுங்கள். தேர்தல் நேரம் வீடு வீடாக வரும் அரசியல்வாதிகள் ஏன் எமது சொந்த பிரச்சினைகளை கேட்க வருகிறார்கள் இல்லை. இந்த சமுதாயத்தில் ஏன் எம்மை இப்படி வேதனைப்படுத்துகிறார்கள் என கேள்வியெழுப்பியிருந்தார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஜூன்மாதமளவில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான கலந்துரையாடலின் போது குறித்த நாவற்குழி வீட்டுத்திட்டத்தில் உள்ள மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு 5 லட்சம் பெறுமதியான வீடும் வழங்கும்



திட்டம் முன்வைக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டுக்குரிய வரவு- செலவு திட்டத்தில் மேற்குறித்த அமைச்சுக்கு வடகிழக்கு மானிய அபிவிருத்தி திட்டத்துக்கென நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

பின்னர் வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை பிரதி அமைச்சர் இந்திக்க பண்டார மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் குறித்த திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. அந்தவகையில் டிசெம்பர் மாதம் இப்பகுதி மக்களுக்கு அறிவிக்கப்பட்டு ஜனவரிமாதம் நாள் அத்திபாரம் இடப்பட்டது.

இந்தநிலையில் குறித்த அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் வீட்டுத்திட்டம் தொடர்பாகவும் வேறு சில அமைச்சுக்களுக்கிடையே ஏற்பட்ட அரசியல் போட்டி காரணமாக திடீரென நிறுத்தப்பட்டது. வேறு அமைச்சுக்களும் குறித்த திட்டத்துக்கு நிதியை ஒதுக்க முன்வரவில்லை. இதனால் அப்பகுதி மக்கள் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. குறித்த அதிகாரிகளும் செய் வதறியாது அந்தரித்துக் கொண்டும் திரிந்தமையை அவதானிக்க முடிந்தது.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை மீண்டும் பிரதமருடனான கலந்துரையாடலில் குறித்த நாவற்குழி வீட்டுத்திட்டத்துக்கென நிதி தற்போது ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இருப்பினும் வீட்டுத்திட்டத்துக்காக படிப்படியாக பொருட்கள் கொள்வனவுசெய்யப்பட்டே மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. இதன் காரணமாக பலநெருக்கடிகளும் அசௌகரியங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் பொதுமக்களுக்கு பாதிப்பற்ற வகையில் குறித்ததிட்டத்தை கொண்டு செல்லவேண்டிய தேவை அதிகாரிகளுக்கு உண்டு. ஏனெனில் எந்தவொரு விடயமாக இருப்பினும் மனிதாபிமான அடிப்படையில் சில விடயங்களை விரைவில் செய்ய வேண்டியிருப்பது காலத்தின் கட்டாயமாகும்.

பொ.சோபிகா ஸ்மைலினி

# நாயிற் கடையாய்

(உருவகம்)

அனைவருக்கும் வணக்கம்... நான் பேசுவது உங்களுக்கு புரியுமோ தெரியாது. இதுவும் தமிழ் தான்... பொறுமையாக கேளுங்கோ... என்னுடைய பெயர் ஜிம்மி... கருகருவென்று நான் நல்ல வடிவு. நெற்றியில் ஒரு வெள்ளைச்சுட்டி. நான் நெற்றியைச் சுருக்கும் போது அதுவும் சுருங்கி விரியும். என்னுடைய அப்பா றெக்ஸ். அவர் பெரிய ராஜா மாதிரி. அம்மா கறுப்பி. அவ நல்ல அன்பானவ. அண்ணா வைரவன். ஆனால்... இப்ப அவன் உயிரோட இல்லை. எங்கட குடும்பம் நல்ல சந்தோசமான சின்னக் குடும்பம்.

அழகான கிராமம். வயலுக்குப்பக்கத்தில பெரிய பள்ளிக் கூடத்துக்கு அப்பா காவல் கடமைக்குப் போறவர். ஊர்ப் பெரியவர் ஒருவரின்ர பெரிய வீட்டிற்குப் பின்னால் இடிஞ்சு போன பழைய தாய்மனை ஒன்றுதான் எங்கட மாளிகை. மழைக்காலங்களில் எங்கட சொந்தங்கள் எல்லாம் இங்கை தான் வந்து சேர்ந்திருப்பினம். நல்ல சந்தோசமா இருக்கும்...

"ஜிம்மி! கழுத்துப்பட்டி கவனம் ... கரையாலை போய் ஒதுக்கமா இருக்கவேணும்..."

அம்மாவின் குரல் இப்பிடிப் பாசமாகவும் கண்டிப்பாகவும் இருக்கும். கழுத்துப்பட்டி இல்லாட்டி எங்களைப்பிடித்து வண்டியிலை ஏத்திப் போடுவினம். அப்பா இரவு வேலை எண்டபடியால் இப்ப நல்ல நித்திரை...ம்... இண்டைக்கு வெள்ளிக் கிழமை... சிவபுராணம் கேட்கும்..... நான் கெதியா நடக்கிறன். சின்னப்பிள்ளைகள் எனக்குக் கைகாட்டினம்... என்னுடைய வழமையான புல் தரையில் நான் கோயிலைப் பார்த்தபடி இருக்கிறன். பிள்ளைகள் உள்ளே வந்து கொண் டிருக்கினம். எங்கட பெரியவரின்ரை பேத்தி ... லதாக்குட்டியும் வாறா. அவவுக்கு இப்பதான் காய்ச்சல் மாறியிருக்கு.முந்தின சிரிப்பு இல்லை. முகம் வாடிக் கிடக்கு. பாவம் .... எனக்கு பிஸ்கட், பால் எல்லாம் தாறவா. லதாக்குட்டி பூப்போல நல்ல வடிவு. நான்... இங்கே இருந்து கொண்டே அவாவைப் பார்க்கலாம்.

ம்... போன வருஷம் இவா கைவேலைக்குப் பூக் கொத்துக் கொண்டு வராமல் ரீச்சர் எழும்பி ஏசிப்போட்டு ஒரே ஒரு அடிதான் ... அதுவும் கையிலைதான் அடிச்சுப் போட்டா.. பிள்ளைக்குப் பழக்கமில்லைத்தானே... அது வீரிட்டுக் கத்திப் போட்டுது. கண்மூடி முழிக்கேல்லை, எங்கட அண்ணா வைர வன் எங்கயிருந்து வந்தானோ... பாய்ஞ்சு கொண்டு வந்து ரீச்சரின் சாறித் தொங்கலை எட்டிப் பாய்ஞ்சு கிழிச்சுப் போட் டான். ரீச்சருக்கு வந்துதே கோபம்... தும்புக்கட்டைத் தடியாலை தலையிலை ஓங்கி அடிச்சுப் போட்டா.... ஒரு அடிதான். அண்ணா துடிச்சுப் போட்டான். சுழன்றடிச்சுக் கொண்டு சுருண்டு போய்ப் பற்றைக் குள்ள விழுந்தவன் தான்... எழும் பவே இல்லை... ரீச்சர் சரியாக கவலைப்பட்டவா. தண்ணி யெல்லாம் தெளிச்சுப்பார்த்தவை . ஊகூம் ... அம்மா அப்பா வாறதுக்கிடையிலை அண்ணா செத்துப் போனான். ம்... இப்பவும் அதை நினைச்சால் நடுங்குது. கண்ணும் கலங் குது... சின்னப்பிள்ளையளுக்கு அண்ணா நல்ல காவல்.. நெருங்க விடமாட்டான்

ம்.. அதுக்குப்பிறகு நான் நல்ல கவனம். ஏனெண்டால், அம்மா அப்பாவுக்கு நான் ஒரே ஒரு செல்லம்தானே. நானும் இல்லாட்டி அவையள் தாங்க மாட்டினம்...ம்:.. வெய்யிலும் ஏறிட்டு. பழைய மேசை ஒன்றுக்குள் நான் இப்ப இருக்கிறன். சாப்பாட்டு வாளிகள் வருது. ஓ... மதிய உணவு...ம்.. நல்ல ருசியா இருக்கும். சில பிள்ளையள் மிச்சம் விடுவினம்... எனக்கும் போடுவினம். நான் வாலை ஆட்டிக்கொண்டு எழும்பி நிண்டு தான் சாப்பிடுவன். சாப்பாட்டுக்கு மரியாதை கொடுக்க வேணும் எண்டு அம்மா சொல்லுறவா. ஆரும் கிட்ட வருகினமோ எண்டு பார்த்துப் பார்த்துத்தான் சாப்பிடுவன். ம்.. அச்சா..வயிறும் நிறைஞ்சு போச்சு... நாளைக்கும் நாளைக்கு அடுத்த நாளும் லீவு தானே. பெரியவர் வீட்டில தருவினம் ...அப்பாடி...

அங்கை...அம்மா வாறா..தலையையும் ஆட்டி ஆட்டிக் கொண்டு... என்னைத்தான் தேடுறா..ம்..கிட்ட வந்திட்டா...

"ஜிம்மிக்குட்டி... சாப்பிட்டியளோ...கண்டபடி ஓடித்திரியாமல் குளப்படி செய்யாமல் இருங்கோ... லதாக்குட்டி கவனம்...."

அம்மா எப்பவும் இப்பவும் இப்படித்தான். ஒருக்கா நக்கிப் போட்டு வேகவேகமாய் போறா. ஏதோ தான் தான் அதிபர் ஐயா எண்ட நினைப்புப் போல.. ம்... சிரிப்புத்தான் வருது. சரியான கடமையுணர்வு. ஓ... மணி அடிக்குது....ரீச்சர் போறா.. வேறை ஒரு சேர் வாறார்... அவருக்கு எங்களைக் கண்டாலே பிடிக் காது. எங்கடை ஆக்கள் பக்கத்தில் சாப்பாட்டுக்குச் சண்டை பிடிக்கினம்...

"அடிக்.. சொறி நாய்க்கூட்டம்"

அவரின்ர சத்தமே பயமாக்கிடக்குது. நல்ல வேளை. என்னைக் கவனிக்கேல்லை.. அப்பாடி.. பாடம் தொடங்கி ட்டுது. லதாக்குட்டியைப் பாக்கிறார்.. கடவுளே..கிட்ட வாறார்... பிள்ளை எழும்பி நிண்டு அழுது... எனக்கும் அழுகை அழுகையா வருது...என்ன மனிசரிவை... மெதுவா அன்பாக் கதைக்கலாம் தானே. ஏன் இப்படிச்சத்தம் போட்டு ஏசுகிறார்... சின்னப் பிள்ளையளோட இப்படியே கதைக்கிறது...

"ஓ... பெரியவற்றை பேத்தியாம்... தலைக்குள்ளை என்ன களி மண்ணோ... அடிக்கடி லீவு போட்டிடுவா... மகாராணி! என்ன...என்ன முறைப்பு..."

பிடரியில் அடிக்கிறார்.... தடியில்லை...கையாலைதான். ஐயோ.....காய்ச்சல் வந்து இப்பதான் மாறினது... இப்ப மூளையும் கலங்கப் போகுது....ஐயோ... பிள்ளை அழுகுது... நான்...நான்...இப்ப என்ன செய்யிறது... இஞ்சை இருந்து கொண்டே குலைப்பம்...கிட்ட வந்தால் ஓடிப்போகலாம்.

"வள்...வள்...லொள்...லொள்"

அதென்ன பறந்து வருகுது...கிரிக்கெட் பந்தோ....

"ஆ...வாவ்..."

ஐயோ... நெற்றிச்சுட்டியிலை நெருப்புப் பத்துது... பிள்ளையள் எல்லாம் ஓடி வருகுதுகள்..

"ஜிம்மி...ஜிம்மி" லதாக்குட்டி குழறிக்கொண்டு ஓடிவந்து என்னைத் தூக்கிக் கொண்டு புத்தகப் பையையும் இழுத்துக் கொண்டு தெருவாலை ஓடுது...

கண்ணை இருட்டிக்கொண்டு வருது. ஐயோ... நானும் செத்துப் போடுவனோ...கடவுளே...மனிசர் அறிவுகூடினவை, படிச்சவை எண்டுதானே அப்பா சொல்லுறவர். அம்மா... அப்பா...ஓடிவாங்கோ...என்ர குரல் உங்களுக்கு கேட்குதோ...

மலைக்காத்தும் கடலையும் காதுக்குள்ளே இறைஞ்சு கொண்டே இருக்குது... நான் என்ர கடமையைத்தானே செய் தனான்..மனிசர் பேசுறது, பாக்கிறது, செய்யிறது எல் லாம் எங்களுக்கு விளங்குது... ஆனால்... நாங்கள் அன்பாப் பாக்கிறது, நன்றியோட வாலை ஆட்டுறது, வளர்த்தவைக்கு ஒண்டெண்டால் உயிரையே பாக்காம காவலுக்கு நிக்கிறது... இதெல்லாம் .... அவைக்கு ஏன் விளங்குதில்லை. நான்...நான் சாகக் கூடாது... எனக்காக ....யாராவது....சாமி...கும்பிட மாட்டியளோ... மணிச் சத்தம் மெதுவா கேட்டு மறையுது....ஒரே இருட்டு....

பாரதி கணேஷ்
இல.63, ஸ்ரேஷன் றோட்,
சுன்னாகம்.

# இந்த பகுதியில் அழுத்தம் கொடுத்தால் இப்படி ஒரு மாற்றமா..?




உடலில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண பல வழிகள் உள்ளன. அதில் ஒன்று தான் அக்குபிரஷர். இந்த சிகிச்சை முறையில், உடலில் உள்ள பிரச்சினைகளுக்கு குறிப்பிட்ட இடத்தில் அழுத்தம் கொடுத்து சரிசெய்யப் படும். சில நேரங்களில் கிளிப்புகளைப் பயன்படுத் தியும், உடலின் சில பகுதிகளில் அழுத்தம் கொடுக்கப்ப டும்.

இக்கட்டுரையில் காதுகளில் எவ்விடத்தில் அழுத்தம் கொடுத்தால், எந்த உறுப்புக்களில் உள்ள பிரச்சினைகள் குணமாகும் என கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து, நீங்களும் பின்பற்றி நன்மைப் பெறுங்கள்.

1 ஆம் புள்ளி

படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் புள்ளியுள்ள பகுதியானது முதுகு மற்றும் தோள்பட்டையுடன் தொடர்புடையது. எனவே இவ்விடத்தில் துணி கிளிப் கொண்டு 1 நிமிடம் அழுத்தம் கொடுப்பதன் மூலம், முதுகு மற்றும் தோள்பட்டையில் உள்ள அழுத்தம் நீங்கி, நல்ல ரிலாக்ஸ் கிடைக்கும்.

2 ஆம் புள்ளி

2 ஆம் புள்ளியில் துணி கிளிப் கொண்டு அழுத்தம் கொடுப்பதன் மூலம், உடலினுள் உள்ள வலி மற்றும் அசௌகரியம் நீங்கி, உடல் ரிலாக்ஸ் ஆகும்.

3 ஆம் புள்ளி

3 ஆம் புள்ளியானது மூட்டுகளுடன் தொடர்பு கொண் டுள்ளது. இவ்விடத்தில் கிளிப் பயன்படுத்தி அழுத்தம் கொடுப்பதன் மூலம், மூட்டுக்களில் உள்ள வலி மற்றும் பிடிப்புக்களில் இருந்து விடுபடலாம்

4 ஆம் புள்ளி

4 ஆம் புள்ளி சைனஸ் மற்றும் தொண்டையுடன் தொடர்பு கொண்டுள்ளது. இரவு நேரத்தில் மூக்கடைப்பால் தூக்கத்தை இழக்கும் போது மற்றும் சளியால் சைனஸ் சுரப்பியில் வீக்கம் இருக்கும் போது, இப்பகுதியில் அழுத்தம் கொடுப்பதன் மூலம் விடுபடலாம்.

5 ஆம் புள்ளி

5 ஆம் புள்ளியானது செரிமான மண்டலத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. இவ்விடத்தில் கிளிப் கொண்டு அழுத்தம் கொடுத்தால், செரிமான பிரச்சினைகளான வயிற்று வலி மற்றும் பிடிப்புகளில் இருந்து உடனடி நிவாரணம் கிடைக்கும்.

6 ஆம் புள்ளி

6 ஆம் புள்ளி தலை மற்றும் இதயத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. இவ்விடத்தில் அழுத்தம் கொடுக்கும் போது, ஒற்றைத் தலைவலி மற்றும் தலைவலியில் இருந்து விடுபடலாம். மேலும் இப்பகுதியில் கொடுக்கப்படும் அழுத்தத்தால், இதய ஆரோக்கியமும் மேம்படும்.

# கவாஸ்கர் காலத்தில் இருந்தே நீடிக்கும் அவுஸ்திரேலியா-இந்தியா பகை



சமீபத்தில் முடிந்த பெங்களூர் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய தலைவர் ஸ்டீவ் ஸ்மித். டிரெஸ்ஸிங் றூமில் இருந்து 'சிக்னல்' வந்தபின்பே, டி.ஆர்.எஸ் கோரி னார். உடனுக்குடன் தைரியமாக தானாக முடி வெடுப்பதுதான் தலைவரின் கெத்து. அதை விடுத்து, ஸ்மித் இப்படிச் செய்கிறாரே... அவ ருக்கு என்ன புத்தி மழுங்கி விட்டதா? என புலம்பினர் ரசிகர்கள். அவுஸ்திரேலிய முன் னாள் வீரர்களும் கூட ஸ்மித்தின் செயலை ஏற்கவில்லை. இந்த நேரத்தில் தான் Brain fade என்ற வார்த்தையும் பிரபலமானது.

'ஆமாம், நானே பார்த்தேன். இரண்டு முறை ஸ்மித், டிரெஸ்ஸிங் றூமில் ஆலோ சனை கேட்டு அப்பீல் செய்தார். இது நியாயமே இல்லை' என பிரஸ் கான்ஃபரன்ஸில் பொங்கி விட்டார் இந்தியக் தலைவர் விராட் கோலி. 'அப்டீன்னா... ஸ்மித் ஒரு மோசடிப் பேர் வழின்னு சொல் றீங்களா' என நிருபர் கேட்க, 'நான் சொல்லலை. நீங்கதான் அப்படிச் சொல்றீங்க...' என உஷாரானார் கோலி.

கிரிக்கெட் அரங்கில் இந்தியா- அவு ஸ்திரேலியா மோதல் என்றாலே, சர்ச் சைக்குப் பஞ்சம் இருக்காது. இந்த தொடரும் அதற்கு விதிவிலக்கல்ல. ஸ்லெட்ஜிங் உட்பட ஏதாவது ஒரு வழியில் ஏழரையைக் கூட்டுவது அவுஸ் திரேலிய கிரிக்கெட்டர்க ளின் ஜீனிலேயே கலந்திருக்கிறது. "the spirit of the game"- என்பது அவர்கள் அகராதியிலேயே கிடை யாது. சில சமயங்களில் இந்திய வீரர்களும், ஏடாகூடமாகப் பேசுவதுண்டு. கவாஸ்கரே ஒருமுறை 'விளையாட்டு உணர்வை' அடித்துத் தொங்க விட்டிருந்தார். அதுபோன்ற சுவார ஸ்யங்களின் தொகுப்பே இந்த கட்டுரை.

1980, மெல்பேர்ன் டெஸ்ட்

அவுஸ்திரேலியாவின் வேகப்புயல் டென்னிஸ் லில்லி பந்தில், எல்.பி.டபிள்யூ முறையில் அவுட்டானார் இந்தியக் தலை வர் சுனில் கவாஸ்கர். அம்பயர் அவுட் என கைவிரலை உயர்த்த, அவுஸ்திரேலிய வீர ர்கள் கொண்டாட்டத்துக்குத் தயாராகினர்.

ஆனால், நம்ம ஆள் 'இது அவுட்டே இல்லை' என கடும் விரக்தியில், வெளியே றவே இல்லை. டென்னிஸ் லில்லி, கவாஸ் கர் அருகே சென்று பந்து காலில் பட்டதாக சைகை செய்ய, வேறு வழியில்லாமல் அரங்கு திரும்பினார் கவாஸ்கர்.

ஆனாலும், சூடு ஆறவில்லை. தலைவர் அல்லவா? நான் ஸ்ட்ரைக்கர் எண்டில் இருந்த சேத்தன் சவுகானையும் தன்னுடன் அரங்குக்கு வருமாறு இழுத்துச் சென்றார்.

நடப்பதை எல்லாம் பவுண்டரி லைனு க்கு அருகே நின்று பார்த்துக் கொண்டிருந்த இந்திய அணியின் மேலாளர் ஷாகித் துரானி, சேதன் சவுகானை களத்துக்கு திரும்புமாறு சொன்னார்.

கவாஸ்கரும் வேண்டாவெறுப்பாக அரங்கு திரும்பினார். இக்கட்டான நேரத்தில் சமயோ சிதமாக செயற்பட்டதாக அணி மேலாளரைப் பாராட்டினர் வர்ணனையா ளர்கள். 'ஒரு தலைவராக நான் அப்படி நடந்திருக்கக் கூடாது. என் தவறுக்கு எந்த நியாயமும் கற்பிக்க முடியாது' என்றார் பின்னாளில் கவாஸ்கர். இதில் வேடிக்கை என்னவெனில் அவுட் கொடுத்ததோடு வேலை முடிந்து விட்டது என ஜம்மென கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டி ருப்பார் அம்பயர்.

1999, அடிலெய்ட் டெஸ்ட்

சச்சின் அவுஸ்திரேலியர்களின் சிம்ம சொப்பனம் எனில், சச்சினின் சிம்ம சொப்ப னம் வேகப்புயல் மெக்ரத். இரண்டாவது நாள் டீ பிரேக் முடிந்து மட்ச் நடக்கிறது. சச்சினின் விக்கெட்டை வீழ்த்தியே தீர வேண்டும் என 'அவுட் சைட் தி ஆஃப் ஸ்டம்ப்' நோக்கி அனலாக வீசுகிறார் மெக்ரத். சச்சின் அதை சீண்டவே இல்லை. ஆம், சச்சினுக்கு மெக்ரத் வீசியது ஆறு மெய்டன் ஓவர்கள். பின்னாளில் மெக்ரத் தைப் புகழும்போது சச்சின் இந்த சம்பவத்தை நினைவுகூர்ந்தார். ஆனால், விடயம் அதுவல்ல.

மெக்ரத் வீசிய அந்த பந்து பௌன்ஸ் ஆகும் என எதிர்பார்த்து குனிந்தார் சச்சின். அது அவ் வளவாக பௌன்ஸ்ஆகவில்லை (அதான்மெக்ரத்). பந்து சச்சினின் தோள் பட்டை மீது பட்டது.

அவுஸ்திரேலிய வீரர்கள் அவுட் கேட்டு அலறினர். சத்தத்தைக் கேட்டு அதிர்ந்த அம் பயர் டெயரில் ஹார்பெர், யோசிக்கவே இல்லை.

கைவிரலை மேலே தூக்கி விட்டார். சச்சின் உடனடியாக அரங்கு நோக்கி நகர்ந்து விட்டார். 'பந்து கையில் பட்டது போல இருந்தது. அம்பயர் அவுட் கொடுத்து விட்டார்' என்றனர் வர்ணனையாளர்கள். அவர்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்திய ரசிகர்களும் கொதித்தனர். 'ஸ்டம்ப்புகள் இன்னும் ஆறு இஞ்ச் உயரமாக இருந்தால், அதற்கு எல்.பி. டபிள்யூ கொடுக்கலாம்' என கிண்டல் செய்தார் கவாஸ்கர். மனச்சாட்சியே இல்லாமல் அப்பீல் செய்து விட்டோமே என்ற குற்ற உணர்வு சிறிதும் இல்லை அவுஸ்திரேலிய வீரர்களிடம்.

2001, மும்பை டெஸ்ட்

ஐந்தாவது டெஸ்ட் போட்டியின் கடைசி நாள். ராகுல் டிராவிட் புல் ஷாட் அடித்ததை ஸ்கொயர் லெக் திசையில் இருந்த மைக் கேல் ஸ்லாட்டர் ஃப்ரன்ட் டைவ் அடித்து பிடித்தார். பந்து தரையில் பட்டதாக சந்தேகம் எழ, களத்தில் இருந்த அம்பயர்கள், தேர்ட் அம்பயரின் உதவியை நாடினர். முடிவில், அது நொட் அவுட் என அறிவிக்கப்பட்டது.

ஆத்திரமடைந்த ஸ்லாட்டர் நேராக, டிராவிட்டிடம் சென்று வம்பிழுத்தார். டிராவிட் அசரவில்லை. உடனே அம்பயர் வெங்கட் ராமனிடமும் அதிருப்தி தெரிவித்தார் ஸ்லாட்டர்.

போட்டி முடிந்தபின், டிராவிட் அவுஸ்தி ரேலிய டிரெஸ்ஸிங் றூமுக்குச் சென்று விவாதித்தார். இரு தரப்பிலும் நீண்ட நேரம் விவாதம் நடந்தது. ஸ்லாட்டர் தன் செயலு க்கு வருத்தம் தெரிவித்தார். அத்துடன் அந்த பிரச்சினைக்கு முடிவுக்கு வந்தது. முந்தைய செயற்பாட்டைக் கருத்தில் கொண்டு, ஐ.சி.சி மட்ச் ரெஃப்ரி கேமி ஸ்மித், ஸ்லாட்டரை எச்சரிக்கை மட்டும் செய்து மன்னித்தார்.

2008, சிட்னி டெஸ்ட்

இதுதான் உச்சம். Monkeygate எனும் வார்த்தை இந்தியா, அவுஸ்திரேலியா மட்டு மல்லாது கிரிக்கெட் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது. பொதுவாக அவு ஸ்திரே லியர்கள்தான் களத்தில் வம்பிழுப்பார்கள். இந்தமுறை ஹர்பஜன் அவர்களைச் சீண்டினார்.


அவுஸ்திரேலிய ஆல் ரவுண்டர் சைமண் ட்ஸைப் பார்த்து, "குரங்கு" என ஹர்பஜன் சொன்னதாக குற்றம் சாட்டப்பட்டது. இன ரீதியாக திட்டியதற்காக ஹர்பஜ னுக்கு மூன்று போட்டிகளில் விளையாட தடை விதிக்கப் பட்டது. இதை எதிர்த்து பி.சி.சி.ஐ. முறையிட் டது. 'அவுஸ்திரேலியர் கள் விளையாட்டு உணர்வுடன் நடந்து கொள்ளவில்லை' என அனில் கும்ப்ளே குற்றம் சாட்டி இருந்தார். சச்சின் தன் சுயசரிதைப் புத்தகத்திலும் இந்த சம்பவம் குறித்து எழுதியுள்ளார். (க)





## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: பாசமலர்
இசை: விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பாடியவர்கள்: ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா
வரிகள்: கண்ணதாசன்




மலர்ந்தும் மலராத பாதி மலர்
போல வளரும் விழி வண்ணமே
வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலையன்னமே
நதியில் விளையாடி கொடியின் தலை சீவி நடந்த
இளம்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர்
கண்டு பொலிந்த தமிழ் மன்றமே

மலர்ந்தும் மலராத பாதி மலர்
போல வளரும் விழி வண்ணமே
வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலையன்னமே
நதியில் விளையாடி கொடியின் தலை சீவி நடந்த
இளம்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர்
கண்டு பொலிந்த தமிழ் மன்றமே

யானைப் படை கொண்டு சேனை பல வென்று
ஆளப் பிறந்தாயடா
புவி ஆளப் பிறந்தாயடா
அத்தை மகளை மணம் கொண்டு இளமை வழி கண்டு
வாழப் பிறந்தாயடா
அத்தை மகளை மணம் கொண்டு... இளமை வழி கண்டு...
வாழப் பிறந்தாயடா

தங்கக் கடிகாரம் வைர மணியாரம்
தந்து மணம் பேசுவார்
பொருள் தந்து மணம் பேசுவார்
மாமன் தங்கை மகளான மங்கை உனக்காக
உலகை விலை பேசுவார்..உலகை விலை பேசுவார்
மாமன் தங்கை மகளான மங்கை உனக்காக
உலகை விலை பேசுவார்

நதியில் விளையாடி கொடியின் தலை சீவி
நடந்த இளம்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

சிறகில் எனை மூடி அருமை மகள் போல
வளர்த்த கதை சொல்லவா
கனவில் நினையாத காலம் இடை வந்து பிரித்த
கதை சொல்லவா..
பிரித்த கதை சொல்லவா

கண்ணில் மணி போல மணியின் நிழல் போல
கலந்து பிறந்தோமடா
இந்த மண்ணும் கடல் வானும் மறைந்து
முடிந்தாலும் மறக்க முடியாதடா
உறவைப் பிரிக்க முடியாதடா
ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்

அன்பே ஆரிராரோ ஆரிராரோ
ஆரிராராரிரோ
அன்பே ஆரிராரிரோ..அன்பே ஆரிராரிரோ

## வெகுவிரைவில் தொப்புள் கொடி



பன்னங்கண்டியான் வழங்கும் "தொப்புள் கொடி" குறுந்திரைப்படத்தின் 2 nd Look உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவுள்ளது.

Vj. நிதன், Vj. யனு, இளங்கோவன், பலவிலன், சானு, பரணி, வானு, தபோ, R.U.S.வாலா, கிரிசாந், ரதன் ராஜ், சுயீபன் ஆகியோரின் நடிப்பில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் இளம் இசையமைப்பாளர், இயக்குநர் என பல பரிமாணங்களில் திகழும் R.வருனின் இயக்கத்திலும் "தொப்புள் கொடி" உங்களுக்கு விருந்தாக மிகக் குறுகிய காலத்தில் வெளிவர இருக்கிறது.

## கனவுகளும் பலன்களும்



அதுவே எதிர்மாறான கனவு கண்டால் அந்த கனவை 'நினைத்து நினைத்தே வேதனைப் படுவர்களும் இருப்பார்கள். அப்படி தீய கனவை கண்டவர்கள் இறைவனை நம்பிக்கையுடன் வணங் கினால் தீய கனவுகளும் வெறும் கனவாகவே ஆகிவிடும். மொத்தத் தில் இறைவன் ஒருவனே மிகப் பெரியவன். அவ னையே முழு மனதுடன் நம்பினால் சங்கடங்கள் விலகி வாழ் நாள் முழுவ தும் எதிலும் சாதிக்கலாம், புகழ்பெறலாம்.

மனித நடவடிக்கை பற்றிய கனவுகள்.

பலருடன் சேர்ந்திருந்து உண்பது போலக் கனவு கண்டால் பொருள் இலாபம் கிடைக்கும். தனியே அமர்ந்து உண்பது போலக் கனவு கண்டால் நோய் ஏற்படும்.

சட்டை அணிவது போலக் கனவு கண்டால் செய்யும் தொழில் விருத்தியாகும். இலாபம் பெருகும். சண்டை நடப்பது போலக் கனவு கண்டால் வேலை செய்யுமிடத்தில் பிரச்சினை ஏற்படும்.

பால் பருகுவது போலக் கனவு கண்டால் பொருள் இலாபம் கிடைக்கும். ஆனால் பால் அருந்தும் போது சிந்துவது போலவோ அல்லது பாத்திரம் கைதவறி விழு வது போலவோ கனவு கண்டால் தொழிலில் நஷ்டமும் அதனால் கஷ்டமும் ஏற்படும்.

இரத்தம் குடிப்பது போலக் கனவு கண்டால் அதிக பண வரவு ஏற்படும். ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெறுவது போலக் கனவு கண்டால் வாழ்க்கையில் செல்வச் செழிப்பும் மேன்மையும் உண்டாகும். ஆனால் தோல்வியடைவது போலக் கனவு கண்டால் பொருள் விரையமும் வறுமையும் உண்டாகும்.

நீரில் நீந்துவது போலக் கனவு காண்பது நல்லதில்லை. ஆனால் நீந்திக் கரை ஏறுவது போலக் கனவு கண்டால் வாழ்க்கையில் கஷ்டங்கள் ஏற்பட்டு நீங்கும்.

நீச்சல் பந்தயத்தில் கலந்து கொண்டு வெற்றி பெறுவது போலக் கனவு கண்டால் எடுத்த காரியங்களில் வெற்றியும் பொருள் சேர்க்கையும் உண்டாகும்.

பிறருடன் கைகுலுக்குவது போலக் கனவு கண்டால் நண்பர்களுடன் கூட்டுச் சேர்ந்து புதிய தொழில் தொடங்குவர்.

உயரமான இடத்தில் இருந்து இறங்குவது போலக் கனவு கண்டால் வாழ்க்கையில் சிறிது இறக்கம் ஏற்படும்.

எதையாவது இரவல் கொடுப்பது போலக் கனவு கண்டால் நெருங்கிய உறவினருக்கோ அல்லது நண்பருக்கோ பெரிய அதிர்ஷ்டம் ஏற்படும். யாரிடத்திலாவது இரகசியம் பேசுவது போலக் கனவு கண்டால் வாழ்க்கையில் மதிப்பு உயரும்.

உரத்த குரலில் கத்திப் பேசுவது போலக் கனவு கண்டால் புதிய எதிரிகள் தோன்றுவர். பிறரிடம் அடிபடுவது போலக் கனவு கண்டால் எதிரிகளால் நன்மை கிடைக்கும். சண்டை போடுவதைப் போலக் கனவு கண்டால் தொடங்கிய காரியம் இடையூறு இல்லாமல் முடியும். யாராவது அழுவது போலக் கனவு கண்டால் மகிழ்ச்சியான செய்தி வரும்.

(அடுத்தவாரம் தொடரும்)

## கலர் சைக்காலஜி



கார்ப்பரேட் சாமியார்களின் இருப்பிடங்களும் யோகா மையங்களும் பொதுவாக ஒருசில வண்ணங்களைக் கொண்டிருக்கின்றன. இதன் பின்னால் இருக்கும் உளவியல் என்ன? எந்த குணநலன்களை இவை உணர்த்துகின்றன?

வெண்மை: தூய்மை, உண்மை, தெளிவு, அமைதி, புத்துணர்ச்சி, நம்பிக்கை

பிங்க்: கவர்ச்சி, பெண்மை, காதல், அன்பு

காவி (ஒரேஞ்சு) பக்தி, பாதுகாப்பு, பிடிமானம், அரவணைப்பு

வயலட்: தொலைநோக்குப்பார்வை, தரமான சிந்தனைகள்

கறுப்பு: மனதளவில் பாதுகாப்பு, உள்ளார்ந்த கவர்ச்சி, மறைமுக ஈர்ப்பு

எல்லா சாமியார்களும் ஒரே வர்ணத்தைப் பயன்படுத்துவதில்லை. ஆனால் அனைவருக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. அது எல்லா ஆசிரமங்களும் மரங்கள் சூழ இருப்பது.

நடுநிலைமை, குளிர்ச்சி, இதமான உணர்வு ஆகியவற்றை பச்சை வர்ண்ணம் கொடுக்கும் என்பதை மனதில் கொள்வது நல்லது.

# புருஸ்லீ

## திரைவிமர்சனம்



ஜி.வி.பிரகாஷ் என்றாலே அடல்ட் ஒன்லீ படம் என்ற நிலை வந்துவிட்டது. ஆனால், அவரின் அடுத்தடுத்த படங்கள் இந்த பெயரை கண்டிப்பாக போக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்து மில்லை.

இந்நிலையில் டார்க் ஹியூமர் படங்களின் வரிசையில் இந்த வாரம் ஜி.வி.நடிப்பில் வெளிவந்துள்ள படம் தான் புருஸ்லீ, புருஸ்லீயின் பன்ச் எப்படி இருந்தது? பார்ப்போம்.

ஜி.வி.சின்ன வயதில் இருந்து அனைத்திற்கும் பயந்து வாழ் கிறார், அதற்காக அவருடைய அம்மா தைரியத்திற்காக புருஸ்லீ என்று பெயர் வைக்கின்றார்.



தன் காதலியுடன் சந்தோசமாக இருக்கும் ஜி.வி. முனிஷ் காந்த், மன்சூர் அலிகானை கொல்வதை போட்டோ எடுக்கின்றார். அதை தொடர்ந்து ஜி.வி. தன் காதலி கிரிதியிடம் இதை காட்ட, அவர் எப்படியாவது இதை உலகிற்கு சொல்ல வேண்டும் என்று எண்ணுகிறார்.

கோர்ட், பொலிஸ் வரை முனிஷ்காந்த் ஆட்கள் இருக்க, ஜி.வி.கொரியர்பாயாக எடுத்த போட்டோக்களை கமிஷ்னரிடம் கொடுக்கின்றார்.

ஆனால் கமிஷ்னரே முனிஷ் காந்த் ஆள் தான். பிறகு உண்மை தெரிந்து கிரிதி கடத்தப்பட, ஜி.வி. இந்த கும்பலை எப்படி சமாளித்து தன் காதலியைக் காப்பாற்றினார் என்பதே மீதிக்கதை.

ஜி.வி.பிரகாஷ் இசையமைப்பாளரிலிருந்து தவறாக ஹீரோ முடிவிற்கு வந்துவிட்டாரோ என அவரின் கதை தேர்வு கடந்த சில படங்களாக தெரிகின்றது. அடுத்து வரும் படங்கள் எல்லாம் தரமான படம். அதில் புதிய ஜி.வியை எதிர்ப்பார்க்கலாம். அதுசரி இந்த படத்தில் எப்படி நடித்துள்ளார்? என்று கேட்கிறீர்களா? த்ரிஷா இல்லைனா நயன்தாரா, எனக்கு இன்னொரு பேர் இருக்கு, கடவுள் இருக்கான் குமாரு அதில் என்ன செய்தாரோ அதை தான் இதிலும் செய்துள்ளார்.

ஹீரோயின் கிரிதி கிளாமர் இருக்க வேண்டும் என்பதற்காக இவரும் படத்தில் இருக்கின்றார்.

பாலசரவணன் டார்லிங் அளவிற்கு கூட இல்லையே, என்ன ஆச்சு உங்கள் காமடிக்கும், ஒரே ஆறுதல் மொட்டை ராஜேந் திரன், பல கெட்டப்புகளில் அவர் செய்யும் கலாட்டா ரசிக்க வைக்கின்றது.

டார்க் ஹியூமர் படம் என்று முடிவு செய்துவிட்டார்கள். ஆனால், படத்தின் ஹியூமர் எங்கு என்று தான் தேட வேண்டியுள்ளது. வா மச்சான் சொல்வதெல்லாம் உண்மை பார்ப்போம் அப்படின்னு பாலசரவணன் சொல்றாரு (இதெல்லாம் ஹியூமர்), இப்படி இன்றைய ட்ரண்ட் விஷயங்களை படத்தில் சொன்னால் மட்டும் சிரிப்பு வந்துவிடுமா? பிரஷாந்த் பாண்டிராஜ் அவர்களே. முனிஷ் காந்த், ஆனந்த்ராஜ் தங்கள் போஷனை சிறப்பாக செய் துள்ளனர்.

அதிலும் முனிஷ்காந்த் ஆங்கிலப்படத்தை பார்த்து செய்யும் சேட்டைகள் கலக்கல்.

சமீப காலமாக தான் பெண்களை தரக்குறைவாக பேசும்படி எந்த படமும் வரவில்லை. ஆனால், இதில் படத்திற்கு வரும் பசங்க கைத்தட்ட வேண்டும் என்பதற்காகவே பல இடங்களில் பெண்களுக்கு ரையட்டு விழுகின்றது. அதற்கு விசில் அடித்து கைத் தட்டுகிறார்கள் ஓடியன்ஸும், தவறு சினிமாக்காரங்க மேல் மட்டும் இல்லை.

அதிலும் ஒரு காட்சியில் ஹீரோயின் 'என்னடி இவர் ரேப் கூட பண்ண மாட்றான்' அப்படின்னு சொல்றாங்க, என்ன சார் டயலாக் இதெல்லாம் என்று இயக்குநரை கேட்க தோன்றுகிறது. ஜி.வி.தயவு செய்து இசை பொறுப்பை வேறு யாரிடமாவது கொடுத்துவிடுங்கள். ஒளிப்பதிவு மட்டும் செம்ம கலர்புல்லாக இருக்கின்றது.

மொட்டை ராஜேந்திரன் வரும் காட்சிகள். முனிஷ்காந்த் நடிப்பு. க்ளாப்ஸில் சொன்னதை தவிர்த்து மற்ற அனைத்தும்.

மொத்தத்தில் புருஸ்லீயின் பன்ச் இத்தனை மோசமாக இருப்பது இதில் தான்.

# ஷாருகானை புகைப்படம் எடுக்க வந்தவருக்கு நேர்ந்த பரிதாபம்



பாலிவுட் சினிமாவின் சுப்பர் ஸ்டாரும் நடிகருமான ஷாருக்கானுக்கு ஏராளமான ரசிகர்கள் இருக்கிறார்கள். நடிகை ஆலியா பட் தனது பிறந்த நாளை கொண்டாடினார்.

இதற்காக விருந்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து பல முக்கிய பிரபலங்களையும் அழைத்திருந்தார். இதில் நடிகர் ஷாருக்கானும் கலந்துகொண்டார். அவரை புகைப் படம் எடுக்க ரசிகர்களோடு பல படப்பிடிப்பாளர்கள் வந்திருந்தனர்.

அப்போது ஷாருக்கான் வந்திருந்த கார் ஒரு புகைப்படக்கலைஞரின்கால்மீது ஏற அவர் எலும்புமுறிவுஏற்பட்டுவலியால்துடித்துள்ளார்.

இதை பார்த்த ஷாருக்கான் உடனே கீழே இறங்கி பாதிக்கப்பட்டவரை வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்ததோடு சிகிச்சைக்கான செலவையும் தானே ஏற்றுக்கொண்டார்.

# எமி ஜாக்ஸனுக்கு ஏற்பட்ட விபத்து சிகிச்சையில் உள்ளாரா?



எமி ஜாக்ஸன் தமிழ், தெலுங்கு மட்டுமின்றி ஹிந்தி படங்களிலும் பிஸியாக நடித்து வருகின்றார். இவர் தற்போது ரஜினி காந்த் நடித்து வரும் 2.0 படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித் துள்ளார்.

சமீபத்தில் ஒரு விளம்பரப்படம் எடுக்கையில் எமி ஜாக்ஸன் வேகமாக ஓடுவது போல் காட்சிகள் எடுக்கப்பட்டதாம்.

அப்போது தெரியாமல் கால் தடுக்கி கீழே விழுந்ததில், காலில் அடிப்பட்டுள்ளது, பிறகு சில மணி நேரம் படப்பிடிப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது எமி சிகிச்சையில் இருக்கின்றார் என கூறப்படுகின்றது, 2.0 படத்தில் இவருக்கான காட்சிகள் அனைத்தும் எடுத்து முடிக்கப்பட்டு விட்டன.



# நூறு கோடி அபராதம் கட்டப் போவது யார்?

"என் அத்தைக்குச் சொத்துக் குவிப்பு வழக்கில் நீதிமன்றம் விதித்த 100 கோடி ரூபாய் அபராதத்தை நான் கட்டுவேன்" என்று ஜெயலலிதாவின் அண்ணன் மகன் தீபக் சொல்லிக் கொண்டிருக்கிறார். "ஜெயலலிதா இறந்துவிட்டதால், அவர் தண்டனையில் இருந்து விலக்குப் பெறுகிறார் என்று உச்ச நீதிமன்றமே சொல்லிவிட்டது! அதனால், அந்த அபராதத் தொகையை அவர் செலுத்தத் தேவையில்லை" என்கின்றனர் சிலர். இதில் எது உண்மை? 100 கோடி ரூபாய் அபராதம் செலுத்த வேண்டுமா, அதை யார் செலுத்த வேண்டும், யாரிடம் செலுத்த வேண்டும், எவ்வளவு நாடகளுக்குள் செலுத்த வேண்டும், அதற்கான நடவடிக்கைகள் தொடங்கி விட்டனவா? சொத்துகளை எப்போது பறிமுதல் செய்வார் கள்?

ரூ.100 கோடியே ஒரு இலட்சம் அபராதம்!

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை நான்கு ஆண்டுகள் அல்ல. நான்கு ஆண்டுகள் ஆறு மாதங்கள். அதுபோல, ஜெயலலிதாவுக்கு விதிக்கப்பட்ட அபராதம் 100 கோடி ரூபாய் அல்ல. ரூ.100 கோடியே ஒரு இலட்சம்.

பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா தனது தீர்ப்பில், "ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய நான்கு பேரும் குற்றவாளிகள். அதிகார துஷ்பிரயோகம் செய்து வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்த குற்றத்துக்காக, முதல் குற்றவாளியான ஜெயலலிதாவுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 100 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்படுகிறது. 100 கோடி ரூபாய் அபராதத்தைக் கட்டத் தவறினால், ஜெயலலிதா மேலும் ஓராண்டு சிறைத்தண்டனையை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும். மேலும், கூட்டுச் சதியில் ஈடுபட்ட குற்றத்துக்காக ஒரு இலட்ச ரூபாய் அபராதமும் ஆறு மாத சிறைத் தண்டனையும் வழங் கப்படுகிறது. இந்த அபரா தத்தைச் செலுத்தத் தவறினால் ஆறு மாதங்கள் கூடுதலாகச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும்.

சசிகலா, சுதாகரன், இளவரசி உள்ளிட்ட மற்ற மூன்று பேருக்கும் தலா நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையும், தலா 10 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்படுகிறது. அபராதத்தைச் செலுத்தத் தவறினால் ஓர் ஆண்டு கூடுதலாகச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். அதுபோல, இந்த மூன்று பேருக்கும் கூட்டுச்சதியில் ஈடுபட்ட குற்றத்துக்காகத் தனியாக 10 ஆயிரம் ரூபாய் அபராதமும், ஆறு மாதங்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்படுகிறது. இந்த அபராதத்தைச் செலுத்தத் தவறினால், ஒரு மாத சிறைத் தண்டனையை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும்" என்று தான் குறிப்பிட்டுள்ளார். அதன்படி பார்த்தால், ஜெயலலிதாவுக்கு நான்கு ஆண்டுகள் ஆறுமாதங்கள் சிறைத் தண்டனையும் 100 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் அபராதமும் நீதிபதி குன்ஹா விதித்துள்ளார். அதுபோல சசிகலா, சுதாகரன், இளவரசி உள்ளிட்டோருக்கு நான்கு ஆண்டுகள் ஆறு மாதங்கள் சிறையும் 10 கோடியே 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்துள்ளார்.

இதில் இன்னொரு விடயத்தையும் புரிந்துகொள்ள வேண்டும். 'வருமானத்துக்கு அதிகமாகச் சேர்த்தது' என நீதிமன்றம் பறிமுதல் செய்தும், முடக்கியும் வைத்திருக்கும், அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் அனைத்தும் அரசாங்கத்தின் கணக்கில் சேர்க்கப்பட்டுவிடும். நீதிமன்றம் விதித்திருக்கும் அபராதத் தொகை, இதிலிருந்து எடுக்கப்பட மாட்டாது. குற்றவாளிகள் நால்வரும், தாங்கள் நியாய மாகச் சம்பாதித்த பணத்திலிருந்தே இந்த அபராதத்தொகையைக் கட்ட வேண்டும். இதற்கும் தீர்ப்பில் தெளிவாக விளக்கம் கொடுத்திருக்கிறார் குன்ஹா.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு என்ன?

பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் விதித்த தண்டனையை எதிர்த்து, ஜெயலலிதா, சசிகலா தரப்பு கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். அதை விசாரித்த கர்நாடக உயர் நீதிமன்றம், நான்கு பேரையும் வழக்கில் இருந்து விடுதலை செய்தது. இதை எதிர்த்து கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. அந்த வழக்கை விசாரித்த உச்ச நீதி மன்ற நீதிபதிகள் அமித்தவராய், பினாகி சந்திர கோஷ் அடங்கிய அமர்வு, "ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேரும் குற்றவாளிகள் தான். அதனால், கர்நாடக உயர் நீதிமன்றம் குற்றவாளிகளுக்கு அளித்த விடுதலையை இரத்து செய்து, பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் விதித்த தண்டனையை உறுதிசெய்கிறோம்" என்று தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பில், 'ஜெயலலிதாதான் மிகப் பிரதானமான குற்றவாளி. ஆனால், வழக்கு நிலுவையில் இருந்த காலத்தில் அவர் இறந்து விட்டதால், அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்ற முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது' என்று தெரிவித்தது.

தண்டனையை நிறைவேற்ற முடியாது எனும்போது அபராதமும் கட்டத் தேவையில்லையா?"

"உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் இரண்டு பகுதிகளை நன்றாகப் புரிந்துகொள்ள வேண் டும்.

ஒன்று, உச்ச நீதிமன்றம் ஜெயலலிதாவுக்கு தண்டனை யில் இருந்து விலக்கு அளிக்க வில்லை. 'ஜெயலலிதா இறந்து விட்டதால், அவருக்கு தண்ட னையை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது' என்று தான் குறிப்பிட்டுள்ளது. அதனால், ஜெயலலிதாவுக்கான தண்டனைகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன என்றோ, அவை எல்லாம் இரத்தாகிவிட்டன என்றோ அர்த்தம் இல்லை. மேலும், குற்றவாளிகளுக்கு சிறப்பு நீதிமன்றம் அளித்த தண்டனையை எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே உறுதி செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.





இரண்டாவதாக, அபராதத்தைப் பொறுத்த வரை உச்ச நீதிமன்றம் எதுவும் சொல்லவில்லை. ஆனால், பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை அப்படியே உறுதிசெய்துள்ளது. அதனால், அந்தத் தீர்ப்பு அப்படியே அமுல்படுத்தப்படும். பெங்களூர் சிறப்பு நீதிமன்றம், தனது தீர்ப்பை சிறைத் தண்டனை மற்றும் அபராதத்தை மட்டும் குறிப்பிட்டுவிட்டு முடித்து விடவில்லை. மாறாக, அபராதத் தைக் கண்டிப்பாக வசூலித்தே ஆக வேண்டும் என்றும் உத்தர விட்டுள்ளது. அத்துடன் நிற்காமல், அந்த அபராதத்தை எப்படி வசூலிக்க வேண்டும் என்ற வழி முறைகளையும் விளக்கி உள் ளது. 'அபராதம் செலுத்தலாமா? அல்லது, செலுத்தாமல் கூடுத லாக சிறைத் தண்டனை அனுப வித்துக் கொள்ளலாமா?' என்று யோசிப்பதற்கான வாய்ப்பே குற்ற வாளிகளுக்கு அளிக்கப்படவில்லை.

நீதிபதி குன்ஹா தனது தீர்ப்பில், 'குற்றவாளிகளின் வங்கிக் கணக்குகளில் உள்ள நிரந்தர வைப்புத் தொகை, சேமிப்புக் கணக்குகளில் உள்ள தொகை முழுவதையும் அபராதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தத் தொகையில் அபராதம் ஈடாகவில்லை என்றால், வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள தங்கம், வைரம், வெள்ளி நகைகளை ரிசர்வ் வங்கி அல்லது ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவுக்கு விற்றோ, அல்லது பொது ஏலத்தில் விற்றோ பணத்தை எடுத் துக் கொள்ள வேண்டும். வழக் கில் இணைக்கப்பட்டுள்ள நிறு வனங்களான ராம்ராஜ் அக்ரோ மில்ஸ், சிக்னோரா பிசினஸ் என்டர்பிரைசஸ், லெக்ஸ் பிராப்பர்டி டெவலப்மென்ட்ஸ், மெடோவ் அக்ரோ பார்ம்ஸ், ரிவர்வே அக்ரோ புராடக்ட்ஸ் மற்றும் இந்தோ தோஹா கெமிக் கல்ஸ் அண்டு ஃபார்ம சூட்டிகல்ஸ் நிறுவனங்களின் பெயர்களில் உள்ள அசையாச் சொத்துக்கள் அனைத்தையும் அரசாங்கம் பறிமுதல் செய்து கொள்ள வேண் டும். வசூலிக் கப்பட்ட அபராதத் தொகையில் வழக்குச் செலவுக்காக கர்நாடக் அரசுக்கு ஐந்து கோடி ரூபாயை தமிழக அரசு கொடுக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இது அப்படியே நிறைவேற்றப்படும். இப்போது சசிகலா, சுதாகரன், இளவரசிகூட தங்கள் கையில் இருந்து அபராதம் செலுத்தத் தேவையில்லை. அதுபோல, ஜெயலலிதாவின் அண்ணன் மகன் தீபக்கும் செலுத்தத் தேவையில்லை. அபராதத்தை அரசாங்கமே எடுத்துக்கொள்ளும். ஒரு வேளை தீபக்கோ, சசிகலாவோ தங்கள் கையில் இருந்து அபராதம் செலுத்தினாலும், அதனால் எந்தப் பயனும் இல்லை.

அதைக் கழித்துக் கொண்டு வழக்கில் இணைக்கப்பட்டுள்ள எந்தச் சொத்துகளும் அவர்களுக்குத் திரும்பக் கிடைக்காது. ஏனென் றால் அபராதத்துக்குப் போக மீதி உள்ள சொத்துக்களை, சம்பந் தப்பட்டவர்களிடம் திரும்பக் கொடுக்க வேண்டும் என்று நீதிபதி குன்ஹா சொல்லவில்லை. அபராதம் போக மீதி உள்ளவற்றை அரசாங்கம் பறிமுதல் செய்ய வேண்டும் என்று தான் சொல்லியிருக்கிறார்."

ஜூனியர் விகடன்

facebook

# என் பிள்ளைகள்

ஒரு தந்தைக்கு 4 குழந்தைகள். அவருக்கு நீண்ட ஆயுள் வேண்டுமென்று ஒரு குகையில் 100 ஆண்டுகள் தவம்புரிய வேண்டும். ஆதலால் தன் பிள்ளைகளை அப்படியே விட்டுச் செல்ல நேர்ந்தது, ஆனால்அவர்திரும்பிவரும்வரை வீட்டினை அப்படியே பார்த்துக் கொள்ளஅவர்களுக்கு எந்தெந்த பொறுப்புகளைக் கொடுப்பது என்று ஒரு சிறிய குழப்பம்.

பின் அவர்களின் குணாதியசங்களை வைத்து அந்த நால்வரையும் இந்த வீட்டினை தான் வரும் வரை எவ்வாறு காப்பது என்பது தீர்மானித்து தன் பிள்ளைகளுக்கு பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுத்தார். பின்வருமாறு.

நால்வரில் ஒருவனுக்கு அறிவோ கொஞ்சம் அதிகம் மற்ற 3 பேரை விட. அதனால் அவனுக்கு நல்ல கல்வி கிடைத்திட வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தார், அவனோ தனக்குக் கிடைத்த வாய்ப்பினை பயன்படுத்தி மிகப் பெரும் அறிவுக்கூர்மை மிக்கவனாய் வாழ்ந்து வந்தான்.

அவனுடைய தந்தை அவனை அந்த வீட்டின் அறிவு சார்ந்த வேலைகளைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லி விட்டார்.

பின் இன்னொரு மகன் மிகப்பெரிய வீரன். அவனுக்கு கல்வி அந்த அளவுக்கு இல்லை, அவனோ தன் வீரத்தை மட்டும் நம்பி இருந்ததால் அவனுக்கு அவர் தன் வீட்டைப் பாதுகாக்கும் பொறுப்பினை கொடுத்தார்.

அடுத்து இன்னொரு மகனுக்கு அவனுடைய வியாபார திறமையினால் அவனை அந்த வீட்டின் பொருளாதார முடிவுகளை எடுக்கும் பொறுப்பில் விட்டுவிட்டார்.

அதற்கடுத்து இன்னொரு மகன் நன்றாக வேலை செய்வான் வயல்வெளியிலும் மற்ற இடங்களிலும். அவனுக்கு வீட்டிற்கு தேவையான உணவுப் பொருட்களை தயார் படுத்தும் வேலையையும் வீட்டின் பராமரிப்பு பணியையும் பார்த்துக் கொள்ளும்படி பணித்து விட்டுச் சென்றார் அவர்களின் தந்தை.

250 ஆண்டுகள் கழித்து தன் பிள்ளைகளின் தலைமுறைகளை காண ஆசையாய் தன்னுடைய வீட்டிற்கு வருகிறார் தன் வாழ்வுப் பயனை அடைந்ததாய் நினைத்து.

அறிவில் சிறந்தவன் மீதி உள்ள மூவரையும் தன் அறிவுக்கூர்மையால் அவர்க்ள் இவனை விட தாழ்ந்தவர்கள் என்று சொல்லி அவர்களை தனக்குக் கீழ் தன் கட்டுப்பாட்டில் வைக்க, வீரத்தில் சிறந்தவனோ தன்னை அடுத்த நிலையில் நிலை நிறுத்தி தனக்கென ஒரு வீட்டினையும் ஏற்படுத்தி அவனோடு கூட்டுச் சேர்ந்து தனக்குக் கீழ் உள்ள இருவரையும் கட்டுப்படுத்தி அடிமைப்படுத்தி அவர்களுடைய உழைப்பில் வாழ்ந்து வந்தான் தலைமுறை தலைமுறையாய்.



இவைகளைக் கண்ட அந்த தந்தை தன் பிள்ளைகளுக்கு தான் இழைத்தது எவ்வளவு பெரிய கொடுமை என்று புரிந்தது.

தன் நான்கு பிள்ளைகளின் தலைமுறைகளும் இவ்வாறு ஏற்றத் தாழ்வுகளோடு வளர தானே காரணமாய் ஆனதை நினைத்து தான் தவிமிருந்து பெற்ற நீண்ட ஆயுளை முடித்துக்கொண்டு தன் கண்களை மூடிக்கொண்டார்.


இருப்பினும் அந்த தந்தை மீண்டும் உயிர் பெற்று தன் பிள்ளைகளில் ஒருவனான உழைப்பாளியின் தலைமுறையில் பிறந்து தன்னால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வினை நீக்கிட மிகப்பெரும் போராட்டங்கள் மூலம் தன் பிள்ளைகள் அனைவருக்கும் அனைத்து உரிமைகளும் சரிவர கிடைக்கப் போராடி போராடி தன் சந்ததிகளிடமே தோற்றுக் கொண்டே இருந்தான், ஆனாலும் அவன் தன் முயற்சியினை கைவிடாது தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்கிறான் இன்று வரை அந்த மாற்றத்தை நோக்கி பயணித்துக்கொண்டே.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1018

### சுதர்சன்




### தாரணி




### தனஞ்சயன்



### பிரணவன்



### சரவணபவன் கிருபவன்



### தாட்சாயினி



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 76

# கதாநாயகன்கள் ஆகும் கனவில் வில்லன்களாக மாறிய...



விட்டில் பூச்சிகள் போல புகைத்துக்கொண்டு இருக்கும் புகையிலையால் கவரப்பட்டு அதனிடம்சரணாகதியாகிபோதை வஸ்துகளுக்கு அடிமையாகி மடிந்துபோகும்மக்கள்கூட்டத்தை என்ன செய்யப்போகின்றோம்?

புகையிலையானது ஆபத்தான உயிர்க்கொல்லி, மனிதனின் ஆழுமையையும், ஆரோக்கியத்தையும் ஆட்டம் காணச் செய்து அழித்துவிடும்ஒரு ஆயுதம் என்று எல்லாம் தெரிந்திருந்தும் ஆண்டுதோறும்60 லட்சம்மக்கள் உலகளாவிய அளவில் புகையிலையின் தாக்கத்தால் மரணித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது ஒரு வேதனையானஉண்மை.

50க்கும் அதிகமான ஆபத்தான இரசாயன பொருட்கள் கொண்டுள்ள இந்த புகையிலையானது பாரிசவாதம், மரடைப்பு, நுரையீரல்பழுது, பலவகையான உடல் புற்றுநோய்கள், உயர் குருதி அமுக்கம், மனக்குழப்பங்கள், ஆண்மைக்குறைவு, பல தொற்றுநோய்கள் போன்ற பல சுகாதாரப் பிரச்சினைகளுக்கு வித்திட்டு தாம் எரிவது போலவே மனிதனின் சுகத்தையும் எரித்து சாம்பலாக்கும் ஒரு பொது எதிரி என்பது நாம் அனைவரும் அறிந்த விடயம்.

குடிக்கும் ஒவ்வொரு சிகரெட்டுக்களும் மனிதனின் வாழ்நாளில் 12 நிமிடங்கள் குடித்து விடுகின்றன என கணிக்கப்படுகிறது. புகைத்தலுக்கும்போதைப் பொருட்கள் மற்றும் குடிவகைகளுக்கும் அடிமையாகி வருகின்றவர்களின் எண்ணிக்கை எமது பிரதேசங்களில் வேகமாக அதிகரித்து வருவதற்கு என்ன காரணம்?

ஒரு காலத்தில் கல்வியிலும் கலை, கலாசாரத்திலும் நற்பண்புகளிலும் வீரத்திலும் பெயர் பெற்றிருந்த எமத சமூகம் ஒரு பிழையான திசையை நோக்கி செல்ல தலைப்படுகிறதோ என்ற ஏக்கம் எம் மனங்களிலே எழுந்திருக்கின்றது.

மிருகங்களிலும் பார்க்க கேவலமான விடயங்களையும் செய்யத்துணியும் மனிதர்கள் கூட்டம் எமது சமூகத்திலிருந்தும் உதித்திருக்கிறார்கள் என்ற உண்மை எம் அனைவருக்கும் தலை குனிவை ஏற்படுத்தி நிற்கிறது.

மக்கள் இவ்வாறான தீய பழக்க வழக்கங்களிற்கு அடிமையாகி போவதற்கான அடிப்படை காரணங்கள் என்ன? இவ்வாறான மனிதர்கள் எதிர்காலத்தில் தோன்றாமல் இருக்க என்ன செய்யலாம்? புகைத்தலுக்கும், போதைப் பொருட் பாவனைக்கும், குடிவகைகளுக்கும் அடிமையாகிப் போகும் சந்தர்ப்பங்கள் வேண்டுமென்றே தோற்றிவிக்கப்படுகின்றனவா? இவ்வாறான நிலைமைகளை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றோம்?

புகையிலை பயிர்ச்செய்கை, சிகரெட் உற்பத்தி, விற்ப்பனை போன்றவற்றின் மூலம் கிடைக்கும் வருவாயில் பல குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அது பல கம்பனிகளுக்கும் அரசாங்கங்களுக்கும்பெரும்வருவாயை ஈட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. நாம் நோயை விலை கொடுத்து வாங்குவதற்கு ஆர்வமாக இருக்கின்றோம். மனித உயிர்களின் மீதும் ஆரோக்கியத்தின் மீதும் இந்த வியாபாரம் தொடர்கின்றது. இதனைமுடிவுக்குகொண்டு வர எங்கே தொடங்கி எங்கே முடிப்பது?

திரைப்படங்களில் குடித்து, புகைத்து இன்னும் பல வில்லத்தனங்கள் செய்பவர்கள் தான் கதாநாயகர்களாக சித்திரிக்கப்படுகின்றார்கள். இந்த திரைப்படங்களை பார்க்கும் சின்னஞ்சிறுசுகளின் மனத்திலே இவ்வாறான செயல்கள் செய்வது ஒரு பெருமைக்குரிய வீரச் செயல் என்ற தப்பான அபிப்பிராயம் ஆழமாகப் பதிந்துவிடுகின்றது. இந்தமாயையை நம்பி எமது இளம் சந்ததியினர் தாம் கதாநாயகர்களாக நினைத்து வில்லன்களாக மாறி வில்லங்க விளைவுகளுக்கு ஆளாகி விடுகின்றனர். இத்தகைய சிக்கலான நிலைமையில் இருந்து மீட்சிபெற நாம்ஒவ்வொருவரும்என்ன செய்யலாம் என்று சிந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

சிறுவர்களை சரியான முறையில் வழி நடத்துவதற்கு பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் பங்களிப்பு முக்கியமாகின்றது. மக்களை ஆரோக்கியமான திசையில் வழி நடத்த சமூக பெரியவர்களின் பங்களிப்பு அதிகமாக தேவைப்படுகின்றது. மனிதர்கள் இறை நம்பிக்கை உள்ளவர்களாகவும் சமூக பொறுப்புள்ளவர்களாகவும் வளர்த்தெடுக்க சமூக பெரியவர்களின் பெரு முயற்சி தேவையாகி நிற்கின்றது.

தீய விடயங்களுக்கு மக்கள் அடிமையாகாமல்தடுக்கும்மருத்துவதுறையினரின் தெடர்ச்சியான விழிப்புணர்வு நிகழ்வுகள் முக்கிய தேவையாக விளங்குகின்றன.

மக்களின் மன நிலையில் மாற்றம் ஏற்பட ஊடகத்துறையினரின் பங்களிப்பு முக்கியம் பெறுகின்றது. அரச மட்டத்திலும், நிர்வாகத்துறை, காவற்றுறை மட்டத்திலும், சில தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய தேவை இருக்கிறது. கலைத் துறையினர் சமூக சீரழிவு திரைப் படங்கள், நாடகங்களுக்குமாற்றீடாகஆரோக்கியமான கலைப் படைப்புகளை உருவாக்க வேண்டும்.

எனவே அனைத்து தரப்பினரதும் ஒன்றுபட்ட கூட்டு முயற்சியின் மூலம் நாம் ஆரோக்கியமான திசையை நோக்கி நகர முடியும்.

Dr.சி.சிவசுதன்
பொது வைத்திய நிபுணர்.

# நாளொன்றுக்கு 2.5 லீற்றர் கொதித்து ஆறிய நீர் பருகுங்கள்



கடினமான தண்ணீர் (Hard water) பருகுபவர்களுக்கு சிறுநீரகக் கல் (Kidney stone) ஏற்படலாம். இது தொடர்பாக பூரணமான தகவல்கள் இதுவரையில் இல்லை. ஆனால் கொதித்து ஆறிய தண்ணீரை பருகினால் பிரச்சினை இல்லை. நாளாந்தம் ஒருவர் 1.5லீற்றர் முதல் 2.5லீற்றர் வரையிலான கொதித்தாறிய தண்ணீரை பருகி வந்தால் அவருக்கு சிறுநீரகக்கல் உருவாக வாய்ப்பே இல்லை. பெண்கள் வெளியிடங்களுக்குச் செல்லும் போது சிறுநீர் கழிப்பதில் உள்ள சிரமம் காரணமாக தண்ணீர் குடிப்பதை குறைத்து விடுகிறார்கள். இதனால் சிறுநீர் செறிவாக்கப்பட்ட (Concentrate) அதன் காரணமாக சிறுநீரகக்கல் உருவாக வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் எவருக்காவது சிறுநீரகக்கல் வந்தால் ஏனைய அங்கத்தவர்கள் அது குறித்து கவனம் செலுத்துவது அவசியம்.

சில சிறுநீரகப் பிரச்சினைகள் பரம்பரையாக ஏற்படுகின்றன. உதாரணமாக Poly cystic kidney disease என்ற நோய் நிலையைக் கூறலாம். இப்படியானவர்களின் சிறுநீரக்ம் பெரிதாக இருக்கும். உட் பகுதி நீர் சேர்த்து சிறு குமிழ்கள் போல் காணப்படும்.

இது போன்ற சில சிறுநீரகப் பிரச்சினைகள் குடும்பத்தில் எவருக்காவது இருப்பின் ஏனையவர்களுக்கும் இப்பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். எனவே அவர்கள் வைத்தியசாலைக்கு சென்று தமது சிறுநீரகத்தை ஸ்கான் மூலம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். 20 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பின் 12 மாதங்களுக்கு ஒருதடவைசிறுநீரகத்தைபரிசோதித்துக் கொள்வது நல்லது.

Dr.ரி.பேரானந்தராசா
பொது வைத்திய நிபுணர்.



மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.